



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:214 | 18-02-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

18.02.2026 மாசி 6
புதன் கிழமை

சூரிய உதயம் 6.33

**திதி:**
இன்று மாலை 6.06 வரை பிரதமை பின்பு துவிதியை.

**நட்சத்திரம்:**
இன்று இரவு 10.23 வரை சதயம் பின்பு பூரட்டாதி.

**யோகம் :**
இன்று அதிகாலை 1.30 வரை பரிகம் பின்பு இரவு 11.53 வரை சிவம் பின்பு சித்தம்

**கரணம் :**
இன்று காலை 6.18 வரை கிம்ஸ்துக்கினம் பின்பு மாலை 6.06 வரை பவம் பின்பு பாலவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.32 வரை யோகம் சரியில்லை பின்பு இரவு 10.23 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம்**
இன்று இரவு 10.23 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

**நல்ல நேரம்**
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
பிற்பகல் 12.00 – 1.30.

**எமகண்டம்**
காலை 7.30 – 9.00.

**குளிகை**
காலை 10.30 – 12.00.

இன்று சந்திர தரிசனம்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# வருவாய்ப் பற்றாக்குறை ரூ.48,696.32 கோடி, கடன் சுமை ரூ.10.71 லட்சம் கோடி

## தமிழக இடைக்கால பட்ஜெட்டில் தகவல்

சென்னை, பிப்.18:

"2026-27 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 48,696.32 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2026-27 ஆம் ஆண்டில் மாநில அரசு 178,308.05 கோடி ரூபாய் அளவிற்கு மொத்தக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. 60,418,42 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்தும். இதன் விளைவாக, 31.03.2027 அன்று நிலுவையில் உள்ள கடன் 10,71,770.34 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது" என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது குறித்து இடைக்கால பட்ஜெட்டில் வெளியான அறிவிப்பின் விவரம் வருமாறு: 2026-27 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 48,696.32 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வரி வசூலை மேம்படுத்துதல், வரி வசூல் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, வருவாய்ப் பற்றாக்குறை 2027-28 ஆம் ஆண்டில் 42964.61 கோடி ரூபாயாக குறையும் எனவும், அதன் தொடர்ச்சியாக 2028-29 ஆம் ஆண்டில் 35,115.33 கோடி ரூபாயாக குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது கூடுதல் மூலதனச் செலவினத்திற்கு வழிவகை செய்யும். 2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் விகிதம் 200 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, பொருளாதாரம் மற்றும் நிதிநிலையில் பல்வேறு சவால்களை சந்தித்து வரும் நிலையிலும், நிதிநிலையை மேம்படுத்துவதில் அரசிற்கு உள்ள உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது.

2027-28 மற்றும் 2028-29 ஆம் ஆண்டுகளில், இது முறையே, 288 சதவீதம் மற்றும் 230 சதவீதமாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இது, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிற்குள் உள்ளது.

ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் பெறுதலும் திரும்பச் செலுத்துதலும் மதிப்பிடப்பட்டுள்ளன. 2026-27 ஆம் ஆண்டில் மாநில அரசு 178,308.05 கோடி ரூபாய் அளவிற்கு மொத்தக் கடன் பெற திட்டமிட்டுள்ளது.



மேலும், 60,418,42 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்தும்.

இதன் விளைவாக, 31.03.2027 அன்று நிலுவையில் உள்ள கடன் 10,71,770.34 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. 2020-27 ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் இது 20:35 சதவீதம் ஆகும். எனினும், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஒன்றிய அரசின் திட்டமாக ஒப்பளிக்கப்பட்ட பின்னர் ஒன்றிய அரசின் கணக்குகளில் இடம்பெறவேண்டிய 9,522.65 கோடி ரூபாயும் மொத்த நிலுவைக் கடன்களில் உள்ளடங்கும். இக்கடன் தொகையை தவிர்த்து மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள மொத்த கடன் விகிதம் 20:12 ஆகவும், மேலும், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான கடன் தவிர்த்து மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள மொத்த கடன், 2027-28 ஆம் ஆண்டில் 25.30 சதவீதமாகவும், 2028-29 ஆம் ஆண்டில் 25.43 சதவீதமாகவும் மேலும் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வாறு, சீரிய நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திறனை தக்கவைக்க அரசு திட்டமிட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. நாடுபோற்றும் நல்ல திட்டங்களை தந்தவர் முதலமைச்சர்

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடையும் வகையில் 5 ஆண்டுகளில் சிறந்த திட்டங்கள் நிறைவேற்றம்.

தமிழ்நாட்டில் வறுமையை ஒழிக்கும் இறுதிப்போரை தொடங்கி உள்ளோம்.

பன்னாட்டுத் தனித் தமிழ் கருத்தரங்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

கீழடி, பொருநை அருங்காட்சியகங்கள் திறக்கப்பட்டு மக்களின் வரவேற்பை பெற்றுள்ளன.

புதிய அருங்காட்சியகங்கள் அமைப்பதற்காக ரூ.285 கோடி ஒதுக்கீடு.

அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்ய நீர் வளம் பெருக்கி உணவு உற்பத்தியில் வரலாறு காணாத சாதனையை செய்துள்ளோம்.

உலகை வெல்லும் இளைஞர்களை உருவாக்கிட நாம் வடிவமைத்த திட்டங்கள் அனைத்தும் வெற்றி.

மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை உள்ளிட்ட சவால்களுடன் பயணம்.

தமிழக அரசின் திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன.

வரவு செலவு திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதை கலைஞர் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

தமிழ்தாய் வாழ்த்தை மாநில பாடலமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு ரூ.630 கோடியில் 10,469 வீடுகள்.

தமிழக அரசின் முத்திரை திட்டங்களில் முதன்மையானது மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் வங்கிக் கணக்கில் 3 மாத தொகை ரூ.3000, கோடை கால சிறப்புத் தொகை ரூ.2000 என ரூ.5000 வரவு வைக்கப்பட்டது.

விடியல் பயணம் திட்டம் மூலம் 881 கோடி முறை மகளிர் பாதுகாப்பாக பயணம் மேற்கொண்டுள்ளனர்.

கைம்பெண்களின் கண்ணிய வாழ்வை உறுதி செய்திட நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு லட்சத்திற்கு 35 என்ற அளவில் உள்ளது.

பெண் ஓதுவார் நியமனம் தமிழக அரசின் மகத்தான சாதனை.

6 லட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.40 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
19 தோழி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் தமிழ்நாட்டு பெண்கள்.

ஏழை எளிய தாய்மார்களின் துயரை துடைக்கும் வகையில் காலை சிற்றுண்டித் திட்டம். ரூ.1884 கோடியில் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் நடைமுறையில் உள்ளது.

25 இடங்களில் மூத்த குடிமைக்களுக்காக அன்பு சோலை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பெண்கள் பெயரில் சொத்துக்களை பதிவு செய்வதற்கான கட்டணத்தில் 1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

அரசு வேலைவாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இட ஒதுக்கீடு, பணி உயர்விலும் இட ஒதுக்கீடு.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ரூ.1,471 கோடி ஒதுக்கீடு.

**செய்த நிலையில் வேளாண் பட்ஜெட்டை எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.**

58 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

உழவர்களுக்கு 53 லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

10,588 சிறு பாசன குளம், ஊரணி, கால்வாய் தூர்வாரி மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல் ஜெயராமன் திட்டத்தில் 900 மெ.டன் பாரம்பரிய நெல் விதைகள் விநியோகம்.

70 ஆயிரம் விவசாயிகளுக்கு நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மரங்களை வெட்டி எடுத்துச்செல்லும் விதிகளை தளர்த்தும் வகையில் புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்படும்.

2025-26-ம் ஆண்டில் 12.45 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் இளைஞர்களை தொழில் முனைவோராக்க ரூ.4.56 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளன.

எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க ரூ.229 கோடி ஒதுக்கீடு.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கம்பு சாகுபடி பரப்பளவு 1.33 லட்சம் ஏக்கராக அதிகரிப்பு.

தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மூலம் 12.84 லட்சம் விவசாயிகள் ரூ.175 கோடி நிதி பெற்றுள்ளனர்.

துவரை சாகுபடி விரிவாகக் இயக்கம் மூலம் ரூ.66 கோடியில் 2.55 லட்சம் ஏக்கரில் சாகுபடி.

496 பட்டதாரி இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

4150 சூரிய சக்மி பம்பு செட்கள் வாங்க 83 கோடி ரூபாய் மானியம்

1320 வேளாண் இயந்திர வாடகை நிலையங்கள் அமைப்பு

## புதிய திட்டங்கள் இல்லாதது ஏன்? தமிழக அரசு விளக்கம்



சென்னை, பிப்.18:

இடைக்கால பட்ஜெட்டில் புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாதது ஏன்? என்பது பற்றி தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கயை இன்று சட்டமன்றப் பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் வேளாண்மை, உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

பொதுவாக, இடைக்கால நிதிநிலை அறிக்ககளன்பது அரசின் சாதனைகளை தெரிவிக்கும் அறிக்கையாக இருக்கும். மேலும், பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் இடைக்கால நிதிக்கு ஒப்புதல் கோரும் அறிக்கையாகவும் இருக்கும். இதுதான் இதுநாள் வரையில் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபாகும். எனவே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில், புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகள் வெளியிடுவது மரபு இல்லை என்று அரசு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் பிரதமர் மோடியுடன் சந்திப்பு

மும்பை, பிப்.18:

தலைநகர் டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் ஏஐ உச்சி மாநாடு (செயற்கைநுண்ணறிவு) நேற்று தொடங்கியது. இந்த ஏஐ உச்சி மாநாடு வரும் 20ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த உச்சி மாநாட்டை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த உச்சி மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசநாயகா,பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ஐக்கிய அரபு அமீரகம் சார்பில் அபுதாபி இளவரசர் ஷேக் காலித் பின் முகமது பின் ஜயீத் அல் நாஹியான், சுலோவேக்கியா நாட்டின் ஜனாதிபதி பீட்டர் பெல்லேகிரினி உள்பட 20 நாடுகளை சேர்ந்த தலைவர்கள் உள்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிலையில், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் இன்று வந்துள்ளார். அவர் மும்பையில் பிரதமர் மோடியை சந்தித்தார். மும்பையில் உள்ள கவர்னர் மாளிகையில் பிரதமர் மோடி - இம்மானுவேல் மேக்ரான் சந்திப்பு நடைபெற்றது. இதனை தொடர்ந்து



இரு நாட்டு தலைவர்களும் பல்வேறு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து, இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதனை தொடர்ந்து மும்பை தாஜ்மஹால் பேலஸ் ஓட்டலில் நடைபெற்று வரும் இந்தியா - பிரான்ஸ் கூட்டமைப்பு கூட்டத்தில் இரு நாட்டு தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.

மும்பை பயணத்தை நிறைவு செய்யும் பிரான்ஸ் அதிபர் மேக்ரான் நாளை டெல்லி செல்கிறார். அங்கு நடைபெறும் ஏஐ உச்சி மாநாட்டில் அவர் கலந்துகொள்ள உள்ளார்.






## திருக்குறள் குறள்-534

அச்ச முடையார்க் கரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு



உள்ளத்தில் அச்சம் உடையவர்க்குப் புறத்திலே அரண் இருந்து பயன் இல்லை, அதுபோல் மறதி உடையவர்க்கு நல்ல நிலை வாய்த்தும் பயன் இல்லை.



## சிந்திக்க ஒரு நொடி



அனுபவம் என்பது எதை எப்போது செய்ய கூடாது என்பதல்ல.எதை எப்போது செய்ய வேண்டும் என்பதே

**ராஜகோபாலன் .J**
பெங்களூரு

# வேலூரில் மயான கொள்ளை திருவிழா: திரளான பக்தர்கள் பங்கேற்பு! கழிஞ்சூர் தேர் பாதியில் கவிழ்ந்து விபத்து: 7 பேர் படுகாயம்!


**வேலூர், பிப். 18:**

வேலூரில் நடைபெறும் திருவிழாக்களில் மயான கொள்ளை திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது ஆகும். இந்த மயான கொள்ளை திருவிழா கடந்த 150 ஆண்டுகளாக வெகு விமரிசையாக நடந்து வருகிறது. காட்பாடி அடுத்த விருதம்பட்டு பகுதியில் பாலாறு உள்ளது.

இந்த பாலாற்றங்கரையில் மயான கொள்ளை திருவிழா வெகு விமரிசையாக ஆண்டுதோறும் மாசி மாதத்தில் நடந்து வருவது வழக்கம். இந்நிலையில் கடந்த 16ஆம் தேதி மயான கொள்ளை திருவிழா வழக்கம் போல் நடைபெற்றது.

80 அடி உயரமுள்ள தேரில் அங்காளம்மனை அமர வைத்து அலங்கரித்து மின்விளக்குகளால் அதை ஜோடித்து வீதிகளில் உலா வருவது வழக்கம். அப்படி தோட்டப்பாளையம், வேலூர் மற்றும் விருதம்பட்டு, கழிஞ்சூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் உள்ள அங்காளம்மன் சிலைகளை (உற்சவர்) ஜோடித்து பாலாற்றங்கரைக்கு கொண்டு வந்து தீர்த்தவாரி செய்து மீண்டும் கோவிலுக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில் வழக்கமாக பல்வேறு பகுதிகளில் இருந்தும் 80 அடிக்கும் மேற்பட்ட தேர்கள் அண்ணா மேம்பாலத்தில் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு தீர்த்தவாரியை கண்ட பின்னர் கோயிலுக்கு மீண்டும் சென்றடைந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கழிஞ்சூரில் இருந்து கொண்டுவரப்பட்ட அலங்கரிக்கப்பட்ட தேரில் உலா வந்த (80 அடி தேர்) அங்காளம்மன் இரவு சுமார் 12.30 மணி அளவில் திடீரென பாரம் தாங்காமல் சாய்ந்தது.

இதனை சற்றும் எதிர்பாராத பொதுமக்கள் சுமார் 7க்கும் மேற்பட்டவர்கள் இந்த தேருக்கு அடியில் சிக்கி படுகாயம் அடைந்தது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து அருகில் இருந்த போலீசார் படுகாயம் அடைந்தவர்களை காப்பாற்றி உடனடியாக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இவ்வாறு கழிஞ்சூர் தேர் கவிழ்ந்ததால் அந்த பகுதி மக்கள் மிகவும் மன வருத்தத்துடன் காணப்பட்டனர். இதைத் தொடர்ந்து மயானக் கொள்ளை திருவிழா இடைவிடாது நடந்தது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு ஏற்பாடுகளை வேலூர் மாவட்ட காவல் துறையினர் சுமார் 500க்கும் மேற்பட்டோர் சிறப்பாக செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஒரு சிறு அசம்பாவிதமும் நடக்காமல் போலீசார் தங்களது பணியில் முழு ஈடுபாட்டுடன் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது.

## அம்மாவாசை சிறப்பு பூஜை



**வாடிப்பட்டி, பிப்.18:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ரயில் நிலையம் அருகில் சொக்கையா சாமி ஜீவசமாதியில் மாசி மாத அமாவாசையை முன்னிட்டு சிறப்பு பூஜை நடந்தது. இந்த பூஜையை யொட்டி மதியம் 12 மணிக்கு விநாயகர், முருகன், சொக்கையா சுவாமி ஆகியோருக்கு அபிஷேக, ஆராதனை, அர்ச்சனைகளுடன் சிறப்பு அலங்காரமும் பூஜையும் செய்யப்பட்டது. இதில் பஜனை பாடல்கள் பாடி கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதான கூடத்தில் அன்னதான வழங்கப்பட்டது. இதன் ஏற்பாடு களை சொக்கையா சுவாமி மடத்தின் நிர்வாக தலைவர் கே. மணிகண்டன் செய்திருந்தனர்.

## புனித பால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் போக்சோ விழிப்புணர்வு கூட்டம்



**விளாத்திகுளம்,பிப்.18:**

விளாத்திகுளம் அருகே வி. வேடபட்டி புனித பால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் போக்சோ விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. ஆசிரியை சங்கர நாகஜோதி வரவேற்றார். தலைமை ஆசிரியர் பூ. நாகராஜன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக விளாத்திகுளம் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி பிரவீனா மற்றும் வழக்கறிஞர் திருமதி ராணி ஆகியோர் கலந்து கொண்டு போக்சோ சட்டம் குறித்து உரையாற்றினர். ஆசிரியப் பெருமக்கள், மாணவ மாணவியர் அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் அமைச்சர் அன்பரசன் தலைமையில் மனுக்கள் அளிக்கப்பட்டது



ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், செங்கல்பட்டு, தாம்பரம், திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் இடம் பெற வேண்டிய வாக்குறுதிகள் குறித்தும், MSME தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் குறித்தும் திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் அமைச்சர் அன்பரசன் தலைமையில் மனுக்கள் அளிக்கப்பட்டது.

## தமாகா மாவட்ட தலைவர்கள், மாநில நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்



சென்னை மண்டல தமாகா மாவட்ட தலைவர்கள், மாநில நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அதன் தலைவர் ஜி.கே.வாசன் தலைமையில் நேற்று நடந்தது.

## மார்ட்டின் மனைவி அதிமுகவில் சேர்ந்தார்



கோவை லாட்டரி அதிபர் மார்ட்டின் மனைவி லீமா ரோஸ் மார்ட்டின் நேற்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் சேர்ந்தார். உடன் முன்னாள்அமைச்சர் வேலுமணி.

## கோவை வடக்கு தொகுதியில் நலத்திட்ட உதவி




கோவை வடக்கு தொகுதியில் மோடி முகாம் நிகழ்வை தமிழக பாஜக மாநில செயலாளர் மலர் கொடி தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## விசிக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்



பல்லடம் தொகுதி விசிக நிர்வாகிகள்அறிமுகக் கூட்டம் நேற்று நடந்தது.

# மதுரையில் உருவாகும் பாண்டியர் அருங்காட்சியகம் உலக அரங்கில் உயரப்போகும் தமிழர் வரலாற்றின் புதிய அடையாளம்

**மதுரை, பிப் .18:**

தமிழர் நாகரிகத்தின் தொன்மை, பெருமை மற்றும் அடையாளத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் நோக்கில், பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு சார்பாக மதுரையில் துவக்கப்பட உள்ள பாண்டியர் அருங்காட்சியகத்திற்கு, பொதுமக்கள் முதல் சட்டமன்ற உறுப்பினர்கள், தொல்லியல் நிபுணர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தமிழர் மரபை நேசிக்கும் பல்வேறு தரப்பினரிடமிருந்து வலுவான ஆதரவு தொடர்ந்து கிடைத்து வருகிறது.

பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழு கடந்த பல ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் அர்ப்பணிப்பு மிக்க ஆய்வு மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகளின் மூலம், பாண்டியர் வரலாற்றின் ஆதாரங்களை தேடி கண்டறிந்து, அதை பொதுமக்கள் மத்தியில் கொண்டு வந்து, மறைந்து கிடந்த தமிழர் வரலாற்றை மீண்டும் உயிர்ப்பித்து வருகிறது. இந்த குழுவின் முயற்சிகளால், பாண்டியர் பேரரசின் பெருமை மீண்டும் மக்களிடையே பரவுவதோடு, உலக அளவிலும் பாண்டியர் வரலாறு குறித்து கவனம் திரும்பி வருகிறது.

உலகின் மிகப் பழமையான மற்றும் 5000 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக இயங்கி வரும் நகரங்களில் ஒன்றாக மதுரை திகழ்கிறது. சங்க காலத்தின் மையமாகவும், பாண்டியர் பேரரசின் தலைநகரமாகவும் விளங்கிய மதுரை, தமிழர் பண்பாடு, கல்வி, வாணிபம் மற்றும் நிர்வாகத்தின் மையமாக இருந்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க நகரத்தில் பாண்டியர் அருங்காட்சியகம் அமைவது, மதுரையின் அடையாளத்தை உலக அரங்கில் மேலும் வலுப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது. இதுகுறித்து வரலாற்று ஆய்வாளர் மணிகண்டன் கூறுகையில், "மதுரை என்பது ஒரு நகரம் மட்டுமல்ல, அது தமிழர் நாகரிகத்தின் உயிர் மூச்சாகும். சங்கத் தமிழின் வளர்ச்சிக்கும், உலக கடல் வாணிபத்திற்கும் மையமாக விளங்கிய பாண்டியர் பேரரசின் உண்மை பெருமைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் மையமாக இந்த அருங்காட்சியகம் அமையும். பாண்டியர்கள் கல்வி, நிர்வாகம், கடல் வாணிபம் மற்றும் கலாச்சாரத்தில் உலகிற்கு முன்னுதாரணமாக இருந்தனர். இந்த அருங்காட்சியகம் உருவானால், மதுரையின் பெருமை உலகளவில் புதிய உயரத்தை அடையும்," என்று தெரிவித்தார்.

இந்த அருங்காட்சியகம் அமைந்தால், பாண்டியர் காலத்தின் கல்வெட்டுகள், நாணயங்கள், அரச சின்னங்கள், சிற்பங்கள் மற்றும் வரலாற்று ஆதாரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பாதுகாக்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் இளம் தலைமுறைகள் தங்கள் வரலாற்றை நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதோடு, பொதுமக்களிடையே வரலாற்று விழிப்புணர்வு மேலும் அதிகரிக்கும்.மேலும், இந்த அருங்காட்சியகம் மதுரையில் அமைந்தால், இந்தியா மற்றும் உலக நாடுகளிலிருந்து சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருவார்கள்.

இதன் மூலம் சுற்றுலா வளர்ச்சி அதிகரித்து, ஹோட்டல்கள், வணிகம், போக்குவரத்து மற்றும் உள்ளூர் தொழில்கள் வளர்ச்சி பெற்று, மதுரையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவில் உயரும். இது மதுரையை ஒரு ஆன்மீக நகரமாக மட்டுமல்லாமல், ஒரு உலக வரலாற்று நகரமாகவும் நிலைநிறுத்தும். பாண்டியர் அருங்காட்சியகம், ஒரு கட்டிடம் மட்டுமல்ல; அது தமிழர் வரலாற்றை பாதுகாக்கும் ஒரு உயிருள்ள சான்றாகவும், மதுரையின் வரலாற்று அடையாளத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் ஒரு முக்கிய மையமாகவும் விளங்கும். பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழுவின் இந்த முயற்சி, தமிழர் வரலாற்றை மீட்டெடுத்து, அதை உலக அரங்கில் நிலைநிறுத்தும் ஒரு வரலாற்றுப் புரட்சியாக பல்வேறு தரப்பினராலும் பாராட்டப்படுகிறது.

பாண்டியர் அருங்காட்சியகம் உருவாகும் நாள், மதுரையின் பெருமை உலகம் முழுவதும் ஒலிக்கும் நாளாகவும், தமிழர் வரலாறு புதிய எழுச்சியை அடையும் நாளாகவும் அமையும் என்ற நம்பிக்கை பொதுமக்கள், வரலாற்று ஆர்வலர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் வலுவாக நிலவி வருகிறது.

## நாமக்கல்லில் பிப். 20-இல் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

நாமக்கல், பிப்.18:

நாமக்கல்லில், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வெள்ளிக்கிழமை (பிப்.20) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு: தனியார் துறை நிறுவனங்களும் - தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம், நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் நடைபெறுகிறது.

தனியார் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான வர்களை நிர்வாகிகளைக் கொண்டோ அல்லது நேரில் வந்தோ தேர்வு செய்து கொள்ளலாம். முகாமில் பங்கேற்கும் வேலையளிப்போரும், வேலைநாடுனரும் எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை. மேலும், விவரங்களுக்கு 04286-222260 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எம்.என்.ராஜம், எஸ்.பி.முத்துராமனுக்கு கலைஞர் விருது முதல்வர் வழங்கினார்



சென்னை, பிப்.18:

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது 2024-க்கு நடிகை எம்.என். ராஜம் மற்றும் 2025-க்கு இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் ஆகி யோருக்கு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் திங்கட்கிழமை வழங்கி கவுரவித்தார். 200-க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களில் நடித்த பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம் 1950-கள் மற்றும் 1960- களில் முன்னணி நாயகியாக விளங்கி னார். ரத்தக்கண்ணீர், பாசமலர், நாடோடி மன்னன் உள்ளிட்ட படங்களில் நடித்தவர். 70-க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களை இயக்கிய எஸ்.பி. முத்துராமன் தமிழ் சினிமாவின் வெற்றிகர மான இயக்குநர்களில் ஒருவர். இருவருக்கும் விருதுடன் தலா ரூ.10 லட்சம் ரொக்கப் பரி சும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

## வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி

சென்னை, பிப்.18:

தெற்கு வங்கக் கடல் பகுதி யில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி யுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மை யம் தெரிவித்துள்ளது. கிழக்கு பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள இந்திய பெருங் கடல் மற்றும் தெற்கு வங்கக் கடலின் மத்தியப் பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திங்க ளன்று காலை காற்ற ழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது.

இது மேலும் மேற்கு - வடமேற்கு நோக்கி நகர்ந்து தென் மேற்கு வங்கக் கடலை நோக்கி நகரும். இதன் காரணமாக பிப்ரவரி 18 முதல் 21 வரை தமிழ கத்தில் ஓரிரு மாவட்டங் களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. கனமழை, மிக கனமழைக்கு வாய்ப்பில்லை. 2002ஆம் ஆண்டுக் குப் பிறகு பிப்ரவரி மாதத்தில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உரு வாகியுள்ளது குறிப்பிடத் தக்கது.

## மார்ச் 2 முதல் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள்

சென்னை, பிப்.18:

பன்னி ரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள், மார்ச் 2 அன்று துவங்கி மார்ச் 26 வரை நடைபெற உள்ள தாக, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரி வித்துள்ளார். அதேபோல, மார்ச் 11 முதல் ஏப்ரல் 4 வரை 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் நடைபெறும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

12ஆம் வகுப்பு பொதுத்தேர்வை 27,783 தனித்தேர்வர்கள் உட்பட 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 மாண வர்களும், 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வை 26,196 தனித்தேர்வர்கள் உட்பட 9 லட்சத்து 9 ஆயி ரத்து 2 மாணவர்களும் எழுதுகின்றனர்.

## சேலத்தில் கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு



சேலம், பிப்.18:

தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பிலான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ், கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா சேலத்தில் நடைபெற்றது.

ஐந்து ரோடு பகுதியில் உள்ள இந்திய மருத்துவ சங்க கட்டிடத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் தலைமை தாங்கினார். சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் மற்றும் சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊட்டச்சத்து இயக்கத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் ஊட்டச்சத்து மாத விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, மாவட்டத்தின் 22 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 2,200 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தொடக்க நிகழ்வாக, திட்டம்1, திட்டம்2 மற்றும் சேலம் ஊரகம் வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு உட்பட்ட 100 கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நடத்தப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன. புடவை, மஞ்சள், குங்குமம், வளையல், வெற்றிலைபாக்கு உள்ளிட்ட தாம்பூலங்கள் வழங்கப்பட்டதுடன், ஐந்து வகை உணவுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து வட்டார அளவில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

அரசு மருத்துவமனைகள் மூலம் பயன்பெறும் கர்ப்பிணி பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டத்தின் கீழ் ரூ.18,000 மற்றும் ரூ.2,000 மதிப்பிலான ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப் பட்டது. மேலும், கர்ப்ப கால முன் மற்றும் பிந்தைய பராமரிப்பு, குழந்தைக்கு உணவூட்டும் முறைகள், தடுப்பூசி உள்ளிட்ட விஷயங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலும் இவ்விழா நடத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்வில் மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்ட அலுவலர் இரா.சுகந்தி உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## ஆதிதிராவிடர், பழங்குடியின இளைஞர்களுக்கு 'அமேசான் வலை சேவைகள் ஏஐ' பயிற்சி

ஈரோடு, பிப்.18:

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தற்போது 'அமேசான் வலை சேவைகள் மறுதொடக்கம் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) நிரலாளர்' பயிற்சி வழங்கப்பட உள்ளது என்று கலெக்டர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். 18 முதல் 30 வயதுக்குள் ஏதேனும் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சியை முழுமையாக நிறைவு செய்பவர்க ளுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கப் படும். தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டலும் ஏற்பாடு செய்யப்படும்.

இந்தப் பயிற்சிக்கான கால அளவு 2 மாதங்கள் ஆகும். சென்னையில் தங்கி பயிலும் வகையில் விடுதி வசதியும், உணவுக்கான செலவும் தாட்கோ மூலம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தாட்கோ இணையதளமான www.tahdco.com முகவரியில் பதிவு செய்யலாம். மேலும் விவரங் களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம், 6வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு என்ற முகவரியையோ அல்லது 0424-2259453 என்ற தொலைபேசி எண்ணையோ தொடர்புகொள்ளலாம் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## தருமபுரி மாவட்ட கலைஞர்கள் அரசு அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம்

தருமபுரி, பிப்.18:

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்கள் அரசின் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் கலைப்பண்புகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும், கலைஞர்களின் திறமைகளை சிறப்பிக்கவும் கலெக்டர் தலைமையில் மாவட்டக் கலைமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுதல், அரசு நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு கலைஞர்கள் தேர்வு செய்யப்படுதல், பயணச் சலுகைகள் உள்ளிட்ட பலன்களை பெற அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த குரலிசை, பரதநாட்டியம், ஓவியம், சிற்பம், நாடகம், நாதசுரம், தவில், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல் உள்ளிட்ட இசைக்கலைஞர்கள், கரகம், காவடி, பொய்கால் குதிரை, அரசன்அரசி ஆட்டம், தெருக்கூத்து போன்ற கிராமியக் கலைகளைத் தொழிலாக மேற்கொள்ளும் 18 வயதுக்கு மேற்பட்ட முழுநேர அல்லது பகுதி நேரக் கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்துடன் கலைநிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் கலைப்பணி அனுபவச் சான்று, பாராட்டுச் சான்றிதழ், கலைநிகழ்ச்சி விளம்பர நோட்டீஸ் ஆகிய சான்றுகள் இணைக்க வேண்டும். மேலும் இருப்பிடம், வயது ஆதாரம், மார்பளவு புகைப்படங்கள் மற்றும் உறுப்பினர் சேர்க்கை கட்டணம் ரூ.100 ஆகியவற்றுடன் மண்டல உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை அலுவலகம், ஆவின் பால் பண்ணை எதிரில், திருப்பதி கவுண்டனூர் சாலை, அய்யம் பெருமாம்பட்டி அஞ்சல், சேலம்636302 என்ற முகவரியில் நேரில் அணுகி விண்ணப்பிக்க வேண்டும். தொலைபேசி: 0427-2386197.

## ஈஷா மஹாசிவராத்திரி: சர்வதேச ஆன்மீக கொண்டாட்டம்!: மத்திய அமைச்சர் புகழாரம்

கோவை, பிப்.18:

ஈஷாவில் மஹாசிவராத்திரி விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. சத்குரு முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சிறப்பு உட்பட பல முக்கியப் பிரமுகர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டார்.

ஈஷா மஹாசிவராத்திரி விழா தியானலிங்கத்தில் சத்குரு வழிநடத்திய 'பஞ்ச பூத க்ரியாவுடன்' தொடங்கியது. முன்னதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தியானலிங்கம், லிங்கபைரவி சன்னதிகளில் தரிசனம் செய்தார்.

இவ்விழாவில் சத்குரு பேசுகையில், "யோகாவின் முழு முயற்சியும், எனது முயற்சியும், ஆதியோகியின் ஆயிரக்கணக்கான ஆண்டுகால முயற்சியும், மக்கள் யாரும் தங்களுக்குத் தாங்களே ஒரு தடையாக இருக்க கூடிய ஒரு பேரழிவாக மாறிவிடக்கூடாது என்பதே. உங்கள் சொந்த மனம், எண்ணம், உணர்ச்சி மற்றும் ஆற்றல்கள் உங்களுக்கே ஒரு தடையாக மாறாமல் இருப்பதை ஒவ்வொருவரும் உறுதி செய்ய வேண்டும். இதை எளிதாக்குவதுதான் யோகக் கலை என்றார்.

### 'பவ்ய பாரத் பூஷண்' விருதுகள்

ஈஷா மஹாசிவராத்திரி விழாவில் இந்தாண்டு முதல் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்த சாதனையாளர்களை அங்கீகரிக்கும் வகையில் பவ்ய பாரத் பூஷண் என்ற பெயரில் விருதுகள் வழங்கப்படும் என சத்குரு அறிவித்தார்.

அந்த வகையில் இந்தாண்டு விருதுகள் வயலின் கலைஞர் டாக்டர் என்.ராஜம், பரதநாட்டிய கலைஞர் அலர்மேல்வள்ளி, விண்வெளி விஞ்ஞானிகள் நம்பி நாராயணன், கிரண் குமார், வரலாற்றாசிரியர் விக்ரம் சம்பத், பேட்மிட்டன் வீராங்கனை பி.வி. சிந்து, ஆப்ரேஷன் சிந்தூரில் பங்காற்றிய ராணுவ வீரர்களை அங்கீகரிக்கும் வகையில் ஏர் மார்ஷல் ஜித்தேந்திர மிஷ்ரா, கடற்படை தலைமை அதிகாரி ராகுல் விலாஸ், ராணுவ அதிகாரி ராத்தே உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. ஆதியோகி திருவுருவம் பதித்த விருது பதக்கங்களை அமைச்சர் ராஜ்நாத் சிங் வழங்கினார்.

இவ்விழாவில் ராஜ்நாத் சிங் பேசுகையில், "நான் காசியில் இருந்து வருகிறேன். காசிக்கும் தமிழ்நாட்டுக்கும் இருக்கும் தொடர்பு மிகவும் பழமையானது. காசி உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று என்றால், தமிழ் பண்பாடோ உலகின் மிகப் பழமையானது. மொழி, பண்பாடு, சமையல் கலை போன்ற பற்பல அம்சங்களில் தமிழ்நாடு நம் வரலாற்றில் வளமான இடத்தை வகிக்கிறது.

யோகேஷ்வர லிங்க மஹா அபிஷேகம்

சத்குருவின் வழிகாட்டுதலில் ஈஷாவில் நிகழும் மஹாசிவராத்திரி விழா சர்வதேச அளவிலான ஆன்மீக கொண்டாட்டமாகவும், பாரத தேசத்தின் பண்பாட்டு மறுமலர்ச்சியின் புதிய பிரகடனமாகவும் விளங்குகிறது." எனக் கூறினார்.

தொடர்ந்து இரவு முழுவதும் நடைபெற விழாவில் சத்குரு வழிநடத்திய சக்திவாய்ந்த தியானங்கள், மந்திர உச்சாடனைகள், யோகேஷ்வர லிங்க மஹா அபிஷேகம் மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு அம்சங்கள் இடம்பெற உள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## தேங்காய்ப் பால்: ஆரோக்கியம் தரும் இயற்கை அமிர்தம்!



உணவுக்கு ருசி சேர்ப்பது தேங்காய். தேங்காய்ப் பாலில் ஏகப்பட்ட ஆரோக்கிய நன்மைகள் இருக்கின்றன. அவற்றை எப்படி எல்லாம் பயன்படுத்தலாம் என்பதை இப்பதிவில் காண்போம்.

* ஆப்பம், இடியாப்பம் கொழுக்கட்டை போன்ற பதார்த்தங்களை தேங்காய்ப் பாலில் ஊற வைத்து சாப்பிட வாய்ப்புண், வயிற்றுப்புண் ஆறும்.

* தேங்காயை நன்றாக மென்று அந்தப் பாலை நீண்ட நேரம் வாயில் வைத்திருந்தால் வாய்ப்புண் ஆறும்.

* முகத்தில் எண்ணெய் பசை அதிகம் இருந்தால் தேங்காய் உடைத்த தண்ணீரில் பஞ்சை நனைத்து முகத்தை துடைத்து வந்தால் முகத்தில் உள்ள தூசுகள், எண்ணெய்ப் பசை ஆகியவை அறவே நீங்கிவிடும்.

* இளநீரில் சிறிது சந்தனம் சேர்த்து கழுத்தில் தடவி வந்தால் வேர்க்குரு நீங்கும். நல்ல இதமாகவும் இருக்கும். * சிறிதளவு சீரகத்துடன், தேங்காய் பால் ஊற்றி அரைத்து கொப்பளங்கள் மீது போட்டு வர இரண்டு நாட்களில் கொப்புளங்கள் ஆறும்.

* தேங்காய் பாலுடன் நெய் சேர்த்து பின் நாட்டுக்கோழி முட்டையுடன், வெந்தயக்கீரையையும் சேர்த்து சமையல் செய்து சாப்பிட்டால் ஒரே இடத்தில் அதிக நேரம் வேலை செய்பவர்கள் சோர்வோ மற்ற எந்த தொந்தரவும் இன்றி வேலை செய்ய முடியும்.

* மஞ்சள், கருஞ்சீரகம் இவைகளை இடித்து பொடி செய்து தேங்காய்ப் பாலில் ஊற வைத்து அடுப்பில் காய்ச்ச எண்ணெய் பதம் வரும். வந்ததும் இறக்கி ஆற வைத்து சொறி, படைகளின் மீது தடவி வர குணம் ஆகும். * தேங்காயில் பால் எடுத்து அரை டம்ளர் அருந்தி வர தாது விருத்தி ஏற்படும். * ஞாபக மறதிக்கு ஒரு பத்தை தேங்காயும் நாலு பாதாம் பருப்பையும் 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

## சைலண்ட் கில்லர்: 'பிரைடு ரைஸ் சிண்ட்ரோம்'

FRIED RICE தெரியும். அது என்ன FRIED RICE SYNDROME என்றுதானே யோசிக்கிறீர்கள்? இது என்ன? இந்த SYNDROME வந்தால் என்னாகும்? இது வர காரணம் என்ன? என அனைத்தையும் இந்தப் பதிவில் பார்ப்போம்.

FRIED RICE SYNDROME என்றால் என்ன?

கடையில் ஃபரைய்ட் ரைஸ் செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? ஏற்கனவே பாதி வேக வைத்த அரிசியுடன் புதிதாக சேர்த்து செய்வார்கள். அதேபோல் வீட்டில் சிலர், மீதமுள்ள அரிசியை இரவு முழுவதும் வைத்துவிட்டு காலையில் சூடு செய்து சாப்பிடுவார்கள்.

இரவு முழுவதும் அறை வெப்பத்தில் அந்த சாதத்தில் பாக்டீரியாக்கள் வளரத் தொடங்கும். அந்த நிலையை தான் ஃபிரைய்ட் ரைஸ் சிண்ட்ரோம் என்கிறோம். அரிசியில் பேசிலஸ் செரியஸ் என்ற பாக்டீரியா உள்ளது, இது உணவை மாசுபடுத்தி நம்மை நோய்வாய்ப்படுத்தும். சுருக்கமாக சொல்லப்போனால், பழைய உணவு காரணமாக ஒருவரின் உடல்நிலை மோசமடையும் நிலைதான் FRIED RICE SYNDROME.

## அனுமதியின்றி மது விற்றவர் கைது 150 பாட்டில்கள் பறிமுதல்

**திருவில்லிபுத்தூர், பிப்.18:**

மல்லி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சாமிநத்தம் மேலூர் காளியம்மன் கோவில் அருகே அரசு அனுமதி இன்றி மது பாட்டில்கள் விற்பனை செய்யப்பட்டதாக வந்த தகவலின் பேரில் போலீசார் நடவடிக்கை எடுத்தனர்.

இதையடுத்து மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ரகுபதி சம்பவ இடத்துக்கு சென்று சோதனை மேற் கொண்டார். அப்போது தங்கபாண்டியன் என்பவருக்கு சொந்தமான தகரச் செட்டில் அரசு அனுமதி இன்றி மது பாட்டில்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தங்கபாண்டியன் கைது செய்யப் பட்டார். அங்கிருந்து 150 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்டவர் மீது ஏற்கனவே 11-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதாக போலீசார் தெரிவித்தனர். அவர்மீது புதிய வழக்கு பதிவு செய்து விசா ரணை நடைபெற்று வருகிறது.

## இளைஞர் தற்கொலை

**இராமநாதபுரம், பிப்.18:**

இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் ஞாயிற்றுக் கிழமை இளைஞர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். சாயல்குடி அண்ணாநகரைச் சேர்ந்த சுப்புராஜ் மகன் பாப்புராஜ் (33). குடும்பத் தகராறு காரணமாக, இவர் தனது வீட்டில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இவருக்கு மனைவி மீனா, 3 வயதில் பெண் குழந்தை உள்ளனர். இதுகுறித்து சாயல்குடி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## சாத்தூர் அரசுக் கல்லூரியில் சிசிடிவி கேமரா, கண்ணாடி உடைப்பு

**சாத்தூர், பிப்.18:**

சாத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி யில் கண்ணாடி மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் உடைக்கப்பட்டன. சாத்தூர் அருகே மேட்டமலையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

இதில் சுமார் 800 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்த நிலையில் திங்களன்று காலை கல்லூரியை காவலாளி திறந்துள்ளார். அப்போது, உள்ளே கொடிக்கம்பம், கண் ணாடி மற்றும் சிசிடிவி கேமராக்கள் அடித்து உடைக்கப் பட்டிருந்தன.

எனவே, இதுகுறித்து, கல்லூரி முதல்வர் சீலாடேனி யலுக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுதது அவர் சாத் தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன் பேரில் அங்கு வந்த போலீசார் சிசிடிவி கேமரா வீடியோவை ஆய்வு செய்து வருகின்றனர்.

## பிரம்மோற்சவ விழா.. திருப்பதி கபிலேஸ்வரர் கோவிலில் திருக்கல்யாண உற்சவம்

**திருப்பதி, பிப்.18:**



திருப்பதி கபிலேஸ்வரர் கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா நடந்து வருகிறது. விழாவின் 9-வது நாளான நேற்று காலை 8 மணியில் இருந்து 10 மணிவரை உற்சவர்களான சோமாஸ்கந்த மூர்த்தி, காமாட்சி தாயார் சிறப்பு அலங்காரத்தில் புருஷாமிருக வாகனத்தில் எழுந்தருளி திருப்பதி நகர வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

வாகன வீதிஉலாவிற்கு முன்னால் பெண்கள் நடனம் ஆடினர். கேரள செண்டை மேளம் மற்றும் மங்கள இசை வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. வழி நெடுகிலும் பக்தர்கள் தேங்காய் உடைத்தும், கற்பூரம் ஏற்றி தீபாராதனை காண்பித்தும் சாமி தரிசனம் செய்தனர்.

கோவிலில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை 4 மணி வரை 'லிங்கோத்பவ தரிசனம்' நடந்தது. தொடர்ந்து சுப்ரபாதத்துக்கு பின் மூலவருக்கும், உற்சவர்களுக்கும் அபிஷேகம் நடத்தப்பட்டது. காலை 8 மணியளவில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர். காலை 11 மணியளவில் உற்சவர்களுக்கு ஸ்நாபன திருமஞ்சனம் நடந்தது.

மாலை 6 மணியில் இருந்து இரவு 7.30 மணிவரை திருக்கல்யாண உற்சவம், இரவு 8 மணியில் இருந்து 10 மணிவரை திருச்சி வாகன வீதிஉலா நடந்தது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கோவில் மேற்பார்வையாளர் சந்திரசேகர் மற்றும் அர்ச்சகர்கள், அதிகாரிகள், பக்தர்கள் பங்கேற்றனர்.

அதேபோல் திருப்பதியை அடுத்த சீனிவாசமங்காபுரத்தில் உள்ள கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் நடந்து வரும் வருடாந்திர பிரம்மோற்சவ விழாவின் 9-வதுநாளான நேற்று காலை 9.55 மணியில் இருந்து 10.15 மணிவரை சக்கரஸ்நானம் எனப்படும் சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடந்தது.

பின்னர் மாலை 6 மணியில் இருந்து இரவு 7 மணிவரை கொடியிறக்க நிகழ்ச்சி நடந்தது. இதோடு பிரம்மோற்சவ விழா நிறைவடைந்தது.

## கன்னியாகுமரி: விஸ்வநாதர் கோவிலில் திருவிளக்கு பூஜை

**கன்னியாகுமரி, பிப்.18:**



கன்னியாகுமரி சன்னதி தெருவில் விஸ்வநாதர் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் சிவராத்திரி விழா நடந்தது. இதையொட்டி கணபதி ஹோமம், சிறப்பு அபிஷேகம், விசேஷ பூஜைகள், அலங்கார தீபாராதனை, அன்னதானம் நடந்தது.

மாலையில் திருவிளக்கு பூஜை நடந்தது. இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி வழிபட்டனர்.

விளக்கு பூஜையைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு முதல் சாம அபிஷேகபூஜையும், 10 மணிக்கு இரண்டாம் சாம அபிஷேக பூஜையும், நள்ளிரவு 12 மணிக்கு மூன்றாம் ஜாம அபிஷேக பூஜையும், அதிகாலை 2 மணிக்கு நான்காம் சாம அபிஷேக பூஜையும் நடந்தது. இந்த நான்கு சாம அபிஷேக பூஜையிலும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## திருப்பதி ஏழுமலையான் தரிசனம்: மே மாத டிக்கெட்டுகள் ஆன்லைனில் வெளியீடு

**திருப்பதி, பிப்.18:**



திருப்பதி ஏழுமலையானை வரும் மே மாதத்தில் தரிசனம் செய்வதற்கான டிக்கெட்டுகளை திருமலை திருப்பதி தேவஸ்தானம் இணையத்தில் நாளை வெளியிட உள்ளது.

அதன் படி, 18ம் தேதி காலை 10 மணி முதல் 20ம் தேதி காலை 10 மணி வரை பக்தர்கள் குலுக்கல் முறையில் சுப்ரபாதம், தோமாலை சேவை, அர்ச்சனை, அஷ்டதள பாத பத்மாராதனை சேவை போன்ற ஆர்ஜித சேவைகளுக்கான டிக்கெட்டுகளை முன் பதிவு செய்து கொள்ளலாம்.

21ம் தேதி காலை 10 மணிக்கு திருக்கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவைகளுக்கான டிக்கெட்டுகளை பக்தர்கள் முன் பதிவு செய்து கொள்ளலாம். 23ம் தேதி காலை 10 மணிக்கு இலவசமாக அங்க பிரதட்சண டோக்கன்களும், 11 மணிக்கு ஸ்ரீவாணி அறக்கட்டளைக்கான டிக்கெட்டுகளும், இதே நாள் மதியம் 3 மணிக்கு மாற்றுத்திறனாளி பக்தர்கள், மூத்த குடிமகன்களுக்கான டிக்கெட்டுகளையும் பக்தர்கள் முன்பதிவு செய்யலாம்.

இம்மாதம் 24ம் தேதி காலை 10 மணிக்கு மே மாதத்திற்கான ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்டுகளை பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம். இதனை தொடர்ந்து, அதே நாள் மதியம் 3 மணிக்கு தங்கும் அறைகளுக்கான டிக்கெட்டுகளையும் பக்தர்கள் முன் பதிவு செய்து கொள்ளலாம்.






## தேனியில் ரூ.14 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள்

**தேனி, பிப்.18:**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 420 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், ரூ.14 லட்சத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொழிலாளர் துறையின் சார்பில், மானிய விலையில் இ-ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு இ-ஸ்கூட்டர் வாங்குவதற்கு மானியமாக ரூ.40,000மும், பணியிடத்து விபத்து மரண உதவித் தொகையாக 4 நபர்களுக்கு ரூ.10,00,000 உதவித்தொகையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 25 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,62,250 மதிப்பிலான பிரத்யேக ஸ்மார்ட் போன்களையும் என மொத்தம் 31 பயனாளிகளுக்கு ரூ.14,02,250 மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜ குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பஞ்சாபிகேசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் நோயாளிகளுக்கு பேட்டரி கார் வசதி

**தேனி, பிப்.18:**

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் முதியோர்கள் மற் றும் நோயாளிகளின் பயன்பாட்டிற்காக, பேட்டரி கார் வசதி தொடங்கி வைக்கப்பட்டது. ஆண்டிபட்டி அருகே க. விலக்கில் உள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்து வமனைக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான நோயா ளிகள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இதில் முதி யோர்கள் மற்றும் நடக்க இயலாத நோயாளிகள் மருத்துவ மனை வளாகத்திற்குள் எளிதாக சென்று வர ஏதுவாக, தனியார் நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பு நிதி யின் கீழ் 10 பேர் அமரக்கூடிய திறந்தவெளி பேட்டரி காரை வழங்க முன்வந்தன. இதனைத் தொடர்ந்து, நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவக் கல்லூரி மருத்து வமனை முதல்வர் பேராசிரி யர் முத்து சித்ரா கொடிய சைத்து இந்த பேட்டரி கார் சேவையைத் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மருத்துவமனை கண்காணிப்பாளர் விஜய் ஆனந்த், துணை முதல்வர் கவிதா, நிலைய மருத்துவ அலு வலர் சிவக்குமார் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## டிஎன்பிஎஸ்சி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக ஸ்ரீவெங்கடபிரியா ஐ.ஏ.எஸ். பொறுப்பேற்பு

**சென்னை, பிப்.18:**

டி.என்.பி.எஸ்.சி.யில் புதிய தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக ஸ்ரீ வெங்கடபிரியா ஐ.ஏ.எஸ். பொறுப்பேற்றுள்ளார். குரூப்-2, 2ஏ தேர்வு குளறுபடி காரணமாக தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் மாற்றப்பட்ட நிலையில் கடந்த 14-ம் தேதி வெங்கடபிரியா பொறுப்பேற்றதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

## வேற்றுக் கிரகவாசிகள் ஏன் நம்மிடம் பேசுவதில்லை... விஞ்ஞானிகள் கூறுவது என்ன?

இரவு வானத்தை அண்ணாந்து பார்க்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் தோன்றும் மிக முக்கியமான சந்தேகம், இந்தப் பிரம்மாண்டமான பிரபஞ்சத்தில் நாம் மட்டும்தான் தனியாக இருக்கிறோமா என்பதுதான். பல நூற்றாண்டுகளாக இந்தக் குழப்பத்திற்கு விடை தேடி மனித இனம் அலைந்து கொண்டிருக்கிறது. தொலை நோக்கிகள் மூலமும், ரேடியோ அலைகள் மூலமும் எவ்வளவோ தேடியும், இதுவரை ஒரு சிறிய துரும்பு கூட ஆதாரமாகக் கிடைக்கவில்லை.

ஆனால் இப்போது நவீன அறிவியலின் வளர்ச்சியான செயற்கை நுண்ணறிவு எனப்படும் AI தொழில்நுட்பம் இந்தத் தேடலுக்குப் புதிய நம்பிக்கையை அளித்துள்ளது. ஒருவேளை வேற்று கிரகவாசிகள் நம்மை விடப் பல மடங்கு தொழில்நுட்பத்தில் வளர்ந்தவர்களாக இருந்தால், அவர்கள் ஏன் நம் கண்ணில் படவில்லை என்பதற்கான விடையை இந்தத் தொழில்நுட்பம் மூலம் அறிய முற்படுகிறார்கள்.

### புதிய சிந்தனைகள்!

நாம் இதுவரை வேற்று கிரகவாசிகளைத் தேடும் முறை மிகவும் பழமையானது. அதாவது, அவர்கள் ரேடியோ அலைகள் மூலம் பேசுவார்கள் என்று நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். ஆனால் 1970களிலேயே சில விண்வெளி ஆய்வாளர்கள் ஒரு முக்கிய கருத்தை முன்வைத்தனர். ஒரு நாகரிகம் தொழில்நுட்பத்தில்



வளரும்போது, அவர்கள் தகவல் பரிமாற்றம் செய்யும் முறையும் மாறும். நாம் கடிதம் எழுதிக்கொண்டிருந்த காலத்தில், அவர்கள் மின்னஞ்சல் அனுப்பும் நிலைக்குச் சென்றிருக்கலாம். அதுபோலவே, வேற்று கிரகவாசிகள் மனிதர்களுக்குப் புரியாத அல்லது மனிதர்களால் கண்டுபிடிக்க முடியாத குவாண்டம் நெட்வொர்க் அல்லது நியூட்ரினோதுகள்கள் மூலம் பேசிக்கொண்டிருக்கலாம். இதனால்தான் அவர்களது சிக்னல்கள் நம் கருவிகளில் சிக்குவதில்லை. இவ்வளவு நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்கள் இருந்தும், ஏன் உயிரினங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கேட்பதை ‘ஃபெர்மி பாரடாக்ஸ் (FERMI PARADOX)’ என்று அழைப்பார்கள். இதற்கு விஞ்ஞானிகள் சொல்லும் புதிய பதில் மிகவும் ஆச்சரியமானது. வேற்று கிரகவாசிகள் நம்மைப் போலச் சதையும் ரத்தமும் கொண்ட உயிரினங்களாக இல்லாமல், தங்களை முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு வடிவத்திற்கு மாற்றிக்கொண்டிருக்கலாம்.

அவர்கள் நம்மை விடப் பல்லாயிரம் ஆண்டுகள் முன்னேறிய சூப்பர் கம்ப்யூட்டர்களாக இருக்கலாம். அப்படி மாறிய நாகரிகங்கள், தங்களது இருப்பிடத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மிகவும் ரகசியமாகவும், அதே சமயம் திறமையாகவும் செயல்படுவார்கள். எனவே அவர்கள் இருக்கும் தடம் நமக்குத் தெரிவதில்லை.

### நமது தேடலில் உள்ள குறைபாடு!

நாம் பயன்படுத்தும் கருவிகள் மற்றும் தேடும் முறைகள் அனைத்தும் மனித அறிவுக்கு உட்பட்டது. ஆனால் வேற்று கிரகவாசிகளின் தொழில்நுட்பம் மனித அறிவுக்கு எட்டாத உயரத்தில் இருக்கலாம். செயற்கை நுண்ணறிவில் இருந்து ‘சூப்பர் இன்டெலிஜென்ஸ்’ எனப்படும் அதிநவீன நிலைக்கு நாம் மாறும்போது மட்டுமே, அவர்களது அலைவரிசையை நம்மால் பிடிக்க முடியும். தற்போது நாம் பயன்படுத்தும் ரேடியோ தொலைநோக்கிகள் அவர்களுக்குப் பழைய கற்காலக் கருவிகளாகத் தோன்றலாம். எனவே, நமது தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரே வழி.

வேற்று கிரகவாசிகள் இல்லை என்று முடிவெடுப்பதை விட, அவர்களைத் தேடும் அளவுக்கு நம் தொழில்நுட்பம் இன்னும் வளரவில்லை என்று நினைப்பதே சரியாக இருக்கும். செயற்கை நுண்ணறிவுத் துறையில் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும், பிரபஞ்சத்தின் ரகசியக் கதவுகளைத் திறக்கும் சாவியாக அமைகிறது.

நாம் தேடும் பதில் வெகு தொலைவில் இல்லை, ஆனால் அதைப் புரிந்துகொள்ளும் பக்குவம் மனித குலத்திற்கு வர வேண்டும். அதுவரை வானத்தைப் பார்த்துக் காத்திருப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

# "கோமாளியின் மறுபக்கம்"

"அப்பா...
நாளைக்குள்ளார
காலேஜ் ஃபீஸ் கட்டணும்.
இல்லேன்னா ஹால்
டிக்கெட் கிடைக்காது..."
மகளின் குரல்
தொலைபேசியில்
நடுங்கியது.
அந்த நடுக்கம்,
அவனுக்குள்ளும்
புகுந்தது.
"கட்டிடலாம்மா..."
என்றான். கையில்
இருந்தது வெறும்
இருநூறு ரூபாய்.
காலேஜ் ஃபீஸ் ஐயாயிரம்.

அவன் தொழில்? சர்க்கஸ்
கோமாளி. மாலை ஆறு
மணி. வண்ண விளக்குகள்
ஏற்றப்பட்டன.
கூடாரத்தின் வெளியே
பஞ்சு மிட்டாய், மிளகாய்
பஜ்ஜி வியாபாரம் களை
கட்டியிருந்தது.
உள்ளே, சிரிக்கத்
தயாரான மக்கள்.
அவன் கண்ணாடி முன்
நின்றான்.
முகத்தில் வெள்ளைப்
பூச்சு. உதட்டில்
சிவப்பு வளைவு. அது
சிரிப்புக்காக அல்ல,
மகளின் கல்விக்காக.
"ஏய் கோமாளி! ரெடியா?"
மேனேஜரின் குரல்.
"ரெடிதான்..."
மேடை ஆரம்பமானது.
எடுத்த எடுப்பில் வழுக்கி
விழுந்தான். கூட்டம் கை
கொட்டிச் சிரித்தது.
மீண்டும் எழுந்து பின்புறம்
தட்டினான்.
மீண்டும் சிரிப்பு
வெடித்தது.
அவனுக்குள் ஒரு கேள்வி
எழுந்தது.
"இந்த சிரிப்புக்கு விலை
இருக்கிறது...
ஆனால் என் மகளின்
கனவுக்கு?"
ஒரு குழந்தை சிரித்தபடி
அவனை நோக்கி
விரல் நீட்டியது. அங்கு
மகளின் முகம் தெரிந்தது
அவனுக்கு.
மகள் நினைவு வந்ததும்,
இன்னும் பெரிதாய்
காமெடி
செய்தான்.
மீண்டும்
விழுந்தான். மீண்டும்
சிரிக்க வைத்தான்.
இன்று அவன்
பர்ஃபாமென்ஸ் மற்ற
சர்க்ஜஸ் கலைஞர்களைப்
பின்னுக்குத் தள்ளியது.
கூட்டம் அவனையே
திரும்பத் திரும்பக்
கேட்டது.

நிகழ்ச்சி முடிந்தது.
அவன் வியர்வையோடு
மேனேஜரை
அணுகினான். "சார்...
கொஞ்சம் அட்வான்ஸ்..."
மேனேஜர் கணக்குப்
புத்தகத்தை
மூடினார். "அடேய்
கோமாளிப்பயலே...
இன்று நல்ல கலெக்ஷன்.
இந்தா வாங்கிக்கோ...
ஐயாயிரம்....நாளையும்
இப்படியே கலக்கணும்..
என்ன?."
அவன் கையில் பணம்.
கண்களில் நீர்.
முகத்தில் சிரிப்பு பூச்சு.
"இன்று நான்
எதுவும்
செய்யலை...
என் மகளின்
எதிர்காலம்
என்னைச்
செய்ய
வைத்தது."
ஆம் !....
கோமாளிகளின்
மறுபக்கத்தில்
சோகங்களும்,
கண்ணீருமே
நிரந்தரம்.







-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# கெடு வைத்தவன் !



பூஜையறையைவிட்டு வெளிப்பட்டார் பண்ணையார் பரமசிவம். பண்ணையாருக்காக ஹாலில் காத்திருந்த வேலையாள் கண்ணாயிரம், " ஐயா! யாரோ தரகர் கந்தசாமின்னு ஒருத்தர் பட்டணத்திலேர்ந்து வந்திருக்கார். அனுப்ப லாங்களா ?" பவ்யமாகக் கேட்டான். தரகர் கந்தசாமியைப் பற்றி கேள்வி ப்பட்டதில்லை. அதோடு தரகு தொழில் செய்பவன் தன்னை ஏன் பார்க்கவேண்டும் !மனத்தில் குழப்பம் தோன்ற " சரி. வரச் சொல் !" எனக் கூறிவிட்டு ஈ.ஸி. சேரில்சாய்ந்து கொண்டார் பரமசிவம். கண்ணாயிரம் சென்ற சில வினாடிக்களுக்குள் கந்தசாமி உள்ளே நுழைந்தார்.

" ஐயா..வணக்கம்ங்க ! " கக்கத்தில் ஒரு பையை வைத்துக்கொண்டு இருகரம் கூப்பியபடி வந்தவரைப் பார்த்தார் பரமசிவம். தூய வெண் ணிற அரைக்கைச்சட்டையும் வேஷ்டியும் அணிந்திரு ந்தார் கந்தசாமி. நெற்றி யில் விபூதி பூசி நடுவில் ஒரு ரூபா அளவுக்கு குங்குமம் இட்டிருந்தார். பார்க்க சிவனடியார் போல் இருந்தார். " வாங்க. உட்காருங்க !" பரமசிவம் சொல்ல எதிரில் இருந்த இருக்கை யில் அமர்ந்துகொண்டார் கந்தசாமி. " ஐயா ! உங்கக்கிட்ட ரகசியமான விஷயம் பேசவேண்டும். பக்கத்தில யாரும்ஒட்டு கேட்கமாட்டாங்களே ?" பெரிய பீடிகையுடன் கந்தசாமி ஆரம்பிக்க பரமசிவத்திற்கு என்னவோப் போலி ருந்தது ! " சும்மா சொல்லுங்க ! யாரும் இல்ல..." " ஐயா ! என் பேரு கந்தசாமி. நான் பார்க்கறது தரகு தொழில்." சிறிது தயங்கிவிட்டு தொடர்ந்தார் " உங்கப் பண்ணையில வேலை செய்யுற பெருமாள் ஒருஅனாதைதானே ?" கோபத்துடன் இடைமறித்த பரமசிவம்," மன்னிக்கணும். நாங்க அவனுக்கு பக்கபலமா இருக்கோம். பெருமாள் அநாதை இல்லை !" என்று கடு கடுத்தார்.

" இருக்கட்டும்ங்க ! ஆனால் அவனு க்கு சித்த ஸ்வாதீனமில் லேன்னு கேள்வி ! இல்லீங்களா ?" " சரி. உங்களுக்கு என்ன வேண்டும்? சீக்கிரம் கேட்டுவிட்டு கிளம்பற வழி யைப் பாருங்க !" சினத்துடன் கூறி னார் பரமசிவம். " கோபப்படாதீங்க...சரி. நேராகவே கேட்குறேன்...அந்த பெருமாள் எனக்கு வேணும். வேணுமானால் ஐம்பதா யிரம்கொடுக்கறேன். என்ன சொல்றீங்க ?" " ஹலோ...இது என்ன ஆடு மாடு விற்கிற மாதிரின்னு நினைப்பா ! மனுஷனு க்குப்போய் விலை பேசறீர். சாரி. பெருமாளை அனுப்ப முடியாது !" பரமசிவம் ஆக்ரோஷத்துடன் கூறினார். கந்தசாமி உதடுகளில் விஷமச் சிரிப்பு! " ஐயா ! நீங்க பெரியவங்க. இப்படி முகத்தில் அறையற மாதிரிசொல்லக் கூடாது.அந்த அரைலூசால உங்களு க்கு ஒரு பிரயோஜனமுமில்ல. சரி. விலையை டபுளா க்கறேன். ஒரு லட்சம் சம்ம தமா ?"

" மிஸ்டர் ! ஒருகோடி கொடுத்தாலும் பெருமாளை உங்களோடு அனுப்பமுடியாது. நீங்க கிளம்பலாம்." பரமசிவம் கை வாசல் நோக்கி நீட்ட கந்தசாமிக்கு வேறு வழி தெரியவில்லை. எழுந்து சில அடி தூரம் சென்றவர் மறுபடியும் திரும்பி வந்தார். " ஐயா ! இதுதான் உங்க முடிவா ?" " ஆமாம் ! நீங்க புறப்படலாம் !" " அப்போ நான் சொல்றத நல்லாக் கேட்டுக்குங்க. உங்களுக்கு ஒருவாரம் டைம் தரேன். அதாவது அடுத்த திங்கட்கிழ மைக்குள் உங்கக் கிட்டேர் ந்து சாதகமான பதிலை எதிர்பார்க் குறேன். இல்லைன்னா போலீஸ் துணையோடு அந்தப்பயலை நான் ஓட்டிக்கிட்டுப் போவே ன்.இது உறுதி !" சவால் விட்ட கந்த சாமி விடு விடு வென்று புறப்ப ட்டுச் செல்ல ஆடிப் போனார் பரம சிவம். இதுவரை ஒரு போலீஸ் கேஸ் பார்த்தது இல்லை. கோர்ட் படி ஏறியதுமில்லை.யாரோ ஒருவன் வந்து ஒரு அநாதைப்பயலுக்காக மல்லுக் கட்டுகிறான்.அதுவும் பணம் ஒருலட்சம் வேறு தருகி றேன் என்கி றான். இவனைக் கூட்டிக்கிட்டுப் போய் என்ன செய்வான் ? பரமசிவம் மூளையில் பொறி தட்டியது.ஒருவேளை அதற்காக இருக்குமோ. இருக்கலாம். பிச்சை க்காரர்கள், அநாதைப் பயல்கள் இதற்காகவென்றே இருக்கிறார்கள் ! அவர்களுக்கு சப்போர்ட் செய்ய யாரும் இல்லாத காரணத்தால் அவர்கள் நிலைமை மோசமாக இருக்கிறது. என்ன ஆனாலும் பெருமாளை இழக்கக்கூடாது என்ற திடமான முடிவு பரமசிவம் மனத்தில் எழுந்தது. ஐந்து வருஷம் முன்னால் எங்கிரு ந்தோவந்த பெருமாள் நேராக பண்ணைத் தோட்டத்துக்குச் சென்றான். டிரவு சரும் கிழிந்த சட்டையும் அணிந் திருந்தான். பண்ணையில் ஓய்வெ டுத்துக் கொண் டிருந்தபரம சிவம் படு த்திருந்த கட்டிலருகில் போய் நிற்க , எதேச்சையாக கண் திறந்து பார்த்த பரமசிவம் திடுக்கி ட்டார். சடாரென எழுந்து உட்கார்ந்தவர், "எல நீ யாருடா ? இங்க எங்க வந்தே ?" பரமசிவத்தை குறு குறுவென்று பார்த்தபடி, , " என் பேரு பெரு மாள் !எனக்கு சோறு வேணும். தற்ரயா ?" என்றான். அவன் தோற்றம், நடவடிக்கைகள் வேறு தினுசாக இருக்க புரிந்து கொண்டார் பரமசிவம். நல்ல சிவந்த நிறத்தில் கவர்ச்சி குடிகொண் டிருந்தது அவனிடம் ! இப்படிப்பட்ட பையனுக்குப் போய சித்த சுவாதீ னமா? நம்புவதற்கே கஷ்டமாயி ருந்தது.

அதன்பிறகு பெருமாள் அங்கேயே ஒட்டிக்கொண்டான். ஐந்துவருஷம் எந்தவிதத்தொல்லையுமில்லை. ஆனால் இன்று வந்த ஒரு புரோக்கர் வெடிகுண்டை தயாராய் வைத்துள்ளான். பரமசிவம் சென்னையில் இருக்கும் தன் மகன் சரவணனுக்கு ஃபோன் மூலம் நடந்ததை விலாவரியாகச் சொன்னார். அனைத்தையும் கேட்ட சரவணன், " நீங்கபயப்படாதீங்கப்பா ! அந்த தரகன் ஏதோஒரு கெட்ட நோக்கத்தோடுதான் பெருமாளை விலைக்கு கேட்குறான். நீங்க பெருமாளை இழக்காதீங்க. ஜாக்ரதையாப் பார்த்துக்குங்க ! ஏன்னா நம்மள நம்பி வந்தவன் ! " என்றான். ஒருவாரம் கழிந்தது. திங்கட்கிழமை புலர்ந்தது. இரவு பூராவும் தூங்கா திருந்ததால் பரமசிவம் கண்கள் கோவை ப்பழமாகச் சிவந்திருந்தன. எரிச்சல் வேறு !

சொன்னமாதிரி தரகர் கந்தசாமி இன்னும் கொஞ்சநேரத்தில் வரப்போ கிறான். அவனை துணிச்ச லோடு எதிர்கொள்ள வேண்டும் என மனசு நினைத்தாலும் தேகம் நடுங்கியது பரமசிவத்திற்கு. வருவது வரட்டும் என எண்ணியவாறுஎழுந்து பல் துலக்கினார். சமையல்கா ரர் தந்த காஃபியைப் பருகிவிட்டு அன்றைய தமிழ் நாளிதழைக் கையில் எடுத்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தபடி நோட்டம் விட்டார். மூன்றாம் பக்க த்தில் வெளியான செய்தி பரமசி வத்திற்கு உற்சாகம் தந்தது ! சட்டவிரோதமாக செயல்பட்ட தர கர் கந்தசாமி கைது செய்யப்பட்டார். அநாதைகளை ஆசைவார் தைகளில் மயக்கி கொண்டு சென்று அவர்களை மயக்கமுறச்செய்து , அவர்களிடமிருந்து சிறுநீரகம், ஈரல், இதயம், கண், தோல் இவற்றை களவாட ஏதுவாகியிருக்கிறார். அதனால் கந்தசாமியை போலீசார் சிறையில் அடைத்தனர்.. செய்தியைப் படித்த பரமசிவம் நிம்மதிபெருமூச்சொன்று விட்டார். 'பெருமாளை கொண்டு செல்ல நினைத்தாய். கடைசியில் அந்தப் பெருமாளே உன்னைக் கொண்டு போனார் ஜெயிலுக்கு ! எனக்கு கெடு வைத்தாய். ஆனால் அந்த ஆண்டவ னே உனக்குகெடு வைத்துவிட்டான்.' பரமசிவன் மனதில் இருந்த கவலை நீங்கியது.



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116



# ஊர்மிளையின் ஊமைமனம்

இரண்டாம் பாகம் 18



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## காலம் வென்றதம்மா ..

வசிஷ்டரும் "இனி உணர்த்து ஓர் முறைமை கண்டோம் இல்லை. இதற்கு முடிவு தான் என்ன?" என்றார். "மைந்தனும் அரசாளமாட்டானானால், ஆள்பவர் நாடு ஆள்க! நான் பனிபடர்காடு உடன் படர்தல் மெய்!" என்றான் பரதன்.

ராமனின் அவதார நோக்கம் அறிந்த தேவர்கள் கூடினர். இவ்வரி இராமனை இவன் கொண்டு ஒரு மேல் நம் செயல் ஒழுங்கு நடக்காது (அதாவது ராவண வதம்) என்று எண்ணிட, கூச்சலிட ஆரம்பித்தனர்.

"ஏழுனொடு ஏழும் வானகம் காத்தல் உன் கடமை!" என்றனர் ராமனிடம்.

வானவர் உரைப்படி ராமன் பரதன் இடத்தில் "நான் உன்னை இரந்தனன்; மறுத்தல் கூடாது இனி; என் ஆணையால் இவ்வுலகைக் காப்பாற்றுவாயாக!" எனச் சொல்லித் துணை மலர்த்தடக்கை பற்றினான் ராமன்.

"ஆம்! எனில், ஐய! ஏழு இரண்டு ஆண்டில் நீர் நாமநீர் நெடுநகர் அடைந்து நாளில் அரசாட்சி செய்திடாயானால் கூர் எரி நெருப்பில் விழுந்து உயிர் துறப்பேன்; அது உண்மை! நின் ஆணை கூறினேன்!" என்று பரதன் கூறினான்.

"ஆஹா! இதுதானே காலத்தின் தீர்ப்பு!" என்று சொல்லிய பரதன், ராமனிடம் திருவடித்தலம் செம்மையின் தந்தீக!" என்று ஏங்கியும் விம்மியும் சொல்ல "எம்மையும் தருவன இரண்டும் நல்கினன் ராமன்!"

ஈன்றவர் முதலிய எண் இல் சுற்றமும், சான்றவர் குழுவோடு தவத்தோர்களும் மற்றும் மூன்று நூல் கிடந்த தோள்முனியும் உடன் வரப் போயினன்.

ராமன் பாதுகை ஆட்சி நடத்த நந்தியம்பதியினை அடைந்தனர் யாவரும். பரதனும் அயோத்தி செல்லவில்லை.

தென் திசை நோக்கித் தன் துணைத்தம்பியும் தானும் தையலுடனும் நடந்து சென்றனன்.

இது ஒரு ராமனின் அவதார நோக்கம் ஆரம்பமானது ராவணனின் வதம் குறிப்பிடப்படுகிறது காலத்தால்.

காலம் தன்னை அறிந்து சிரித்துக் கொள்கிறது. காலத்தின் பிடிக்குள்தான் உலக உயிர்கள் அனைத்தும்.


இதோ வனவாச காலம் தொடங்கி விட்டது எனச் சொல்லிப் போனான் பரதன்.

சரியாக இரு ஏழ் ஆண்டுகள் பொறுத்திருப்பான், வராவிட்டால் நெருப்பில் உயிர் துறப்பான்.

இதோ இலக்குவன் இனி உறங்க மாட்டான். அவனுடைய உறக்கமும் நேற்றுடன் முடிந்து விட்டது. ஆனாலும் நெடுந்துயர் விலக உறக்கம் கண்களைச் சுழற்றியது இலக்குவனுக்கு.

"ஏன் இந்த உறக்கம்? யாரிடம் கேட்பது உறக்கத்தை நான் விரும்பவில்லை என்று! இமை மூடாமல் கழிந்த இரவுகள் நேற்று வரை பொய்யோ! இன்று என் மனத்தின் துயரங்கள் யாவும் போயினவோ? ராமனின் காவல்காரன் அல்லவா நான்! இமை மூடாது நின்று காவல் இரு! என்ற அன்னையின் வார்த்தைகள் அன்றோ ஒலிக்கிறதே! என் செய்வது?"

"இந்த உறக்கம் எனக்கு



வேண்டாம். வரும்போது ஒருமுறை சொன்னாள் அல்லவா ஊர்மிளா, அவளின் சொற்கள் காதில் விழுகின்றன! உண்டு களித்து உறங்கி இருப்பேன் என்றாளே! என் உறக்கத்தையும் அவளிடமே கொடுத்தால் இன்னும் உண்டு கழித்து உறங்குவாள்!" என்று நினைத்தான்.

ஆனாலும் உறக்கத்தைத் தவிர்க்க இயலவில்லை. எனவே அந்த உறக்கத்தின் உரிமைக்காரி நித்ராதேவி இடமே உரைப்போம். ஏதாவது தீர்வு கிடைக்குமா என்று நித்ரா தேவியை அழைத்தான்.

இதோ! அவளும் வந்தாள். இலக்குவன் வணங்கி "தாயே உறக்கம் எனக்கு வேண்டாம்!" என்றான். "இது உலக இயற்கை. பிறத்தலும் இறத்தலும், எழுவதும் வீழ்வதும், விழித்தலும் உறங்குதலும் மலர்தலும் கூம்புதலும், உதயமும், மறைதலும் இயற்கையின் இயல்பாம். உலக உயிர்கள் யாவும் பாதி விழிப்புடனும் பாதி உறக்கத்திலும் தானே வாழ்தல் இயல்பு!" என்றாள்.

"என்னால் எப்படி அதனை மாற்ற முடியும் என்று நீ நினைத்தாய்! காலத்தின் சுழற்சியில் எந்த மாற்றமும் செய்ய முடியாது. அது அதனின் நெறியில் சுற்றி வரும்!" என்றாள்.

"இல்லை நான் இமை மூடக்கூடாது. ஆம்! காலமும் இதனைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது. ஆம்! அது தீர்மானித்து விட்டது ஒரு கடமை உண்டு".

ராவணன் வதத்தில் அவனுடைய மகன் இந்திஜித் வாங்கிய வரத்திற்கு பதினான்கு ஆண்டுகள் தூங்காமல் இருக்கும் லக்குவன் அல்லவா அவனது மரணத்திற்குக் காரணமாவான். எனவே இலக்குவன் தூங்கக் கூடாது என முடிவு செய்தது காலம்.

உடனே நித்ராதேவியும் "இலக்குவா ஒரு உபாயம் உண்டு!" என்றாள்.

"சொல்லுங்கள் தாயே!" என்ற உடன்

"உன்னுடைய உறக்கத்தை யாராவது ஒருவர் ஏற்றுக்கொள்வாரானால், அவற்கு நீ தானம் செய்தால், உன் உறக்கம் உன்னை விட்டுப் போகும்!" என்று கூறினாள்.

" இதற்குச் சம்மதிப்பார் யாரேனும் உளரோ உலகில்?" என்றும் கேட்டாள்.

"ஏன் இல்லை! எனதருமைப் பத்தினி ஊர்மிளா என்பாள் இதற்குத் தயாராக இருப்பதாய் நான் வனம் ஏகும் முன்னரே சொன்னாள். ஆனால் ஒரு சங்கடம் உண்டு, அவளிடம் கொடுக்க நான் அயோத்தி அல்லவா போக வேண்டும்?" என வருந்தினான் இலக்குவன்.

ஆனால் காலத்திற்கு எல்லாமே தெரியுமே!

உடனே நித்ராதேவி "வரவேண்டும் என்று நிபந்தனை இல்லை! நானே அவரிடம் சென்று வாங்கிக் கொள்கிறேன்! இதோ புறப்பட்டு வந்து பதில் சொல்கிறேன்!" என்றாள்.

இதோ நித்ராதேவி ஊர்மிளை இடம் தயவுடன் "ஊர்மிளா! உன் பதி இலக்குவனின் உறக்கத்தையும் ஏற்றுக் கொண்டு உறக்கத்தை வாங்கி கொள்ள உனக்குச் சம்மதமா?" என்றாள்.

ஊர்மிளையின் மனது ஊமையானது.

கடைசியில் காலம்தான் வென்றதம்மா..

இருந்தாலும் தன் மனதில் தோன்றிய ஒரு கேள்வியையும் கேட்கத் துணிந்தாள்.

" அம்மா தேவி! நான் தயாராக உள்ளேன். ஆனால் ஒரு நிபந்தனை ஒன்று உண்டு!" என்றாள். "அது என்ன?" என்ற தேவியிடம்.

"என் அன்பர் இரு ஏழ் ஆண்டுகள் கழித்து அயோத்தி வந்தவுடன், நீ அவரை உடன் ஆட்கொள்ள வேண்டும். அக்கணமே என்னை விட்டுவிட வேண்டும்!" என்றாள்.

"சரி! இதனை இலக்குவனிடம் கூறி அதன்படியே செய்கிறேன்!" என்றாள் நித்ராதேவி.

ஊர்மிளையின் ஊமை மனது காலத்தின் கணக்கை மாற்றி அமைத்தோம் என்று எண்ணியது.

ஆம்! பரதன் என்ன சொன்னான் என்று நினைவுப்படுத்திப் பார்க்கிறது. "இரு ஏழ் ஆண்டுகள் கழித்து நீ அரசு நெறியை ஏற்பாயாக!" என்றானே, அந்த நிகழ்ச்சியில் லக்குவன் தன்னை இழந்து உறங்கட்டும்!

ஊர்மிளா தன் மனதிடம் "நான் கொடுக்கும் தண்டனையாக இருக்கட்டும் அன்பருக்கு!" சரிதானே! என் தீர்ப்பு!" என்றாள்.

இப்போது காலத்திடமும் அதனையே சொன்னாள். "ஆம்! ஊர்மிளையின் ஊமைமனம் இதைவிடச் செய்வது உண்டோ?"

வனம் ஏகிய போது தன்னினைவு இல்லாத தன் அன்பரைத் திரும்பி வரும்போது தன் நினைவு முன்னே வர, இல்லை இல்லை இல்லை மனம் முழுவதும் ஊர்மிளையின் இச்சொற்கள் நினைவிருக்க, நினைவை வரவைத்தது, ஊர்மிளையின் மனத்திற்குச் சந்தோஷமாக இருந்தது.

இனி இருஏழு ஆண்டுகள் கழித்து வந்த லக்குவன் ஊர்மிளையின் நினைவுடன், கழித்த நாட்களையும் சம்பவங்களையும் மூன்றாம் பாகத்தில் பார்ப்போம்...

- தொடரும்

# சிவபெருமானின் பலவகை தாண்டவமும் ஆடிய தலமும்!



1. சிவபெருமான் காளிகா தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு? காளிகா தாண்டவம் - படைத்தல் செய்யும் போது. தலம் - நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி. ஆடிய இடம் - தாமிர சபை

2. சந்தியா தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு? சந்தியா தாண்டவம் - காத்தல் செய்யும் போது. தலம்- மீனாட்சி அம்மன் கோவில்,மதுரை. ஆடிய இடம் - வெள்ளி அம்பலம்

3. சங்கார தாண்டவம் ஆடுவது எப்போது? சங்கார தாண்டவம் - அழித்தல் செய்யும் போது.

4. திரிபுர தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு? திரிபுர தாண்டவம் - மறைத்தல் செய்யும் போது. தலம்- குற்றாலநாதர் கோவில், குற்றாலம். ஆடிய இடம் - சித்திர சபை.

5. ஊர்த்துவ தாண்டவம் ஆடுவது எப்போது?எங்கு? ஊர்த்தவ தாண்டவம் - அருளல் செய்யும் போது. தலம்- ஊர்த்தவதாண்டவர் கோவில், திருவாலங்காடு, ஆடிய இடம் - இரத்தின சபை.

6. ஆனந்த தாண்டவம் ஆடுவது எப்போது?எங்கு? ஆனந்த தாண்டவம் - இவ்வைந்து செயல்களையும் செய்யும் இடம். தலம்- நடராஜர் கோவில், சிதம்பரம். ஆடிய இடம் - கனக சபை.

7. கௌரி தாண்டவம் ஆடுவது எப்போது?எங்கு? கௌரி தாண்டவம் - பார்வதிக்காக ஆடிய போது. தலம்- திருப்பத்தூர்.

8. அஜபா நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? அஜபா நடனம்- சிவபெருமான் மேல்மூச்சில், கீழ்மூச்சில் (தவளை போல்) அசைந்தாடிய நடனம். ஆடிய தலம்- திருவாரூர்

9. உன்மத்த நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? சிவபெருமான் பித்தனைப் போல் தலை சுற்றி ஆடிய நடனம் உன்மத்த நடனம் ஆகும். ஆடிய தலம்- திருநள்ளாறு.

10. தரங்க நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? தரங்க நடனம் என்பது கடல் அலை போல் அசைந்து ஆடுவது. இதை சிவபெருமான் நாகப்பட்டினத்தில் ஆடினார்.

11. குக்குட நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? குக்குட நடனம் என்பது கோழி போல் ஆடுவது. ஆடிய தலம் - திருக்காறாயில்.

12. பிருங்க நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? பிருங்க நடனம் என்பது வண்டு மலரைக் குடைவது போல் ஆடுவது. இதை சிவபெருமான் ஆடியது இடம் திருக்கோளிலி ஆகும்.

13. கமல நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? கமல நடனம் என்பது தாமரை காற்றில் அசைவது போல் ஆடுவது. ஆடிய தலம்-திருவாய்மூர்.

14. ஹம்சபாத நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே? ஹம்சபாத நடனம் என்பது அன்னம் போல் அடியெடுத்து ஆடுவது. ஆடிய தலம் - திருமறைக்காடு (வேதாரண்யம்)



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

## தினம் ஒரு தலைவர்கள்


# ஸ்ரீஅரவிந்தர் வரலாறு



ஸ்ரீஅரவிந்தர் வட இந்தியாவின் கொல்கத்தா நகரில் பிறந்தார். கிருஷ்ண தனகோஷ், ஸ்வர்ணலதா என்போரின் மகன். ஐந்து வயதான போது மூத்த சகோதரர்கள் விநய பூஷன், மன்மோகன் ஆகியோரோடு டார்ஜிலிங்கில் லோரெட்டோ கான்வென்ட்டில் சேர்ந்தார். 1879-இல் கல்வி கற்பதற்காகச் சகோதரர்களோடு இங்கிலாந்து சென்றார். கேம்ப்ரிட்ஜில் கல்வி கற்கும் போதே புரட்சிகரமான சிந்தனையுடையவராகக் காணப்பட்டார். தாமரையும் குத்து வாளும் என்ற ரகசிய சங்கத்தில் உறுப்பினரானார். பெப்ரவரி 1893-இல் இந்தியா மீண்டார். அரவிந்தர் தாயகம் திரும்பிய கப்பல் விபத்துக்குள்ளாகி அவர் மறைந்தார் என்ற தவறான தகவலால் அதிர்ந்து தந்தையார் இறந்தார். அதனால் தாயார் சுவர்ணலதா தேவி மனநோயாளி ஆனார். இந்தியா திரும்பிய அரவிந்தர், பரோடா சமஸ்தானத்திலும் அரசுப் பணிகளிலும் கடமையாற்றினார்.

ஸ்ரீஅரவிந்தரின் சிலையுரு சுதந்திரப் போராட்டத்தில் இணைதல்

1906-இல் பரோடாவை விட்டு நீங்கி கொல்கத்தா சென்றார்.1906-இல் கல்கத்தா தேசியக் கல்லூரியின் முதல் முதல்வரானார். பரோடாவில் பணிபுரியும் காலத்தில் ஏற்பட்ட இந்தியப் பண்பாட்டுணர்வும் பின்பு ஏற்பட்ட வங்கப் பிரிவினையும் அவரை இந்திய விடுதலைப் போராட்டத்தில் இணையச் செய்தன. 1907 மற்றும் 1908-ஆம் ஆண்டுகளில் இருமுறை அந்நிய ஆட்சியினரால் சிறை வைக்கப்பட்டார்.



ஆன்மீகத்தில் ஈடுபாடு

1904-ஆம் ஆண்டிலிருந்தே பிரணாயாமம் பயிலத் தொடங்கிய போதும் சிறை வாழ்க்கை யோக நெறியில் அதிகம் அக்கறை கொள்ள வைத்தது. ஸ்வராஜ் (விடுதலை) என்பதை அரசியற் கண்ணோட்டத்தில் மட்டுமன்றி ஆன்மீகக் கண்ணோட்டத்திலும் பொருள் கொண்டார். பரமனின் ஆட்சியைப் பூமியில் நிலை நாட்டுவதற்கு விடுதலை முதற்படி என்று கருதியவர்.

1909-இல் சிறையிலிருந்து விடுதலை பெற்றதை அடுத்து அரசியல் இயக்கங்களைத் தவிர்த்துக் கொண்டு யோக நெறியில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். 1910-இல் ஷாம்சுல் ஆலம் கொலை வழக்கில் அரவிந்தர் மேல் குற்றம் சாட்டப்பட்டது. கைதாவதிலிருந்து தப்பிக்க அரவிந்தர் சந்திர நாகூருக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்து ஏப்ரலில் மாறுவேடத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரிக்கு வந்தார். ஆங்கிலேய அரசிற்கு எதிரான கொந்தளிப்பில் இருந்து முற்றாக விலகிக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றதை அடுத்து யோகநெறியிலே தன்னைப் பக்குவப்படுத்துவதில் முழுக்கவனத்தையும் செலுத்தினார். அங்கு ஆசிரமம் அமைத்து தியானத்திலும் யோகத்திலும் ஈடுபட்டார். பாரதியாரோடு நட்புக் கொண்டார். சாவித்திரி காவியத்தைப் படைத்தார்.

அரவிந்தரின் சிந்தனைகள்

ஸ்ரீ அரவிந்தர் தனது சிந்தனைகளை ஆர்யா என்ற தனது ஆன்மீக இதழில் (1914 - 1921) எழுதினார். யோகத்தின் குறிக்கோள் உள்ளார்ந்த தன்வளர்ச்சியாகும். தன் வளர்ச்சியின் பரிணாமப்படிகள் மனிதனின் பூவுலக வாழ்வினைத் தெய்வவடிவில் அமைக்கும் என்று நம்பினார். உயர்நிலை மனத்தை உருவாக்கும்போது மனித வாழ்வின் இயல்பே மாறிவிடும் என்றும் தெய்வீக நிலை தோன்றும் என்றும் வற்புறுத்தினார். அரவிந்தர் சனாதன தர்மத்தினை ஆழமாக நோக்கியவர். வேதம், உபநிடதம், கீதை பற்றியும் இந்தியப் பண்பாடு பற்றியும் தமது கருத்துக்களை முன்வைத்தார்.

# 16 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நடிக்க வரும் ரம்பா ரசிகர்கள் உற்சாகம்



90 கிட்ஸ்களின் விருப்பமான நடிகைகளில் முக்கியமானவர் ரம்பா. 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் 'அழகிய லைலா...' பாடலில் ரம்பாவின் உடை பறக்கும் ஆட்டத்தை யாருமே மறக்க முடியாது. அனைத்து முன்னணி நடிகர்களுடனும் ஜோடி சேர்ந்து நடித்துள்ள ரம்பாவுக்கு ரசிகர்கள் ஏராளம்.

'தொடை அழகி' என ரசிகர்களால் வர்ணிக்கப்பட்ட ரம்பா, 2010-ம் ஆண்டு தொழில் அதிபர் இந்திரகுமாரை திருமணம் செய்தார். இவர்களுக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர். ரம்பா, தற்போது கனடாவில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். சுமார் 16 ஆண்டுகளாக சினிமாவில் இருந்து விலகி இருந்த ரம்பா, அவ்வப்போது சின்னத்திரையில் மட்டும் தலைகாட்டி வந்தார். தற்போது விரைவில் வெள்ளித்திரைக்கும் ரீ-என்ட்ரி கொடுக்கிறார். இதற்காக உடற்பயிற்சி மற்றும் உணவு கட்டுப்பாட்டை கடைப்பிடித்து 'ஸ்லிம்' ஆகியுள்ளார். புதிய கதைகள் கேட்டு வரும் ரம்பா ஓரிரு கதைகளை தேர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

தமிழில் 2010-ம் ஆண்டு வெளியான 'பெண் சிங்கம்' படத்தில் ரம்பா கடைசியாக நடித்திருந்தார். இதன்மூலம் கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்கு பிறகு சினிமாவில் மறுபிரவேசம் எடுக்கவுள்ளார் 49 வயதாகும் ரம்பா. இது ரசிகர்களுக்கு உற்சாகத்தை கொடுத்துள்ளது.



நடிகை விஜயலக்ஷ்மி சென்னை 28 படம் மூலமாக பிரபலம் ஆனவர். அதற்கு பிறகு பல படங்களில் நடித்தார். அவர் பிரபல இயக்குனர் அகத்தியனின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயலக்ஷ்மி தற்போது டிவி நிகழ்ச்சிகளில் தான் அதிகம் கலந்துகொண்டு வருகிறார். இந்நிலையில் கிளாமர் லுக்கில் அவர் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோசூட் ஸ்டில்கள் இணையத்தில் வைரல் ஆகி இருக்கிறது. இதோ பாருங்க.

# திருமண பத்திரிகை?.. இணையத்தில் வைரல்




தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவுக்கும் நேஷனல் கிரஷ் என்று வர்ணிக்கப்படும் ராஷ்மிகா மந்தனாவுக்கும் திருமணம் நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகியது.

இந்நிலையில் இருவரின் திருமண பத்திரிகை புகைப்படம் இணையத்தில் வேகமாகப் பரவி வருகிறது. இதன் உண்மைத் தன்மை தெரியாவிட்டாலும், பலரும் இதை வைரல் செய்து வருகின்றனர்.


அந்தப் பத்திரிகையின்படி, இவர்களது திருமணம் பிப்ரவரி 26-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

"எங்கள் குடும்பத்தினரின் ஆசியுடன் பிப்ரவரி 26 அன்று ஒரு சிறிய விழாவில் ராஷ்மிகாவும் நானும் இணைகிறோம். எங்களின் இந்தப் புதிய பயணத்திற்கு உங்கள் ஆசி வேண்டும்" என்று அதில் எழுதப்பட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் இந்தத் திருமணம் எளிமையாக நடைபெறும் என்றும், அதைத் தொடர்ந்து மார்ச் 4-ஆம் தேதி ஐதராபாத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு நிகழ்ச்சிக்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

'கீதா கோவிந்தம்', 'டியர் காம்ரேட்' ஆகிய படங்களில் இணைந்து நடித்த இந்த ஜோடி, நீண்ட நாட்களாகக் காதலித்து வந்ததாக கிசுகிசுக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# பிரபல ஹாலிவுட் நடிகர் ராபர்ட் டுவால் மறைவு



தி காட்பாதர்', 'அபோகாலிப்ஸ் நவ்' உள்ளிட்ட பல உலகப் புகழ் பெற்ற திரைப்படங்களில் நடித்தார்.

மூத்த ஹாலிவுட் நடிகர்களில் ஒருவரான ராபர்ட் டுவால் மறைந்த செய்தி சினிமா உலகை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

95 வயதான ராபர்ட் டுவால் நேற்று தனது வீட்டில் காலமானார்.

அவரது மனைவி லூசியானா டுவால் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எனது அன்புக்குரிய கணவர், சிறந்த நண்பர் மற்றும் நம் காலத்தின் மிகச்சிறந்த நடிகர்களில் ஒருவருக்கு நாங்கள் விடை கொடுத்தோம்.

பாப் வீட்டில் அன்பானவர்களால் சூழப்பட்ட நிலையில் அமைதியாக மறைந்தார். உலகிற்கு அவர் ஒரு ஆஸ்கார் விருது பெற்ற நடிகர், இயக்குனர் மற்றும் கதைசொல்லி. ஆனால் எனக்கு அவர் எல்லாமும் ஆனவர்" என்று தெரிவித்துள்ளார்.

'தி காட்பாதர்', 'அபோகாலிப்ஸ் நவ்' உள்ளிட்ட பல உலகப் புகழ் பெற்ற திரைப்படங்களில் இவரது நடிப்பு அனைவரையும் கவர்ந்தது.

1983-ஆம் ஆண்டு வெளியான 'டெண்டர் மெர்சீஸ்' திரைப்படத்தில் நாட்டுப்புறப் பாடகர் வேடத்தில் எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் விருதை வென்றார். மேலும் 'தி அப்போஸ்தல்' உள்ளிட்ட சில படங்களை இயக்கியும் உள்ளார்.

ராபர்ட் டுவாலின் மறைவு சர்வதேச திரையுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.



நடிகை நிவேதா பெத்துராஜ் திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்ததாக போட்டோ உடன் அறிவிப்பு வந்தது எல்லோருக்கும் நினைவிருக்கும். ஆனால் அதற்கு பிறகு அவர் திடீரென போட்டோக்களை நீக்கிவிட்டார். நிவேதா திருமணத்தை நிறுத்திவிட்டதாக செய்தி வந்தது.

இது ஒருபுறம் இருக்க தற்போது நிவேதா ட்ரெண்டி லுக்கில் போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த ஸ்டில்கள் ரசிகர்கள் மத்தியில் வைரல் ஆகி இருக்கிறது. இதோ..

# ரீ-ரிலீஸ் ஆகும் விஜய் சேதுபதியின் 'சூது கவ்வும்' படம்!




நலன் குமாரசாமி இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் 2013ஆம் ஆண்டு வெளியான 'சூது கவ்வும்' திரைப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

இப்படத்தில் சஞ்சிதா ஷெட்டி, அசோக் செல்வன், பாபி சிம்ஹா, ரமேஷ் திலக், கருணாகரன் என பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

ஆள் கடத்தலை காமெடியான பாணியில் நலன் குமாரசாமி அமைத்த விதம், டார்க் காமெடி அம்சங்கள் நிறைந்த காட்சிகள் என படம் கல்ட் கிளாசிக் ஆக மாறியது.


இப்படத்தின் இரண்டாம் பாகம் 'சூது கவ்வும் 2 - நாடும் நாட்டு மக்களுக்கும்' எம்.எஸ். அர்ஜுன் இயக்கத்தில் மிர்ச்சி சிவா நடிப்பில் 2024 ஆம் ஆண்டு வெளியானது.

இந்நிலையில் அணமைக் காலமாக கல்ட் கிளாசிக் படங்கள் ரீ ரிலீஸ் செய்யப்பட்டு வரும் வரிசையில் சூது கவ்வும் முதல் பாகம் ரீ ரிலீஸ் ஆக உள்ளது.

வரும் 20 ஆம் தேதி "சூது கவ்வும்" ரீ-ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த படத்திற்கான டிக்கெட் கட்டணம் ரூ.100 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக காதலர் தினத்தை முன்னிட்டு, காதலர் தினம், மௌனம் பேசியதே, மின்னலே, உயிருள்ளவரை உஷா ஆகிய படங்கள் ரீ ரிலீஸ் ஆகி திரையரங்குகளில் ஓடிகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# துருவ் - ருக்மணி நடிப்பில் புதிய திரைப்படம்?






நடிகர்கள் துருவ், ருக்மணி வசந்த் இணைந்து நடிக்கும் திரைப்படம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

பைசன் திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து துருவ் விக்ரம் எந்த திரைப்படத்தில் நடிப்பார் என எதிர்பார்ப்பு இருக்கிறது. பாலிவுட்டில் ஹிட் அடித்த, கில் தமிழ் ரீமேக்கில் துருவ் நடிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அத்திட்டம் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், நடிகர் துருவ் அறிமுக இயக்குநர் தீபக் ரெட்டி இயக்கத்தில் நடிக்க உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில், நாயகிகளாக ருக்மணி வசந்தும், ஸ்ரீலீலாவும் நடிக்க உள்ளனராம்.

தீபக், மானசே நமஹே என்கிற குறும்படம் மூலம் கவனிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


Happy Birthday!
Wishing you the happiest and brightest day ever! May you have all the happiness your heart can hold
VETRI


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
தினம் தோறும் பேப்பர்பாய்
www.tamilnaduepaper.com
www.anandabhaskar.com
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!



6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com




பொக்கிஷப் பெட்டிக்குள்
குனிய தலைகுப்புற
விழுந்தேன் கவியீர்ப்பு
விசையில் !

யாரடித்தாலும்
அழும் விழிகள்
ஒருபோதும்
அழுவதில்லை
இமைகளடிக்க!

ஒரு தடைக்கல்லை
படிக்கல்லாக
சிறப்பான முறையில்
மாற்றியமைக்கக்கற்றதும்
நன்றி சொல்லிக்கிடக்கிறது..
என்னைப் போலவே
ஒரு நிறைவோ
என்று நினைத்து
அதில் ஏறிக்கடக்கும்போதே..
'எனக்கு எப்போ அந்த
பாக்கியம்'
இன்னொரு தடைக்கல்
எதிரே நின்று கேட்கிறது?



**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்

## இறை!

இறையை இறைஞ்சுவோம்..
நல் இறையை
இறைஞ்சுவோம்
நிறைவைப் பெறுவோம்..நல்
நிறைவைப் பெறுவோம்!

போற்றிப் பாடுவோம்
நாம் போற்றிப் பாடுவோம்
சாற்றி மகிழ்வோம் நாம்
சாற்றி மகிழ்வோம்!

ஒன்றே குலமாம்..ஆம்
ஒருவனே தேவனாம்
நன்றே நினைப்போம்..நாம்
நன்றே நினைப்போம்!

அவனின்றி..ஓர்
அணுவும் அசையாதே
தவமே செய்திட..நாம்
தவறாது துதிப்போம்!

சக்தியும் அவனே..ஆம்
பக்தியும் அவனே
எஃகாய்ப் பிடித்தால்
முக்தியைக் கொடுப்பானே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## வகுப்பு

பள்ளியில் வகுப்பு
பரம விருப்பு
துள்ளும் இளமையில்
துடிப்பான படிப்பு
வெற்றியில் முகமலர்ச்சி
வீட்டினர் தரும்முயற்சி
கற்றதும் கற்பதும்
கவலைகள் போக்கவே
காலை உணவுடன்
ஆரம்பப்(ம்) பாட
சாலையில் வாழ்க்கை
சலனமற்ற தாகவே
காலம் எல்லாம்
நிலைக்க வேண்டும்!
வகுப்பறை உயிரூட்டி
வாழ்க்கை வழிகாட்டும்
தகுந்தார் ஆசிரியர்
தரமிகு நல்லவர்!!

**வைரமணி** , சென்னை

## நரைதிரை:

நரைதிரையோடே
நாட்பட்ட முதுமை
சிறைகொண்ட வறுமை
சோகத்தில் நிறைந்ததாய்
உறவுகள் துணையில்லை
உற்றவர் யாருமில்லை
துறவறம் போலே
துணையொன்றே நீயாக
இறுதிக் காலத்தில்
இப்படி வாழ்க்கை!!!

**வைரமணி**
சென்னை

1. மரம் வைப்பவனுக்கு
கூலி இல்லை மரம்
வெட்டுபவனுக்கே கூலி
மரம் வைப்பவனுக்கு கூலி
என்று சொல்லிப் பாருங்கள்
இந்த நாடே பசுமையாக
மாறும்


2.திருக்குறளை படித்துவிட்டு
யாரும் கொலை செய்தேன்
என்று கூறவில்லை ஆனால்
கீதையைப் படித்ததால்
காந்தியை கொலை
செய்தேன் என்றான் கோட்சே

3. மது அமைதியாக தான்
இருக்கும் அதை குடித்தவன்
ஆட்டம் போடுவான்
பணம் அமைதியாகஇருக்கும்
அதை வைத்திருப்பவன்
ஆட்டம் போடுவான்
பிணம் அமைதியாக
இருக்கும் அதைத் தூக்கிச்
செல்பவர்கள்
ஆட்டம் போடுவார்கள்

4. ஒரு காலத்தில்
நெருங்கிய நண்பர்களாக
இருந்தவர்கள் இன்று வெறும்
நம்பர்களாக இருக்கிறார்கள்
செல்போனில்

5. சொந்தக்காரர்களிடம்
கடன் கேட்டு பாருங்கள்
கடனை விட அறிவுரைகள்
அதிகமாக கிடைக்கும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## " என் பொன் நிலவு"

பட்டுப் பாவாடையில்
குட்டி நிலவு! கட்டி வைத்த
முல்லையாய் குறு நகை

பிட்டு வைத்த தாமரையோ
விழிகள் சிட்டு நீதான்
பெற்றவளின் பெருமை!

கொட்டி வைத்த மலர்குவியல்
நீயோ! தட்டித்தட்டி இறைவன்
செய்த சிலையோ

விட்டு விட மாட்டேனடித்
தங்கம் உனை!
எட்டு பிறவி எடுத்தாலும்
நீயேயென் பொன்மகள்!

சின்ன சின்ன நடை நடக்கும்
சிங்காரக் கண்ணே!–உந்தன்

செவ்வாயில் சிந்துவதே
தேனாகும் பொன்னே!

தூணோரம் சாய்ந்து நீ
சிரிக்கின்ற அழகில்,
வெள்ளிச் சில்லறையும்
சிதறுதடி செவ்வல்லிப் பூவே!

மழலை தோய்ந்த உன்
மொழிகள்மதுரகீதங்கள்!.
விழி விரித்து விரல்
கோர்த்தால் அபிநயங்கள்!

குழைகின்ற கன்னத்தில்
முத்திக்கும் தருணம், உயிர்
வரைக்கும் தித்திக்கும்
உந்தன் கனியிதழ் முத்தம்!

ஒளிந்து கொண்டு
காட்டுவாய் கண்ணாமூச்சி,
பிடிக்கு முன்னே கையில்
விழுவாய் கண்ணை மூடி!

பால்போலும்
வெளுத்திருக்கும் , உன்
பச்சை
வயல் மனசு,
எப்போதும்
வளமோடு
வாழுட்டும்
கண்ணே!



**மீனா சேகர்**



## எச்சரிக்கும் மலர் !!

காதலர் தினத்தில்
சிகப்பு ரோஜாக்கள்
விற்பனை சிறக்கும் !!

சிகப்பு ரோஜா வாடினால்
கருகிக் காட்சியளிக்கும் !!



காதலும்
கசந்து
தோல்வியானால்
வாழ்வும் அது
போல் தான் !!

அம்மலரின்
எச்சரிக்கை
காதலர்களுக்கு !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி.



தெருவில் நடைபயிற்சிக்காக
தான் வந்தாள் ஏனோ
திருவிழா ஆனது

சிரித்து போனதால்
எனக்குள் வெடித்து
வருகிறது காதல் கவிதை!

சிதறிய கவிதைகளில்
எல்லாம் சிந்திய உன்
சிரிப்பின் சாயல்கள்!

**லி.நௌஷாத் கான்**

## மாயை

மானிடரே!
அதிர்ஷ்டம் என்பது
ஓர் மாயை துரதிர்ஷ்டம்
என்பது நம்பிக்கை சூரியனைப்
பிடித்துக்கொண்ட
கிரகணம்!

நரிமுகத்தில் விழித்தால்
நன்மை வருமா?
தந்திரம் நிறைந்த
நரியோ புத்திசாலி
மனிதா நீ அறிவிலி!

என்னைப்பார்த்தால்
யோகம் வருமென
கழுதைப்படத்தை
மாட்டி வைக்கிறாய்
கழுதையோ பொதி சுமக்கிறது
உன்னை பூமிசுமக்கிறது!

ராசிக்கல் மோதிரத்தை
அணிந்து கொண்டு
உறங்கினால்
ஐஸ்வர்யமெல்லாம்
ஐக்கியமாகி விடுமா?

யோகத்தால் போகத்தை
அடைய இயலாது தேகத்தை
வருத்தி உருவாக்கு
சொர்க்கத்தைத்தரித்திரமே
என்று ஏசப்பட்டவர்களெல்லாம்
சரித்திரம்
படைத்திருக்கிறார்கள்!

நாள்காட்டியின்
ராசி பலனில்
உனக்குத்துன்பமென்று
அச்சாகி இருக்கலாம்
நீ நினைத்தால் அன்றைய
பொழுதை இன்பமய
மாக்கலாம்!

விஞ்ஞான விந்தைகளும்
அளப்பரிய சாதனைகளும்
அதிர்ஷ்டத்தால் வந்தவையா?
மானிடரே!



சோம்பேறிகளின்
விழித்திரையை
மறைத்துக் கொண்ட
மாயைதான் அதிர்ஷ்டம்!

**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

## "வலைதள மேனியில் வகை வகையாய் அழுக்குகள்"

ஒவ்வொரு நாளும்
ஓராயிரம் அழுக்குகள்
காலை காபியோடு
கைப்பேசித் திரை வழியே!

உண்மை குளிக்க
நீரே இல்லை!
பொய் மட்டும்
பெருக்கெடுத்து
புனிதமாய்ப் பாய்கிறது!

கத்தி போல் கூர்மையான
தலைப்பு... உள்ளே... காற்று
நிரம்பிய கண்ணாடிக்குடுவை!

அழுது கொண்டிருக்கிறது
ஒரு முகம் அங்கு!
சிரித்துக் கொண்டிருக்கிறது
அதே முகம் இங்கு!

இரண்டுக்கும் நடுவில்
சிக்கியிருப்பதே நம் பங்கு!

விரைவுச் சாலையில்
விபத்து! முட்டுச் சந்தில்
நின்று போன மூச்சு!

யார் இடித்தது? என
யாரும் கேட்கவில்லை!
யார் இறந்தது என
யாருக்கும் அக்கறையில்லை!

ஒவ்வொரு ஷேரும்
ஒரு காயம்! ஒவ்வொரு
ஃபார்வேர்டும் ஒரு கேவலம்!
நாம் பார்த்துக் கொண்டே
செய்கிறோம்.

அழுக்குகள் அதிகம்
அழுக்காறு இல்லை!

சுத்தம் செய்ய
சாத்தியமேயில்லை!

உண்மை தாமதமாக வந்தாலும்
காயங்களுக்கு மருந்திடும்!
பொய் வேகமாக வந்து
உலகை அழுக்காக்கும்!

ஒவ்வொரு நாளும்
ஓராயிரம் அழுக்குகள்
கழிவுநீராய் அல்ல! கணினித்
திரையிலிருந்து
கண்களுக்குள் ஊறும்
நஞ்சாய்!

உண்மை அங்கு
தூக்கில் தொங்க
விடப்பட்ட கைதி!
பொய் அங்கு பூமாலை
சூட்டப்பட்டபொம்மை அரசன்!

அறிவில்லாத விரல்கள்
லைக் எய்யும் வில்லாளிகள்!
ஷேர் என்ற பட்டன்
கொலைக்கார விரல்!

ஒரு பொய்யை நூறு பேர் பகிர
அது உண்மையாகுமா?
நூறு பேரின் பொறுப்பின்மை
மட்டுமே புலனாகும்!


பகிர்வதற்கு முன்
ஆராயக் கற்றுக்கொள்!
விரும்புவதற்கு முன்
விபரம் கேட்டுக்கொள்!


இல்லையேல் நாளை உன்
பெயரே பொய்யின்
தலைப்பாகி
ஓராயிரம்
அழுக்குகளில்
ஒன்றாகிவிடும்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்






# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: மையிருள் மெய்
ஆசிரியர் : நாரணோ ஜெயராமன்
வெளியீடு வித்யுத் பதிப்பகம்:
விலை : ₹90 தொடர்புக்கு:
9003107654

நாராணோ ஜெயராமன் மறைவிற்கு பின் வெளியான அவரது கவிதைத் தொகுப்பு. இதிலிருந்து சில கவிதைகள் இங்கே:

**மையிருள் மெய்**

அகாலத்தில் எழுந்து தொடர்ந்த குரைப்பு கண்டது மெய்யா? மெய்யாய்க் கண்டதா? பின்னர், மூடபிரமையின் கூற்றென்ன உணர்ந்து தெளிந்து மௌனத்தில் நிலைத்ததா?

**இரஞ்சல்**

காரியமும் பலனுமாய் நீயே இரு க்ருஷ்ண, என்னை விட்டுவிடு!

**வரலாறு**

புழக்கடையில் கல் உரல், அம்மி, குழவிகள் சாட்சி பூதங்களாய்!

**தேடல்**

இன்னும் இன்னும் என்னை அடையாளம் காணத் தடுமாறிக்கொண்டுதான் இருக்கிறேன்!


**ஸ்ரீகாந்த் திருச்சி**

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்:
பச்சைமலை மர்மம்
ஆசிரியர்கள்: நந்து சுந்து–
பாலகணேஷ்
வெளியீடு: பிம்பம் பதிப்பகம்
விலை : ₹180
தொடர்புக்கு:9840075598


*"ஊட்டி வரை உளறு" எழுதிய அந்த இருவர் இப்போது அமானுஷ்யத்துடன் களமிறங்கி உள்ளனர்.*

*பச்சை மலை மர்மம் என்ன? யார் அந்த சத்ரு சம்ஹார சித்தர்?நீட் தேர்வு எழுதும் நிலையில் இருக்கும் பிரதிமா, எழுத்தாளர் சாய்பிரசாத் மகள் பாமினி துப்பறியும் நிபுணர் கிஷனின் உதவியாளர் சுரபி, கிஷனின் வாடிக்கையாளர் மகள் ரேகா இவர்களையெல்லாம் செண்பகம் ஆவி புகுந்து ஏன் படுத்துகிறது? தண்ணீர் நிறைய குடிக்கிறது? மர்மங்கள் கிஷனால் விடுபட்டதா? சித்தரிடம் போட்ட சவாலில் ஜெயித்தானா?*




*பூசாரி, கோடன், பிடாலி (பூனை) இவர்களின் பங்கு என்ன?தெரிந்து கொள்ள படியுங்கள்.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**



## ஒப்பனை

அழகான உன் மேனியில்
ஆடையுடுத்தி ஆபரணமிட்டு
அத்தர்பூசி
அழகுப்பார்ப்பதுப்போல,,,

கற்பனையும் ~ இங்கு
ஒப்பனை செய்யப்படுகிறது
விற்பனைக்கு


உன்னால் புறக்கணிப்படுவது
வேறுயாரோ ஒருவரால்
விரும்பி ஏற்கப்படுகிறது

இங்கு நல்லவர்களையும்
தீயவர்களையும்
நீயே தீர்மானிக்கிறாய்



பிரபஞ்சத்தில்
பஞ்சமில்லை
கற்பனைக்கு
பார்வையை
விசாலமாக்கு
விடியல்கள்
நமக்காகட்டும்,,,!

**நாகைஆசைத்தம்பி**
கோவை



## மாலைமதி

உன் பார்வை சூரிய பார்வை
என்று ஊரெல்லாம் பறை
சாற்றுகிறார்கள்!
நான் உன்அருகில் வரும்
போது மட்டும்நீ
மாலைமதியாவதன் மர்மத்தை
இவர்களுக்கெல்லாம்
எப்பொழுது சொல்லலாம்?!
என்னைச்சந்திக்க வரும்
தினங்களில் நீ உன்
கண்களிலுள்ள
தோட்டாக்களை
வீட்டில் வைத்து விட்டு வரும்
காரணம் ஒன்றிற்காகவே
உனக்குக்கூடுதல்
முத்தங்களுக்கு
இதழொப்பமிடுகிறது
என் காதல் உதடுகள்!
நீ அணைக்கும் போது
ஒன்றாகவும் விலகும் போது
ஒன்றாகவும் மாறுகிறது
என்னைச்சுற்றியுள்ள தட்ப
வெப்ப நிலை!
நானிருக்க பயமேன்?
என்று சொல்கிறது என்
அன்பு அதரங்கள்!
நீயிருப்பதால் தான் அச்சமே
என்று
அலறுகிறது
உன் காதல்
கண்கள்!



**முத்து**
**ஆனந்த்**
வேலூர்

போதும் என்றாகிடுதே
போதும் போதும் என்றாகிடுதே
நான் கேட்டு ரசித்த ருசித்த
மகிழ்ந்த ஒவ்வொன்றும்
போதும் போதும் என்றாகிடுதே
விரும்பி உண்ட
உணவெல்லாம் இன்று
வேண்டாமே என்கிறேன்
பண்டிகைக்கு துணி என்றால்
வேண்டுமா ? உள்ளதே
போதாதா ? என்கிறேன்
தினம் பார்த்து மகிழ்ந்த
திரைப் படங்களும்
நிழல் போலும் தெரிகிறதே
பேசி மகிழ சேர்ந்ததொரு
உறவினர் கூட்டத்திலே
பாசாங்கு பேச்சுக்களும்
பொல்லாப்பு பார்வைகளும்
போதும் என்றாகிடுதே
கலந்து கொள்வதை
தவிர் என்கிறதே என் மனம்
பூக்களின் அழகும் நிறமும்
சுகம் தரும் அதன் மணமும்
இன்று சுகம் தரவில்லையே
ஏன் ? எதற்கு இப்படி ,?
ஆய்கையிலே அதிசயம் !
உடலுக்கு வயதாய்வதே
என நினைத்தேன் உடன்
மனதிற்கும் ஆவதாலோ
இல்லை இல்லை உடலுடன்
மனதிற்கும் வயதாய்வதே
என்றே தான் கூற வேண்டும்
மனதிற்கு
வயதாய்வதில்லை
மனதை
பழக்கிக்கொள்
என்றும்
இளமையுடன்
இருந்திடுவாய்



**ஓம் குமார் P N**



## ஓய்வூதியம்

இளமையில் உழைத்த
உழைப்பிற்கு முதுமையில்
வாழ்வாதாரத்திற்குக்
கிடைக்கப்பெறும் ஊதியம்.
கடந்த காலத்தில் சிந்திய
வியர்வைக்கு இன்று
கிடைக்கும் மரியாதை.
இளமையில் சுமந்த
கனவுகளுக்கு முதுமையில்
கிடைக்கும் நனவு வாழ்வு.
கொடுத்த கடனை திருப்பிப்
பெறும் தருணம். கைகள்
நடுங்கினாலும் மனம்
தளராது. அமர்ந்திருக்கும்
வீட்டுத் திண்ணைக்கே
தேநீர் வரும் என்ற உற்சாகம்
தொடரட்டும். உரிமையடன்
பெறவேண்டிய ஓய்வூதியத்தை
தற்போது போராடிப்
பெறவேண்டிய சூழல்.
ஓய்வூதியம் மரியாதையுடன்
வாழ்வதற்கான உரிமையைப்
பெற்றுத் தரும் என்று
நம்புவோம். எப்போதும் இதே
நிலை தொடர வலியுறுத்தித்
ஓய்வூதியத்தைத் தக்க
வைப்போம். வாழ்வில் வளம்
பெறுவோம்.

**உ.மு.ந.ராசன்கலாமணி**
கோயம்புத்தூர்.




## முயற்சி
மூச்சு விடுவதில் என்னடா
அழகு? முயற்சி செய்தே
பழகு, வானவில்லும்
கைகொடுக்கும், கடும்
பனியிலும் பாதை பிறக்கும்.

## போராட்டம்
போராட்ட குணமும்,போராடுற
குணமும், உன் DNA வுல
Default ஆ இருக்கும்
அதை Charge போடுறதும்,
போடாம விட்றதையும் உன்
எதிரியே முடிவு செய்யுறான்.

**கனகராஜ்**
கோயம்புத்தூர்

---

யாரும் வெறுக்காத
அளவிற்கு நம் வாழ்க்கை
இருந்தால்யாரும் மறக்காத
அளவிற்கு நம் மரணம்
இருக்கும்

2. நூலகத்திற்குப் போய் பார்
நீ எவ்வளவு பெரிய முட்டாள்
என்பதை புத்தகம் சொல்லும்

3. எளிமையானவன் என்று
பெயர் எடுப்பதற்கு
பணக்காரன் என்னும் தகுதி
தேவைப்படுகிறது

4. புத்திசாலிகளை போல்
சிந்தியுங்கள் ஆனால்
சாதாரண நபர்களைப் போல்
பேசுங்கள்

5.நேற்று கறிசோறு சமைக்கு
சென்ற பாத்திரம் தான்
இன்று சைவ கடவுளுக்கு

சமைத்துக்
கொண்டு
இருக்கிறது
எல்லா
தீட்டையும்
பத்து ரூபாய்
வாஷிங் பவுடர்
கழித்து விட்டது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---



## குருவி ரொட்டி.. குச்சி ரொட்டி வாங்குவோம்!
குருவி ரொட்டி.. குச்சி
ரொட்டி.. வாங்குவோம்!
குதுகலமாய் பள்ளிக்கூடம்
ஓடுவோம்! அம்மா தரும்
ஐந்து காசுப் போதுமே...
ஆளுக்கொரு பொம்மை
ரொட்டி வாங்கலாம்!

முத்து பையன் யானை
ரொட்டி வாங்குவான்!
சுந்தரமோ குதிரைரொட்டிக்கு
ஏங்குவான்! சுப்பிரமணி
காரு ரொட்டி ஓட்டுவான்!
மீனு மானை ரொட்டி வடிவில்
காணுவான்!

தகரக் கொட்டகை
நாடார்கடை திறந்ததும்..
தாவிக்குதித்து ரொட்டி
வாங்க ஓடினோம்!
சிகரம் ஏறி நின்றபடி
பாடுவோம்! சின்ன வயசு
பொம்மை ரொட்டிக்கு
ஏங்கினோம்!

இந்தா என்று தோழருக்கு
வழங்குவோம்.. இல்லை
சாதி மதங்கள் ஒன்று
கூடுவோம்.! இளைய பருவம்
மீண்டும்வரக் கூடுமோ?
இன்று கூடி ஒற்றுமையாய்
வாழுவோம்!

அஞ்சுகாசு பத்துக்காசு
போதுமே.. அழகழகா
பொம்மை ரொட்டி

வாங்கினோம்..!
அயல்நாட்டு
வணிகம்வளர்ந்த
நாளிலே..
அந்தக்கால
குருவி
ரொட்டியைத்
தேடுவோம்!

**வே.கல்யாண்குமார்.**

---

## பொய்க்கால் குதிரை!
நேரிசை வெண்பா!

மெய்யை வருத்திடும்
மேன்மையான ஆட்டம்

ஒய்யார ஆட்டமே
ஒண்மையாய்க்...கொய்திடும்

மெய்யன்பை மேதினியில்
இன்பமே பொங்கிட

பொய்க்கால் குதிரை
பொலிவு!

குதிரை வடிவிலான
கூட்டைச்சுமந்து

இதயபூர்வமாக
இனிதாய்ப்..பதமாக

நையாண்டி மேளம்
நலமாகக்கூட்டிடும்

பொய்க்கால் குதிரை
பொலிவு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**

---

## மருதப் பாவரங்கம்
## புடலங்காய்.!
போய்யா போய்யா..
புடலங்கா.. பூமியிலே
ஏன்பிறந்தாய் கூறய்யா!
பந்தலிலேத் தொங்குதுபார்..
புடலங்கா.. அதை
பார்த்துசொல்லு உனதுபயன்
எங்கய்யா?

பாம்புபோல பார்ப்பதற்கு
தோன்றுதய்யா.. அதன்
நுனியில்பாரு கல்லைக்கட்டி
வைப்பாரய்யா.. வீம்பு
பிடிவாதம் கொண்டு
பிறந்தபோதும்.. பெற்றவர்கள்
சொல்லை கட்டிக்
காப்பாற்றய்யா!

கூட்டாகி.. கறியாகி..
குழம்புமாகி.. கோடிமக்கள்
புசிக்கின்ற சுவையுமாகி..
நாட்டிற்காக பிறந்தகாய்
புடலங்காய்! நம்மால் என்ன
பயனென்று நினைத்துப்
பாரய்யா! வாய்யா வாய்யா
வாழப்பாரு பிறருக்காக..
இல்லையெனில்.. போய்யா
போய்யா நீயும் ஒரு
புடலங்கா!



## ரௌத்திரம் பழகு.!
ரௌத்திரம் பழகு
பெண்ணே..
ரௌத்திரம் பழகு!

அடங்கி கிடந்தால் ஆமை
யென்பார்! அயர்ந்து
கிடந்தால் ஊமை என்பார்!
குனிந்து நடந்தால் கோழை
யென்பார்.! கொஞ்சம்
நிமிரடி.. ரௌத்திரம் பழகடி..
அதுதான் உனக்கு நல்லது!

வாசலைத் தாண்டினால்
ஓடுகாளி யென்பார்..
வாய்கொஞ்சம்
திறந்தால்.. மூடுயென்பார்!
கைவீசி நடந்தால்..
அகங்காரி யென்பார்..!
கண்கொண்டு பாரடியோ
செல்லப்பெண்ணே!
கண்களை துடைத்தெறி
ரௌத்திரம் பழகடி..
ஞானப்பெண்ணே.!

ஆசையுடன் படித்தாலோ
அடங்கடி யென்பார்!
அறிவொளி ஏற்றிடாமல்
அடுப்படி போ என்பார்!
வேலைக்கு போனாலோ
வீம்புக்காரி யென்பார்!
வேறென்ன சொல்லுவேன்
ஞானப் பெண்ணே!
வீரநடை போடடியோ..
ரௌத்திரம் பழகடியோ
ஞானப் பெண்ணே!

**வே.கல்யாண்குமார்.**

---



பூக்களின் கவிதையொன்றை
எழுத தெரியாத
கவிஞனொருவன்
எழுதி கேட்டான்.
ஏனோ தெரியவில்லை
தெரியாமல் உன்னை
பார்த்து விட்டேன்
அதனால் என்னவோ
எதுவுமே தோன்றவில்லை
என் காதலியின் சாயலை
ஒத்த உன்னிடம் பெயர்
கேட்டேன் கொஞ்சும்
சிணுங்கலோடு கொஞ்சம்
புன்னகையை உதிர்த்து
விட்டு
தபூ என்றாய். அடுத்த
கணத்தில் மேசையில் இருந்த
வெள்ளைக் காகிதத்தில்
தபூ,குஷ்பூ என எழுதினேன்
தேவதைகளும்,பூக்களும்
ஒன்று தான் இருக்க
வேண்டுமா என்ன?!

மீசை என்பது மயிர்
ஆசை என்பது துளிர்
காதல் என்பது உயிர்
உயிர் வாழ சுவாசித்து
கொண்டே இரு காதலை!!

வறுமை பணமில்லாததால்
வந்தது
வெறுமை விரக்தியால்
வந்தது
தனிமை உன்னால் மட்டும்
தானடி வந்தது!!

இடுப்பில் தானடி
சாவியை சொருகி வைத்தாய்
யாரடி திறந்தது?
இரும்பாலான
என் இதயக்கதவை!!

உன் கண்கள் தானடி
என்னை அதிகம்
தொந்தரவு செய்கிறது
கனகவேல் முருகன்
என்னை காக்க உன்
கண்களுக்கு வேண்டுமடி
ஒரு கவசம்!

அந்த கடவுளிடத்தில்
சத்தமிட்டு கூறுவேன்
சிறகில்லாத
தேவதையொருத்தி
பூமியில் வாழ்கிறாளென்று!!

நீ சிந்தும் ஒவ்வொரு
துளி கண்ணீரும்
விலைமதிப்பானது–அதை

விலை
மதிப்பற்றவர்
களுக்காக
வீண் விரயம்
செய்யாதே!

**லி.நௌஷாத் கான்**

---

## மலர்கள் வாசம் தரும் ஈசல்கள்.
மலர்மாலை
வாழைநாருக்குள்
கட்(டு);(ட)ப்பட்ட
கூட்டுக்குடும்பம்.

ஒற்றுமையின் பிரதிபிம்பம்.

வாழைப்பழம்
தோலுரிப்பவருக்கு
தன்னைதரும் தியாகி.

அழகு இது கண்களுக்கு
மட்டும்தான். அழகும்
ஒருநாள் அழுகும் என்பதை
உணர்ந்தால் மாயை விலகும்.

தலைகவசம்
விபத்துகாலத்தில்
உயிர் காப்பான்.

பாதுகை ரப்பர்
பாதத்தின்பாதுகாவலன்.

சூழ்கொண்ட வான்மேகம்
கதிர்கள் உதிர்த்தது

மழைத்
துளியாய்!...

**கவிஞர்**
**பொன். பனகல்**
**பொன்னையா.**

---

## ஓட்டு !
முன்பெல்லாம் வாக்காளர்
பட்டியலில் பெயர் சேர்க்க
அவ்வளவாக யாரும் நாட்டம்
கொண்டதில்லை !

இப்போது 18 வயது
நிரம்பியவரும்,98 வயது
முதியவரும் வாக்காளர்
பட்டியலில் பெயர் சரிபார்க்க

ஆவலுடன்
செல்கின்றனர்....

பெயர்
இல்லேனா
ஓட்டுக்கு
பணம் தர
மாட்டாங்கப்பு !

**எம்.பி.தினேஷ்.** கோவை

---



## கண்வெட்டே காதலா ?
கண்ணில் பட்டதும்
சாலையில் மயங்கியவர்
புண்பட்டே வாழ்வில்
உழன்றே வாழ்வர் !!

கண்டதும் ஏற்படுவது
காமத்தின் ஆரம்பம்
கண்களில் புகுந்து
கருத்தினில் உறைந்து

குணத்தினை அறிந்து
மனத்தினைத்தெரிந்து
பணத்தினை அகற்றி
உள்ளத்தில் புதைந்து

நெஞ்சத்தில் நிறைந்து
நேசத்தைப்பரப்பி
நிகழும் மாற்றமே
நிலைத்திடும் அன்பு !!

மஞ்சத்தை எண்ணி
முயன்றிடும் எல்லாம்
பஞ்சமாப் பாதகச்
செயலென்று உணர் !!

கண்வெட்டே காதல்

என்றின்று
ஆனதே
பண்பட்ட
மரபும் பாழாய்ப்
போனதே !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி

---

நீ யாரோ தெரியாது..
உன் முகமறியேன்..
காற்றின் வழி செவி
மோதுகிற பிடித்த பாடலாய்..
நீ எனக்குப் ப்ரியமாகிறாய்.
உன் பெயர் கேட்க
புன்னகைத்துக்கொள்கிறேன்..
அவ்வப்போது உன் சிரிப்பில்
எனக்குள் முகிழ்க்கிறது
அதே ஆனந்தம்..
நாம் சந்திப்போமோ
இல்லையோ.. எனக்கென்று
நீ இருக்கிறாயெனும்

நினைப்பில் என்
திமிருக்கு
சூட்டிக்
கொள்கிறேன்
நிரந்தரமாய் ஒரு
மகுடம் !

**ரிஷபன்**

---



அன்னை திட்டினாலோ–
இல்லை
அப்பா ஏமாற்றினானோ–
புரியலை
பள்ளிக்கு செல்ல
கவலையோ– இல்லை
படிப்பினை ப் பார்த்து
பயமோ– ஏதும் அறியாமல்

இந்த நொடி–
என் நிம்மதி
என அழகாய்
உறங்குகிறது
குழந்தை!!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி

---

## எழுத்தாளனின் வழியின் வலி
எழுதும் எழுத்தெல்லாம்
"வார்த்தைகளாகவும்"
"வரிகளாகவும்"
"கவிதைகளாகவும்"
"ஹைக்கூ
கவிதைகளாகவும்" தான்
தெரியும் மற்றவர்களுக்கு !

ஆனால் தன்னைத்தானே
உணர்ந்தெழுதும்
"எழுத்துக்கள்"
ஒவ்வொன்றும் தான் கடந்து
வந்த போது தன் மீது
விழுந்த "கற்களென்று"
ஓர் உன்னதமான
"எழுத்தாளனுக்கு"
மட்டும்தான் தெரியும் !

குறிப்பாக "எழுதமுடியாத"
"சிந்திக்க முடியாத" சிலர் நீ
உன் எழுத்தைக் கொண்டு
என்னா வாங்கமுடியும் !

அதனால் கிடைத்த பலன்
என்னவென்று !
கேள்விக்கணைகளை
விட்டாலும் !
கடுஞ்சொற்களால்
சுட்டாலும்!

எழுதுவதை
நிறுத்தப்போவதுமில்லை !
அவமானங்களை மறக்கப்
போவதுமில்லை !

எழுதியவன் "அழிந்தாலும்"
எழுதிய "எழுத்துக்களையும்"
எழுத்தாளனின்
"பெயரையும்" எவராலும் !
"அழிக்கமுடியாது"

பலருக்கும் தெரியவில்லை
"பல்கலைப் படிப்பு"
படிக்காமலே "எழுத்தாளன்"
என்ற "பட்டம்" பெற்றுள்ளான்
என்பது !

இப்போதாவது புரிந்து
கொள்ளுங்கள் !
படித்து உணர்ந்து
தெளிந்துகொள்ளுங்கள் !
எழுத்தாளன் என்னா "வாங்கி

யுள்ளான்"
என்றும் !

அவனுடைய
"எழுத்துக்
களுக்கும்"
"பெயருக்கும்"
அழிவென்பதே
இல்லை யென்றும்!

**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

---



## தேவை
தாய்க்குப் பாசம் தேவை
தந்தைக்குப் பணம் தேவை
குருவுக்கு மரியாதை தேவை
கடவுளுக்கு பக்தி தேவை
குழந்தைக்கு அன்பு தேவை
குழலுக்கு ஓசை தேவை
குயிலுக்கு கூவல் தேவை

குமரிக்கு
மணவாழ்க்கை
தேவை
இளைஞனுக்கு
வேலை
தேவை!

**மீனாட்சி பாண்டியன்**

---

## உன்னை அறியலாம்
அன்பின் போது அன்னையை
அறியலாம் தியாகத்தின்
போது தந்தையை அறியலாம்
நல்வழிகாட்டுதலின்
போது குருவை அறியலாம்
ஆபத்தின் போது நண்பனை
அறியலாம் சோதனைகளின்
போது சொந்தங்களை
அறியலாம் முயற்சிகளின்

போதுதான்
நீ உன்னை
அறியலாம் !

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை

---

## ஹைக்கூ ! சென்ரியு !
முதல் மொழி மட்டுமல்ல
முதன்மை மொழி தமிழ் !

உலகம் முழுவதும்
ஒலிக்கும் மொழிதமிழ் !

மனஇருள் விரட்டிடும்
விளக்கு திருக்குறள் !

எரிந்து கருகினாலும்
விளக்கேற்றிய மகிழ்வு
தீக்குச்சி !

உருகி வழிந்தாலும்
ஒளி தந்த மகிழ்வு மெழுகு !

அவிழ்த்து விட்ட கூந்தலில்
முடிந்து விட்டாள் மனதை !

நல்லவனுக்கு
ஆயுதம் உண்மை !

தொட்டால் கெட்டாய்மது !

காரணமாகின்றது
காதல் முறிவிற்கு பொய் !

வீட்டில் எலி
வெளியில் புலி பிரபலங்கள் !

வழிவகுக்கும்
அழிவிற்கு ஆடம்பரம் !

நெடுநாளாகி விட்டது
நேர்மை நீதி விலகிஅரசியல்!

புரட்டர்களின் வெற்றி
நிரந்தரமன்று புரட்டி விடும் !

பெருகப் பெருக அழிவும்
பெருகும் நெகிழி !

அகம் புறம் தூய்மையானால்
இனிக்கும் வாழ்க்கை !

வெறுத்தாள்
திருமணத்தை
முதிர்கன்னி
வரதட்சணை !

**கவிஞர்**
**இரா .இரவி!**

---

ஆன்மாவை விற்று
ஆன்மீகத்தை விலைக்கு
வாங்கும் நேரம்!

பக்தி உணர்வான
கொண்டாட்டங்களை காண
முடிவதில்லை . பரவசத்துடன்
ஆட்டம் போடும் கார்ப்பரேட்
பக்திகளை ஆவலுடன்
பார்க்க முடிகிறது .

சிவராத்திரி, மயான
கொள்ளை எல்லாமே
பொழுதுபோக்கிற்காக
சாக்குப் போக்கு
காட்டுவதாகவே உள்ளது .

உண்மையையும்
ஆன்மாவையும்
தொலைத்துவிட்டு, கடவுளை

விலை
கொடுத்து
வாங்கியதில்
சாமானியர்கள்
பயபக்தியின்றி
வேடிக்கை
பார்ப்பது
சாதாரணமாகிவிட்டதோ!.

**எறும்பூர்**
**கை.செல்வகுமார்,**
செய்யாறு.

---



கும்வெயில்
நிழலைத்தேடி விரைந்த
காலுக்கு எங்கும்
மரமேயில்லை.
தூரத்திலொரு மரம் யாரோ
உட்கார்ந்திருந்தார்கள்
தூரம் அவ்வளவுதான்
காட்டும் சக்கரமாக மாறிய
கால்கள் இருந்தது புத்தர்
சிலையைத்தள்ளி உட்காரு

என்றேன்.
நடக்க
ஆரம்பித்தார்
இடமெல்லாம்
வனமாக
மாறியிது.

**துங்கன்**

---



## விருட்சம்
மண்ணில் மக்கிய
உரங்களுக்கு மத்தியில்,
மழைத்துளி மண்ணில்
விழுந்து, புல் கொஞ்சம்
பூச்சிகள் கொஞ்சம்
சுவைத்திடாமல்,
உறிஞ்சிய விதையில்
உறைகளைக் கிழித்து,
மண்கள் புடைத்து,
விடிவெள்ளி பாக்குது,

ஆம் இங்கு
விரும்பிய
விதையே
விருட்சமும்
ஆகுது

**மை எழுத்து கனகராஜ்**
கோயம்புத்தூர்

---

## எதற்கு......
மதம் யானைக்கு
ஜாதி நாய்க்கு
குணம் மனிதனுக்கு
பணம் தேவைக்கு
நியாயம் நீதிக்கு
ஆசை அழிவுக்கு
கொடுமை பசிக்கு
கோபம் கொலைக்கு
பாவம் மரணத்திற்கு
தேகம் அழகுக்கு
மோகம் உணர்ச்சிக்கு
மேகம் மழைக்கு
மழை தாகத்திற்கு
சோகம் நினைவுக்கு
வெற்றி முயற்சிக்கு
கவலை நட்புக்கு
சொந்தம் அன்புக்கு
உழைப்பு உயர்வுக்கு
உரிமை செயலுக்கு
உணவு உயிருக்கு
உள்ளம் பிறருக்கு
வேகம் காற்றிற்கு
லஞ்சம் வேலைக்கு
பஞ்சம் விவசாயிக்கு
தஞ்சம் முதியோர்க்கு
அமைதி மேன்மைக்கு
கவிதை கற்பனைக்கு
மண் மனிதனுக்கு
மனிதன் மண்ணிற்கு
வாழ்க்கை.,....வாழ்வதற்கு..

**கவிஞர்**
**பெருமாள் பட்டி..**
**பூ. அடைக்கலாம்**
புதுக்கோட்டை

---

காட்சி அமைக்கப்பட்ட
கனவுகள் கருவிழிகளால்
முட்டி மோதிகலங்கி
நினைவுகளால்
நிதர்சனமானாலும்

முயற்சிகள்
தோற்றாலும்
விடா முயற்சி
தோற்காது
தொட தொட
வானமும்
வசப்படும்.

**ஜயந்திசிவக்குமார்**
திருச்சி.

---



## வாழ்வியல்...
இழந்த அனைத்தையுமே..
மீட்டெடுக்க... இயலும்...

நம்பிக்கை.... ஒன்றை மட்டும்
இழக்காமல் இருந்தால்...

மல்லிகை பாதையில்...
நடைபோட....
எண்ணியதில்லை...

கருவேலம் பூக்களாவது...

தென்படட்டும்...
கருவேலம்
முட்கள்
தவிர்த்து...

எங்கள்
கரடுமுரடான
பாதையில்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

We Are Urgently **Hiring!**

**Marketing Manager**
Ad Sales (Print Media)

Package Rs. 4.8 LPA

Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai

Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com

Call: 9337501889

---

Sanjay
Cell: 90032 64920

Real Choice

Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection

#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.

Real Choice Chennal | Real Choice Chennal | Real Choice Chennal

---

# WANTED

MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knowleldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

---

# Follow our WhatsApp Channel

Scan this QR code using the CAMERA to view or follow our Channel

PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

---

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd

International Courier Service

ஆண் / பெண் வேலைக்கு தேவை

கல்வி தகுதி : 10th Std முதல்

Ganapathy, Thudiyalur.

88866 56211

---

# WANTED

FEMALE TELECALLER

EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE

PadmaMedia House

Call/Whatsapp 94386 10756

---

Vilambaram

WE HELP YOU TO BOOST YOUR BUSINESS

VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

---

# WANTED

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

---

Just499

# TOURS & TRAVELS WEBSITE

We Provide Complete Tours & Travels Website Solution

ONLY Rs. 499

Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com

---

# Wanted REPORTERS

சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை

PRGI No. TNBIL/25/A1564

பேப்பர்பாய் 8122664699

---

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

---

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW

7789951009

PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA

DAILY & MONTHLY SALARY
SALARY STARTING FROM Rs. 10000/- onwards

Whatsapp: 7789951009

---

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

---

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை


ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


ஆட்கள் தேவை
CNC டர்னிங் ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
99444 40560


WANTED
MARKETING MANAGER
ACCOUNTANT
CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
PLASMA & BENDING OPERATOR
LATHE MILLING MACHINERY OPERATOR
AMBATTUR TAPSTIA,KATTUR
Contact: 95660 61750


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மிக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


Landbazzar
பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
Retired person's / VRS
Self Employee / Busniess Man
Extra Income Needers / House wifes
5 APPOINTMENTS ONLY
97900 21367


PERAMBUR / MOOLAIKADI
THORAIPAKKAM
SG (Male)
Qul: 10th, Age blw 50yrs 8Hrs,
Take Home Salary Rs. 18,500
(26 Days) with 4 Off. + Food.
Ct: 9884991302 / 9094783384
9884991728
Wanted FIELD OFFICER
மூலக்கடை. 7010477903


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


PRGI. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை
துறையில் ஆர்வமும் துடிப்பும்
உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

















WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005
















WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998




# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்




## இதமான வார்த்தைகள்

பல நேரங்களில் நல்லதாக, ஆதரவாக சொல்லப்படும் நான்கு வார்த்தைகள் ஏற்படுத்தும் தாக்கத்தை, பணத்தாலும், பொருளாலும் ஏற்படுத்த முடிவது இல்லை.

அதுவும் துன்பக் காலங்களில் ஒருவன் சிக்கித் தவிக்கும் போது அவனிடம் அன்பாகவும், ஆறுதலாகவும், நம்பிக்கை ஊட்டும்படியாகவும் சொல்லப்படும் வார்த்தைகள் ஏற்படுத்தும் நன்மைகளுக்கு அளவே இல்லை.

தண்ணீரில் மூழ்கித் தத்தளிக்கும் நீந்தத் தெரியாத மனிதனுக்குக் கிடைக்கும் கட்டையை பிடித்து மிதக்க உதவுவதைப் போல அந்த அன்பான நல்ல வார்த்தைகள் துன்பக் காலத்தில் தாக்குப் பிடிக்க ஒருவனுக்கு உதவுகின்றன.

மிகவும் தன்னம்பிக்கை உடையவர்கள், தைரியசாலிகள் கூட சில சமயங்களில் தங்கள் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் இழந்து விடுவதை நாம் பார்த்து இருக்கின்றோம்.

அவர்களே தங்களுக்குள் அவற்றை இழந்து நிற்கும் அந்தக் குறுகிய காலத்தில் அடுத்தவரிடமிருந்து வரும் நம்பிக்கை வார்த்தைகள் எப்படிப்பட்ட ஊக்க மருந்தாக வேலை செய்கிறது என்பதைக் கண்கூடாகக் கண்டு இருக்கிக்கிறோம்.

இன்றைய நாட்களில் ஆதரவான நான்கு வார்த்தைகள் கேட்பது உண்மையில் அரிதாக இருக்கிறது.

எத்தனையோ வசதிகளும், வாய்ப்புகளும் பெருகி இருந்தாலும் மனப்பற்றாக் குறையாலும், நேரப் பற்றாக்குறையாலும் நல்ல நம்பிக்கை, ஆறுதல் ஊட்டும் வார்த்தைகள் கேட்பது அபூர்வமாகவே இருக்கிறது.

இந்தச் சிறிய குறைபாட்டின் விளைவுகள் வார்த்தைகளில் அடங்காதவை. பூதாகாரமானவை "கல்கத்தா வீதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்த தொழு நோயாளி ஒருவரது உடல் நிலை மிகவும் மோசமாகி விட, அவர் அன்னை தெரசாவின் கருணை இல்லம் ஒன்றில் அடைக்கலம் புகுந்தார்.

சில இடங்களில் அழுகிய நிலையில் இருந்த அவர் உடலைச் சுத்தம் செய்து கொண்டு இருந்த சேவகர் ஒருவர்,ஒரு கட்டத்தில் அந்த நெடியைத் தாங்க முடியாமல் பின் வாங்க, அன்னை தெரசா அந்த வேலையைத் தானே மேற்கொண்டு தொடர்ந்தார்.

சிறிதும் முகம் சுளிக்காமல், கெட்ட நெடியைப் பொருட்படுத்தாமல் அன்னை தொடர்ந்து செய்த அந்தப் பணி அந்தத் தொழு நோயாளியின் கண்களில் கண்ணீரை வரவழைத்து விட்டது.

"அம்மா இது போன்ற அறுவருக்க வைக்கும் வேலையை செய்ய உங்களுக்கு சிரமமாகத் தோன்றவில்லையா?" என்று அவர் கேட்டார்.
"சகோதரரே!

நீங்கள் அனுபவிக்கும் இந்த வேதனையை ஒப்பிடும் போது நான் செய்வது ஒரு சொல்லத்தக்க செயலே இல்லை" என்று அன்புடன் பதிலளித்தார் அன்னை தெரசா.

அன்னையுடைய அந்தத் தன்னலம் இல்லாத சேவைக்கு இணையாக அந்தத் தொழு நோயாளியின் இதயத்தைத் தொட்டது அந்த அன்பான வார்த்தைகள்..

ஆம்.,அன்புச் நண்பர்களே..,

சொற்கள் சக்தி வாய்ந்தவை. அவை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை படைத்தவை. அவைகளை ஆக்கத்திற்கே பயன்படுத்துங்கள்.

சந்திக்கும் மனிதர்களிடம் உள்ள நல்லதைக் கண்டு பிடித்துப் பாராட்டுங்கள்.
அப்படி நல்லதைப் பாராட்டும் போது அவர்கள் மேலும் நல்லதைச் செய்ய நீங்கள் அவர்களை ஊக்கப்படுத்துகிறீர்கள்.



மற்றவர்கள் வருத்தத்தில் மூழ்கி இருக்கையில் ஆத்மார்த்தமாய் ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுங்கள்.

வருத்தங்களும், தோல்விகளும் சகஜமானவை என்பதையும் அதைத் தாண்டாமல் யாரும் பெரிய வெற்றிகளை அடைந்ததில்லை என்பதை நினைவூட்டுங்கள்.

உங்களுக்குத் தெரிந்து அதே போன்ற நிலைகளில் இருந்து விடுபட்டு மேலே வந்தவர்கள் பற்றி எடுத்துச் சொல்லி தைரியப்படுத்துங்கள்.

அதன் மூலம் அதிலிருந்து மீண்டு வர அவர்களுக்கு நீங்கள் உதவுகிறீர்கள்.

காணும் ஒவ்வொரு திறமையையும் சுட்டிக் காட்டி வாழ்த்தத் தயங்காதீர்கள்.

பிறையாகத் தோன்றும் எல்லாமே முழு நிலவாகிப் பிரகாசிப்பதில்லை. எத்தனையோ பிறைகள் அலட்சியத்தாலும், கடுமையான விமரிசனங்களாலும் அமாவாசை இருட்டாய் தொலைந்து போய் இருக்கின்றன.

ஒரு திறமை வெளிப்படுகையில் அடையாளம் காணப்பட்டு பாராட்டப்படும் போது அந்தத் திறமை வேரூன்ற உதவுகிறீர்கள்.

தங்கள் திறமைகள் மீது உண்மையில் நம்பிக்கை ஏற்படும் வரை எல்லாத் திறமையாளர்களுக்கும் ஆரம்பத்தில் இது போன்ற நல்ல வார்த்தைகள் தேவைப்படுகின்றன.

அந்த நல்ல வார்த்தைகளைச் சொல்ல என்றுமே தயக்கம் கொள்ளாதீர்கள்.

அன்னை தெரசாவைப் போல் தன்னலம் இல்லாத சேவைகளை செய்ய நமக்கு முடியாமல் இருக்கலாம்.

ஆனால் ,அன்பாய் நான்கு வார்த்தைகள் சொல்லலாம் இல்லையா?

அதற்கு என்ன செலவாகப் இருக்கிறது? அதில் என்ன சிரமம் இருக்கப் போகிறது?


இந்தக் கணத்திலிருந்து சிரமமில்லாத, செலவில்லாத அந்த நல்ல செயலை நாம் செய்ய ஆரம்பிப்போமா?



## விடுகதை

| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |

## பெப்பர் காளான்....எப்படி?



**தேவையான பொருட்கள்:**

எண்ணெய்
தேவையான அளவு
கடுகு, உளுந்து, கருவேப்பிலை
தேவையான அளவு
பெரிய வெங்காயம்
இரண்டு (பொடியாக நறுக்கியது)
1
பச்சை மிளகாய்
நறுக்கியது
மஞ்சள் தூள்
அரை ஸ்பூன்
மிளகு தூள்
இரண்டு ஸ்பூன்
காளான்
250 கிராம் (நறுக்கியது)
உப்பு
தேவையான அளவு

**செய்முறை:**


1 கடாயில் நான்கு ஸ்பூன் எண்ணெய் விட்டு காய விடவும். பின்பு கடுகு, உளுந்து, கருவேப்பிலை போட்டு தாளித்து கொள்ளவும்

2 பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு வதக்கவும்

3 நறுக்கிய காளானை இதோடு சேர்த்து வதக்கவும்

4 இரண்டு நிமிடம் கழித்து காளான் நன்றாக தண்ணீர் விடும். இப்பொழுது மஞ்சள் தூள், உப்பு சேர்த்து கிளறி, மூடி விடவும்

5 ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை காளானை நன்கு கிளறி விடவும். 15 நிமிடத்தில் தண்ணீர் முற்றிலும் வற்றி விடும். இப்போது அடுப்பை அணைத்து விட்டு மிளகு தூளை சேர்த்து நன்கு கிளறி விட்டால் தயார்.



# ஜோக்ஸ்

நோயாளியை கூட்டிட்டு வரலாமா ?
மருத்துவர் ; கூட்டிட்டு வாங்க ! தூக்கிட்டுப் போங்க !

-------------------------

சாப்பிட முடியாத பன் எது ?
ரிப்பன் .

-------------------------

உங்க அப்பா தினமும் சீனி டப்பாவை ஏன் திறந்து பார்க்கிறார் ?
மருத்துவர் தினமும் சுகர் செக் பண்ண சொல்லி இருந்தார் .

--------------------

கணவன் ; சாமிகிட்ட என்ன வேண்டினாய்?
மனைவி ; அடுத்த பிறவியிலும் நீங்கதான் எனக்கு கணவராக வர வேண்டினேன் .
மனைவி ;சாமிகிட்ட நீங்க என்ன வேண்டினீர்கள் .
கணவன் ; எனக்கு அடுத்த பிறவியே இருக்கக் கூடாது என்று வேண்டினேன் .

-------------------------

சொர்க்கத்தில் கணவனையும் ,மனைவியையும் பிரித்து வைத்து இருப்பார்களாமே .



அதுனாலதான் அதன் பெயர் சொர்க்கம் என்கின்றனர் .

-------------------------

மண்டை உடையாம இருக்க தலைக்கவசம் போடுகின்றனர் .
தலைக்கவசம்

உடையாம இருக்க யாரவது மண்டையைப் போடுறாங்களா ?

-------------------------

உங்க ஊரில் யாரவது பெரிய மனிதர்கள் பிறந்து இருக்கிறார்களா ?
எங்க ஊரில் யாருமே பெரிய மனிதராகப் பிறப்பதில்லை .எல்லோரும் குழந்தையாகவே பிறக்கின்றனர் .

--------------------

- கோழிக்கு முந்திரிப் பருப்புப் போட்டு வளர்த்தாலும் அது முட்டைதான் போடும் . 100 மதிப்பெண் போடாது .

-------------------------
-------------------------
-------

என் மனைவி மாதிரி யாரும் தொலைக்காட்சித் தொடர்கள் பார்க்க முடியாது .
தொலைக்காட்சியைக் கட்டிப் பிடித்து அழுது கிட்டே பார்ப்பாள் .

-------------------------

கிளி ஏன் பச்சையா இருக்கு ?
அது பச்சைக்கிளி அதுதான் பச்சையா இருக்கு .

-------------------------




## தெரிந்து கொள்வோம்



1.தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026 எங்கு நடைபெற்றது? மாமல்லபுரம், பிப்ரவரி 2 மற்றும் 3 தேதி

2.ரயில்வேயில் UTS செயலிக்கு மாற்றாக அறிமுகம் செய்ய உள்ள செயலின் பெயர்? RailOne App

3.தமிழ்நாடு சிறந்த கைவினை கலைஞருக்கு வழங்கும் விருதின் பெயர் என்ன? பூம்புகார் விருது

4.பறவை விரிவான வரைபடம் (Atlas) வெளியிட்ட இரண்டாவது மாநிலம் எது? கோவா

5.சந்தோஷ் கோப்பை எந்த விளையாட்டுடன் தொடர்புடையது? கால்பந்து

6.ஐரோப்பிய மாலுமிகள் சூரிய கொனார்க் கோவிலை எவ்வாறு அழைத்தனர்? கறுப்பு பகோடா

7.சூரிய கொனார்க் கோவில் சக்கரம் எந்த ரூபாய் தாளில் இடம்பெற்றுள்ளது? பத்து ரூபாய் தாளில்

8.Women's Premium League 2026 பட்டத்தை வென்ற அணி எது? ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி

9.U19 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா அணி எத்தனை முறை கோப்பையை வென்றது? ஐந்து முறை (2026)

10.இந்தியாவின் முதல் நீல கோடி கடற்கரை எது? சந்திரபாகா கடற்கரை



தொகுப்பு:
**T.P.குமரன்,**
மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர்.

## திருக்குறள் படி திரவியமே



நடந்து ஓடும் சின்னப்பாப்பா
நன்றாய் பேசும் செல்லமே
நாளும் கற்கத் திருக்குறளை
அப்பா சொல்வேன் கேட்டிடு

ஒவ்வொரு குறளாய் நாள்தோறும்
சொல்லிச் சொல்லி நீ பழகு
பழகப் பழகப் பண்பாகும்
பண்பே வாழ்வின் உயர்வாகும்..

தமிழின் உலகம் திருக்குறளே
உலகின் யாவும் திருக்குறளே
குறளைக் கற்றால் அருமையே
குறுகிய வாழ்வில் பெருமையே

**ஹரணி,**
தஞ்சாவூர்-2

## குச்சி ரொட்டி வாங்குவோம்!

குருவி ரொட்டி.. குச்சி ரொட்டி..
வாங்குவோம்!
குதுகலமாய் பள்ளிக்கூடம்
ஓடுவோம்!
அம்மா தரும் ஐந்து காசுப்
போதுமே... ஆளுக்கொரு
பொம்மை ரொட்டி வாங்கலாம்!

முத்து பைய்யன் யானை ரொட்டி
வாங்குவான்!
சுந்தரமோ

குதிரைரொட்டிக்கு ஏங்குவான்!
சுப்பிரமணி காரு ரொட்டி
ஓட்டுவான்! மீனு மானை
ரொட்டி வடிவில் காணுவான்!

தகரக் கொட்டகை நாடார்கடை
திறந்ததும்.. தாவிக்குதித்து
ரொட்டி வாங்க ஓடினோம்!
சிகரம் ஏறி நின்றபடி பாடுவோம்!
சின்ன வயசு பொம்மை
ரொட்டிக்கு ஏங்கினோம்!



இந்தா என்று தோழருக்கு
வழங்குவோம்..
இல்லை சாதி
மதங்கள் ஒன்று
கூடுவோம்.!
இளைய பருவம்
மீண்டும்வரக்
கூடுமோ? இன்று
கூடி ஒற்றுமையாய்
வாழுவோம்!

அஞ்சுகாசு பத்துக்காசு
போதுமே.. அழகழகா
பொம்மை ரொட்டி
வாங்கினோம்..! அயல்நாட்டு
வணிகம் வளர்ந்த இந்த
நாளிலே.. அந்தக்கால குருவி
ரொட்டிக்கு ஏங்கினோம்!

**வே.கல்யாண்குமார்.**

## "புத்திசாலி நரி"

ஆற்றங்கரை ஓரத்தில் கரடி ஒன்று பரிசலை தயார் செய்து கொண்டு இருந்தது. அப்பொழுது அந்தப் பக்கம் வந்த ஓநாய் கரடி மாமா,.. எங்கே போறே ?என்றது .நான் அக்கரைக்கு போய் அங்கிருக்கும் வேப்பமரத்தில் உள்ள தேன்கூட்டில் இருந்து, தேனை எடுத்து குடிக்க போறேன். நீ வரியா? என்றது .நானும் உன் கூட வரேன். உனக்கு உதவி செய்கிறேன். என்னையும் கூட்டிட்டு போ என்றது ஓநாய். நண்பா, இங்கே பார் நான் வந்துட்டேன். என்னையும் கூட்டிட்டு போ என்றது நரி. கரடி இருவரையும் பார்த்தது ஆனால் ,இந்த பரிசலில் இருவர் மட்டுமே செல்ல முடியும். உங்களில் யாராவது ஒருவர் மட்டும் தான் என்னுடன் வர முடியும். நீங்களே யோசித்து முடிவை எடுங்கள் என்றது. நரியும் ,ஓநாயும் சண்டை போட்டுக் கொண்டது .ஒரே சமயத்தில் இரண்டும் தாவி குதித்தது. பரிசல் மேல் ஏற்கனவே கரடி உட்கார்ந்திருந்தது. இரண்டும் வேகமாக பாய்ந்ததால் பரிசல் தண்ணீரில்



கவிழ்ந்தது. மூன்றும் தண்ணீரில் விழுந்தது. நல்ல வேலை கிளம்பும் இடம் என்பதால் ஆழம் அதிகம் இல்லை. மூன்றும் கரைக்கு வந்தது .உடனே கரடி இரண்டு பேருமே வர வேண்டாம். நான் மட்டும் தனியாக போகிறேன் என்றது. அப்பொழுது நரிக்கு ஒரு யோசனை தோன்றியது. நண்பா நான் ஒரு யோசனை சொல்கிறேன் .ஓநாயும் நீயும் பரிசலில் செல்லுங்கள் .நீ பரிசலை ஓட்டு .ஓநாய் அதில் படுத்தபடியே இதோ இந்த பலகை வாயால் கவ்விக்கொண்டும், கையால் பிடித்துக் கொண்டு வரட்டும். இந்த பலகை மேல நான் ஏறி உட்கார்ந்து கொண்டு வருகிறேன், என்று அந்த பலகையை தூக்கி பரிசில் மீது வைத்தது .சபாஷ் நல்ல யோசனை



என்றது கரடி .மூன்றும் கரையை கடந்து அக்கரைக்குச் சென்றது மகிழ்ச்சியுடன் தேனை குடித்து ஆடி, பாடின. நரியின் இந்த சமயோசித புத்தியை ஓநாயும் பாராட்டியது.

**-எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம்.

## கரடி




கரடி மாமா கரடி மாமா
எங்கே போறீங்க
காட்டில் உள்ள வீட்டுக்கு
நானும் போறேங்க!

கரடி மாமா கரடி மாமா
என்ன சாப்டீங்க
காயும் கனியும் தேடியே
உண்ணேங்க!

கரடி மாமா கரடி மாமா
எங்கே போறீங்க
மலையுச்சியில் காணும்
தேனை
எடுக்கப் போறேங்க!

முனைவர்
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## அத்தையும் அமுதமும்

தங்கப் பாப்பா செல்லமே
எங்கப் பாப்பா செல்லமே
அத்தை உனக்கு நெய்யூற்றி
பருப்புச் சோற்றில் நெய்யூற்றி
ஊட்டிவிடுவேன் செல்லமே

சின்ன வாயை நீதிறந்து
வாங்கி உண்டால் பசியாறும்
அம்மா வேலை செய்கிறாள்
அத்தை உனக்கு
ஊட்டிடுவேன்

உண்டு முடித்து நீயுறங்க
வண்ணத் தொட்டில்
தானுண்டு
மெல்ல நீயும் உறங்கிடு
அம்மா வந்து ஆட்டிடுவாள்

அம்மா பாடும் பாட்டிலே
அழகிய தமிழை நீகேட்டு
அன்பும் பாசமும் பொங்கிட
அழகாய் நீயும் உறங்கிடு...



**ஹரணி,** தஞ்சாவூர்-2

## "நரியின் கலகம் நன்மையில் முடியும்"

காட்டில் சிங்கத்தின் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு கொண்டிருக்கிறது. சிங்கம் கம்பீரமாக தனது ஆசனத்தில் வீற்றிருந்தது .காட்டு விலங்குகள் எல்லாம் ஒன்று கூடி வாழ்த்து தெரிவித்தது. சிங்கமும் எல்லா விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் விருந்து அளித்தது. சந்தோஷமாக "சிங்க ராஜா வாழ்க "என கூறி கரகோஷம் எழுப்பின. எல்லா விலங்குகளும் விருந்து சாப்பிட்டன. புலிக்கு மட்டும் அது பிடிக்கவில்லை. எப்பொழுதும் இந்த காட்டுக்கு சிங்கமே ராஜாவாக இருக்கிறது. தானும் ஒரு நாள் ராஜாவாக வேண்டும். அந்த ஆசனத்தில் அமர வேண்டும் என எண்ணியது .உடனே நரியை அழைத்தது புலி. ஏய்... நரியே இங்கே வா. இந்த காட்டிற்கு நான் ராஜாவாக வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லு .நான் ராஜாவானால், உன்னை மந்திரி ஆக்குவேன் எனக்கு உதவி செய் என்றது. நரிக்கு ஒரே பயம் புலிக்கு உதவினால் சிங்கத்திடம் மாட்டிக் கொள்வோம். உதவவில்லை என்றால் புலியே நம்மை



கொன்றுவிடும். என்ன செய்வது ?என்று யோசித்தது .அதற்கு ஒரு யோசனை தோன்றியது. புலி அண்ணே!! நீங்கள் ராஜாவாக வேண்டும் என்றால், சிங்கத்திற்கும் உங்களுக்கும் இடையே போட்டி வைக்க வேண்டும். எல்லா விலங்குகளும், பறவைகளும் ஓட்டு போட சொல்ல வேண்டும் .நீங்கள் அதிகம் ஓட்டு வாங்கி வெற்றி பெற்றால் நீங்க தான் ராஜா சரிதானே என்றது. அத்தோடு "எல்லா விலங்குகளிடமும் நீங்கள் சென்று வாக்கு சேகரிக்க வேண்டும்" என்று சொன்னது. புலியும் ஒப்புக்கொண்டது. ஆனால் ஒரு நிபந்தனை; விலங்குகளிடம் ஓட்டு கேட்க போகும் போது உங்கள் முதுகில் என்னை ஏற்றுக் கொண்டு செல்ல வேண்டும். ஏனென்றால் ,எல்லா விலங்குகளும் உங்களை பார்த்து பயப்படுவார்கள். என்னை முதுகின் மேல் ஏற்றி சுமந்து சென்றால் ,அவர்களின் பயம் விலகும். உங்களுக்கு ஓட்டு போடுவார்கள் என்று சொன்னது. நானும் நாளை அவர்களிடம் உங்களுக்காக சிபாரிசு செய்வேன் என்றது. புலியும் சரி.. நாளை மறுநாள் உன்னை இதே இடத்தில் வந்து சந்திக்கிறேன் என்று கூறிவிட்டு சென்றது. நரி அடுத்த நாள் எல்லா விலங்குகளையும் கூட்டி கூட்டம் போட்டது. சிங்கத்திற்கு வயதாகிவிட்டது அதனால் ராஜாவாக காட்டை நிர்வாகம் செய்ய முடியவில்லை. அடுத்த தலைவனை நாம் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அடுத்தது புலிதானே தலைவராக வேண்டும். புலி, உங்களை ஒவ்வொரு நாளாக எல்லோரையும் கொன்று தின்றுவிடும் . உங்கள் மேல் அதற்கு பாசமே இல்லை .அதனால் நானே உங்களுக்கு அடுத்த தலைவராக வருகிறேன் என்றது. மற்ற விலங்குகள் எல்லாம் புலி உன்னையும் தின்று விடுமே, நீ எப்படி தலைவனாக முடியும்? என்று கேட்டன .அதற்கு நரி, புலியிடம் பேசி நாங்கள் இருவரும் நண்பர்களாக மாறிவிட்டோம் .புலியும் என்னையே தலைவனாக ஏற்றுக் கொள்ள சம்மதித்து விட்டது. உங்களுக்கு சந்தேகம் இருந்தால், நாளை நான் புலியின் முதுகில் ஏறிக்கொண்டு வாக்கு சேகரிக்க வருகிறேன். அதை பார்த்து நீங்களே புரிந்து கொள்வீர்கள் என்றது . மறு நாள் எல்லா விலங்குகளும் நரி, புலியின் முதுகில் மேல் ஏறிக்கொண்டு வருவதை பார்க்க, ஆவலாக காத்துக் கொண்டிருந்தன. நரி சொன்னதைப் போல் புலியின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு எங்களுக்கு ஓட்டு போடுங்கள். என்று கேட்டுக் கொண்டே வந்தது. புலி தனக்காக தான் நரி எல்லோரிடமும் ஓட்டு கேட்கிறது என்று நினைத்துக் கொண்டது .எல்லா விலங்குகளும் ஆச்சரியத்துடன் பார்த்தன .நாங்கள் உங்களுக்கே ஓட்டு போடுகிறோம் என்றன. புலியும் நம்பியது. உடனே சற்றென்று நரி நண்பா!! ஒரே தாகமாக உள்ளது அந்த ஆற்றங்கரைக்கு போ என்றது. புலியும் சென்றது .திடீரென்று என்னை காப்பாற்றுங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று உரக்க கத்தியது. அங்கு இருந்த வனத்துறையினர் சத்தம் கேட்டு ஐயோ!! நரி பாவம், புலியிடம் சிக்கிக்கொண்டது என நினைத்து புலியின் காலில் துப்பாக்கியால் சுட்டனர். புலி கீழே விழுந்தது. நரி வேகமாக ஓடி தப்பியது வனத்துறையினர் புலியைப் பிடித்து கூண்டில் போட்டு உயிரியல் பூங்காவிற்கு கொண்டு சென்றனர். நரி மறுநாள் வந்து நடந்தவை எல்லாவற்றையும் அனைத்து விலங்குகளிடமும் கூறியது. பின்னர் மீண்டும் சிங்கத்தின் தலைமையில் எல்லா விலங்குகளும் சந்தோசமாக வாழ்ந்தன.

**-எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம்.

## மயான கொள்ளை விழா



புவனகிரி தல குளம் வக்கிர காளியம்மன் ஆலயத்தில், தமிழ்நாடு பூசாரிகள் சங்கம் சார்பாக மயான கொள்ளை விழா நடந்தது.

## பக்தர்களுக்கு பாஜக சார்பில் அன்னதானம்



சென்னை மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் கோவிலில் பக்தர்களுக்கு பாஜக சார்பில் மாநில செயலாளர் வினோஜ்செல்வம் அன்னதானம் வழங்கினார்.

## சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் 200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசை



காஞ்சிபுரத்தில் நடந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் 200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை அமைச்சர் காந்தி வழங்கினார்.

## முன்னாள் துணை மேயர் மன்னன் அதிமுகவில் இணைந்தார்



மதுரையில் மு.க.அழகிரியின் வலதுகரமாக விளங்கிய முன்னாள் துணை மேயர் மன்னன் நேற்று அதிமுகவில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இணைந்தார்.உடன் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர்ராஜூ, முனுசாமி.

## ரவுசு மணி

ஆடம்பரத்தை விரும்புவதில் எந்தவித தவறும் இல்லை.... ஆனால்.... ஆரம்பத்தை மறப்பது தான் மிகவும் தவறு...



V. முத்து ராமகிருஷ்ணன்

## தானுலிங்க நாடார் 111 – வது பிறந்த நாள் விழா



இந்து முன்னணியின் சார்பில் நடந்த தாணுலிங்க நாடார் 111 - வது பிறந்த நாள் விழாவில் அவரது உருவ படத்திற்கு மலர் தூவி பாஜக மகளிர் அணி நிர்வாகி உமாரதி ராஜன் மரியாதை செலுத்தினர்.

## "அம்மா பிரீமியர் லீக்" வாலிபால் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முன்னாள் அமைச்சர் பரிசு வழங்கினார்



கரூரில், மாவட்ட அளவில் நடந்த "அம்மா பிரீமியர் லீக்" வாலிபால் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார்.

## 42 வது ஆண்டு மயான கொள்ளை விழா



திருவொற்றியூர் காலடிப்பேட்டை அங்காளபரமேஸ்வரி ஆலயத்தில் 42 வது ஆண்டு மயான கொள்ளை விழா நடந்தது.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கலைச் சங்கமம் நிகழ்ச்சி



ஆலந்தூர் தொகுதியில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கலைச் சங்கமம் நிகழ்ச்சியில் கிராமப்புற கலைஞர்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்பு செய்தார். நடிகர் சந்திரசேகர், துணை மேயர்மகேஷ் உடன் உள்ளனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான கிரிக்கெட் போட்டி



தஞ்சாவூரில், மாற்றுத்திறனாளிகளுக்கான கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் பரிசு வென்ற செங்கல்பட்டு சேலஞ்சர்ஸ் அணியின் கேப்டன் செல்வகுமாருக்கு செங்கல்பட்டு எம்எல்ஏ வரலட்சுமி, வாழ்த்து தெரிவித்தார்.

## இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்



காஞ்சிபுரத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை அமைச்சர் காந்தி வழங்கினார். உடன் கலெக்டர் கலைச்செல்வி,எம்எல்ஏக்கள் சுந்தர்,எழிலரசன்.

## ஆண்கள் உடற்பயிற்சி கூடம் திறப்பு



ஆலந்தூர் தொகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆண்கள் உடற்பயிற்சி கூடத்தை அமைச்சர் அன்பரசன் திறந்துவைத்தார்.

## மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிகணினி



திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிகணினிகளை துணைவேந்தர் சந்திரசேகர் வழங்கினார்.

## பிரதமர் மோடி பங்கேற்கும் மாநாட்டுக்கான பந்தல் கால்கோள் விழா



மதுரையில் மார்ச் 1 ம் தேதி பிரதமர் மோடி பங்கேற்கும் மாநாட்டுக்கான பந்தல் கால்கோள் விழாவில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் உதயகுமார், செல்லூர்ராஜூ உள்பட பலர் பங்கேற்றனர்.

## மத்தியமந்திரி முருகன் பழனிசாமியை மரியாதை நிமித்தம் சந்திப்பு




அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பாஜக மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன், மத்தியமந்திரி முருகன் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினர்.

## கரூர் மாவட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் பாஜகவில் சேர்ந்தனர்



கரூர் மாவட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் வழக்கறிஞர் ராமச்சந்திரன் மற்றும்நிர்வாகிகள், நேற்று மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில் பாஜகவில் சேர்ந்தனர்.

## கோவை ஈஷா யோகா மையத்தில் தேமுதிக பொதுச் செயலாளர்



கோவை ஈஷா யோகா மையத்தில் மகா சிவராத்திரி நிகழ்ச்சியில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா கலந்துகொண்டார்.

## மாநில அரசு விருது



தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக பங்காற்றி வரும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சூடாமணிக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாநில அரசு விருதை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார். சமூகநலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீமுரளிதரன், சமூக நலத்துறை இயக்குநர் சங்கீதா உடன் உள்ளனர்.

## தமிழ் கனவு பயிற்சி பட்டறை



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நேற்று மாபெரும் தமிழ் கனவு பயிற்சி பட்டறையை கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

## ஐடிஐ மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி



திருநெல்வேலி மண்டல அளவில் ஐடிஐ மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், விருதுநகரில் நேற்று நடந்தன.

## வேளாண்மை, உழவர் நலத்துறைக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை



தமிழ்நாடு அரசின் 2026-2027ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்தார்.

## அஸ்திரதேவருக்கு சிறப்பு அபிஷேகம்



சீர்காழி அருகே திருவெண்காடு சுவேதாரண் யேஸ்வரர் சுவாமி கோயிலில் மாசிமாத அமாவாசை தீர்த்தவாரியையொட்டி அஸ்திரதேவருக்கு நேற்று சிறப்பு அபிஷேகம் நடந்தது.

## பாட்டாளி மாணவர் சங்க மாநில பொதுக்குழு



சென்னையில் பாட்டாளி மாணவர் சங்க மாநில பொதுக்குழுவில் பாமக தலைவர் அன்புமணி பங்கேற்றார்.

## இந்து முன்னணி சார்பில் பைக் பேரணி



இந்து முன்னணி தலைவர் தாணுலிங்க நாடார் 111-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இந்து முன்னணி சார்பில் நாகர்கோவில் நேற்று பைக் பேரணி நடந்தது.

## மீனா தேவ் மலர் அஞ்சலி



இந்து முன்னணி முதல் மாநில தலைவர் ஐயா தாணுலிங்க நாடார் பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது நினைவிடத்தில் பாஜக செயலாளர் மீனா தேவ் மலர் அஞ்சலி செலுத்தினர்.

## பெண்களுக்கான புதிய கருத்தடை சாதனம்



மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் கையின் தோலுக்கு அடியில் பொருத்தப்படும் பெண்களுக்கான புதிய கருத்தடை சாதனம் குறித்து மகப்பேறு இயல் துறைத் தலைவர் மருத்துவர் காயத்ரி பேட்டி அளித்தார்.

## தட்டு ஒலி எழுப்பி நூதன போராட்டம்



திருநெல்வேலியில் நேற்று சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் தட்டு ஒலி எழுப்பி நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சேலத்தில் மரவனேரி அருகே உள்ள காக்காயன் மயானத்தில் நடந்த மயான கொள்ளை விழாவில் தத்ரூபமாக பத்ர காளியம்மன் வேடமணிந்து வந்த பக்தர்.

# சுற்றுலா: இந்தியாவில் பார்த்து ரசிக்க வேண்டிய மிக அழகான 5 கடல் துறைமுகங்கள்!



1. மும்பை துறைமுகம்;

இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள இது, நாட்டின் மிகப்பெரிய முக்கியமான துறைமுகங்களில் ஒன்றாகும். அரபிக்கடலின் பரந்த நீண்ட பரப்பு , ஒரு மயக்கும் அடிவானத்தை உருவாக்குகிறது. குயின்ஸ் நெக்லஸ்" என்று அழைக்கப்படும் மரைன் டிரைவ் துறைமுகப் பகுதியின் அற்புதமான காட்சிகளை வழங்குகிறது. இரவில், தெரு விளக்குகள் முத்துசரம் போல, கடற்கரையின் அழகைக் கூட்டுகின்றன. பிரபலமான கேட்வே ஆஃப் இந்தியா இதன் அருகில் உள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வளைவுப் பாதை கடலின் பின்னணியில் கம்பீரமாக நிற்பது கண்கொள்ளாக் காட்சி.

துறைமுகத்தின் அருகில் அமைந்துள்ள எலிஃபெண்டா தீவு, புராதன குகைக் கோயில்களுக்குப் புகழ் பெற்றது. துறைமுகத்தின் சுற்றுப்புறங்களுக்கு ஒரு வரலாற்று அழகைச் சேர்க்கிறது.

2. கொச்சி துறைமுகம்;

இந்தியாவின் கேரளாவில் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் கொச்சி துறைமுகம் கேரளாவின் உப்பங்கழிகளுக்கு நடுவே அமைந்து, தனித்துவமான கடல் அமைப்பை வழங்குகிறது. இது இயற்கை அழகு மற்றும் வரலாற்று வசீகரத்தின் இணக்கமான கலவையாகும்.

இது பாரம்பரிய சீன மீன்பிடி வலைகளின் அழகிய காட்சிகளை வழங்குகிறது. உலகளாவிய மசாலா வர்த்தகத்தின் மையமாக இந்தத் துறைமுகம் விளங்குகிறது. நவீன வசதிகளும் இந்த பாரம்பரியத்துடன் ஒருங்கிணைந்து, சர்வதேச சரக்கு மற்றும் பயணக் கப்பல்களுக்கு சேவை செய்கின்றன. கொச்சி துறைமுகத்தை கலாச்சார மற்றும் இயற்கை சிறப்பம்சங்கள் நிறைந்த கடல்வழி நுழைவாயிலாக மாற்றுகிறது.




3. சென்னை துறைமுகம்;

இந்தியாவின் கோரமண்டல் கடற்கரையில் அமைந்து, தொழில்துறை திறன் மற்றும் கடற்கரை அழகின் கலவையாக உள்ளது. இது வங்காள விரிகுடாவின் அழகிய காட்சிகள், பரபரப்பான கப்பல் சரக்கு நடவடிக்கைகள், மீன்பிடிப் படகுகள் மற்றும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை போன்ற வரலாற்று அடையாளங்களை வழங்குகிறது. கடல்சார் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில், தென்னிந்தியாவின் நுழைவாயிலாக இந்த துறைமுகம் செயல்படுகிறது. மெரினா இந்தியாவின் மிக நீளமான நகர்ப்புற கடற்கரை ஆகும். மும்பை நகரின் பாறைகள் நிறைந்த ஜுஹு கடற்கரையைப் போன்று அல்லாமல், இது மணற்பாங்காக உள்ளது. இக்கடற்கரையை ஒட்டி புகழ்பெற்றோரின் உருவச்சிலைகள், நினைவிடங்கள், சமாதிகள் அமைந்துள்ளதால், இது சென்னை நகரின் சுற்றுலா தலங்களில் ஒன்றாக விளங்குகிறது.

4. பாரதீப் துறைமுகம் ஒடிசா;

இது இயற்கை அழகு மற்றும் தொழில்துறை உயிர்ச்சக்தியின் அழகிய கலவையாகும். வங்காள விரிகுடாவில் அமைந்து, தங்கக் கடற்கரையுடன், அற்புதமான சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமன காட்சிகளை வழங்குகிறது. சலசலப்பான கடல் வர்த்தகத்தை எளிதாக்குகிறது. நவீன வசதிகளுடன் பல்வேறு சரக்கு செயல்பாடுகளைக் கையாளுகிறது.

சுற்றியுள்ள சதுப்புநிலக் காடுகள் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகள் பல்வேறு கடல்வாழ் உயிரினங்களுக்கான வாழ்விடத்தை வழங்குகின்றன. பாரதீப்பின் கலாச்சார செழுமை அருகிலுள்ள கோயில்கள் மற்றும் பாரம்பரிய மீனவ சமூகங்களில் பிரதிபலிக்கிறது. இயற்கை, தொழில் மற்றும் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக, இந்தியாவின் கிழக்குக் கடற்பரப்பில் வசீகரிக்கும் இடமாக மாற்றுகிறது.

5. தூத்துக்குடி துறைமுகம்;

தமிழ்நாட்டின் தெற்கு கடற்கரையில் அமைந்து, இயற்கை அழகுடன் தொழில்துறை வளத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆழமான நீல நீர், கப்பல்கள் மற்றும் மீன்பிடி படகுகளுடன் நீலமான வானத்தின் பின்னணியில் அழகாக காட்சியளிக்கிறது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## மத்திய அரசில் பணியிடங்கள்

இந்திய பொருளாதார சேவை (ஐ.இ.எஸ்.,), புள்ளியியல் சேவை (ஐ.எஸ்.எஸ்.,) பணிக்கு தேர்வு அறிவிப்பை யு.பி.எஸ்.சி., வெளியிட்டுள்ளது.

ஐ.இ.எஸ்., 16, ஐ.எஸ்.எஸ்., 28 என மொத்தம் 44 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எம்.எஸ்.சி., (பொருளாதாரம் / புள்ளியியல் / கணிதம்) வயது: 21 -30 (1.8.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 200. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 3.3.2026 விவரங்களுக்கு: upsc.gov.in

## சித்த ஆராய்ச்சி குழுமத்தில் பணியிடங்கள்






சென்னையில் உள்ள மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மெடிக்கல் லேப் டெக்னாலஜிஸ்ட் 9, ஆராய்ச்சி உதவியாளர் 2, ஆராய்ச்சி அதிகாரி 2, ஆய்வக உதவியாளர் 1 என மொத்தம் 14 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2 / பி.எஸ்சி., / எம்.எஸ்சி.,

வயது: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை : ஆன்லைனில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். The Director General, Central Council for Research in Siddha, Ministry of Ayush, GST Road, Tambaram Sanatorium, Chennai - 600 047. விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 31.3.2026 விவரங்களுக்கு: siddhacouncil.com

# மேலூர் ஆட்டுச்சந்தையில் ரூ.1 கோடிக்கு ஆடு விற்பனை

**மேலூர், பிப்.18:**

மதுரை மாவட்டம் மேலூர் சந்தைப்பேட்டையில் வாரந் தோறும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் 2 நாட்கள் கால்நடைச் சந்தை நடைபெற்று வருகிறது. இந்தச் சந்தையில் மேலூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் கால்நடைகளை விற்கவும், வாங்கவும் செய்கிறார்கள். வெளி மாவட்டங்களிலிருந்து ஏராளமான வியாபாரிகள் கால்நடைகளை மொத்தமாக வாங்கிச் செல்வது வழக்கம். சிவராத்திரியை முன்னிட்டு நடைபெறும் பாரிவேட்டை விழாவைக் கருத்தில் கொண்டு இந்த வாரம் நடை பெற்ற ஆட்டுச் சந்தையில் விற்பனை அதிகரித்து, ஆடு களின் விலை கணிசமாக உயர்ந்தது. சந்தையில் ஒரு ஆடு சராசரியாக ரூ.5,000 முதல் ரூ. 20,000-க்கும் மேல் வரை விற்பனையானது. ஆயி ரத்திற்கும் மேற்பட்ட ஆடுகளை வியாபாரிகள் வாங்கிச் சென்றதாகவும், மொத்த விற்பனை மதிப்பு சுமார் ரூ.1 கோடி வரை இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர். உள்ளூர் வியாபாரிகளுடன் சேர்ந்து வெளி மாவட்டங்க ளிலிருந்தும் வந்த பலர் வேன்கள் மூலம் ஆடுகளை வாங்கி ஏற்றி சென்றனர். சிவராத்திரி பாரிவேட்டை காரணமாக அடுத்த சில வாரங்களிலும் ஆட்டின் தேவை அதிகமாக இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

# டிராக்டர் மோதி வாலிபர் பலி

**தேனி, பிப்.18:**

தேனி அருகே வடபுதுப்பட்டி -மதுராபுரி சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்ற இளைஞர் டிராக்டர் மோதி யதில் உயிரிழந்தார். மதுராபுரி, காளியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த ஆனந்தன் மகன் பிரபாகரன்(27). இவர், வடபுதுப்பட்டி யிலிருந்து மதுராபுரி நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றார். அப்போது, எதிர் திசையிலிருந்து கோட்டைப் பட்டியைச் சேர்ந்த ராஜபாண்டி(30) என்பவர் ஓட்டி வந்த டிராக்டர், இருசக்கர வாகனம் மீது மோதியது. இதில் இருசக்கர வாகனத்தில் சென்ற பிரபாகரன் தலையில் காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது குறித்து டிராக்டர் ஓட்டுநர் ராஜபாண்டி மீது அல்லி நகரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசா ரித்து வருகிறார்கள்.

# மின்வேலி மின்சாரம் தாக்கி சரக்கு வாகன ஓட்டுநர் பலி

**தேனி, பிப்.18:**

பெரியகுளம் அருகே பொம்மிநாயக்கன்பட்டியைச் சேர்ந்தவர் முத்துச்சாமி(40). சரக்கு வாகன ஓட்டுநர். சம்பவத்தன்று சிந்துவம்பட்டியில் உள்ள தோட்டத்தில் வாழை இலைக்கட்டுக்களை ஏற்ற வந்தார். அப்போது மின்வேலியில் இருந்து மின்சாரம் பாய்ந்து அதே இடத்தில் உயிரிழந்தார். விசாரணையில் விலங்குகள் தோட்டத்துக்கு வரு வதைத் தடுக்க அனுமதியின்றி மின்வேலி அமைந்தி ருந்தது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து ஜெயமங்கலம் காவல்துறை யினர் விவசாயி முருகேசனை கைது செய்தனர். காவல் ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் விசாரித்து வருகிறார்.

# மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டத்திற்கு பந்தல்கால் நடும் விழா

**மதுரை, பிப்.18:**

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தே.மு.தி.க. வருமா என்பதை 1ந் தேதி பாருங்கள் என்று நயினார் நாகேந்திரன் கூறினார்.

மதுரையில் மார்ச் 1 அன்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெறவுள்ள தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கான முகூர்த்தக்கால் நடும் நிகழ்வு மண்டேலா நகரில் நடைபெற்றது. பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அண்ணா திமுக முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜு, உதயகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

அப்போது அவர் கூறியதாவது:-

வரும் சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையிலான ஆட்சி அமைக்கும். சென்னை மதுராந்தகத்தில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடந்தது. இந்த பொதுக்கூட்டம் பெரிய மாநாடாக மாறி திமுக ஆட்சிக்கு பெரிய பேரிடியாக அமைந்து இருக்கிறது. தற்போது மதுரையில் மீண்டும் நீதி கேட்டு மார்ச் 1ம் தேதி பொதுக்கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் அனைத்து தலைவர்களும் கலந்து கொள்வார்கள். இதுவும் மாநாடாக அமையும்.

அதில் பங்கேற்ற நயினார் நாகேந்திரனிடம் செய்தியாளர்கள், பாமக நிறுவனர் ராமதாஸ், நயினார் நாகேந்திரன் வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனக் கூறியுள்ளாரே என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

யார் மனதையும் புண்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. நான் யார் மனதும் புண்படக்கூடாது என நினைப்பவன் என்று கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி வடிவம் பெறவில்லை என்ற திருமாவளவனின் கருத்து குறித்த கேள்விக்கு, "திமுக கூட்டணி சரியான வடிவம் பெற்றுள்ளதா என்பதே சந்தேகம். காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூரும், திமுக அமைச்சர்களும் மாறி மாறி விமர்சித்து வருகின்றனர். காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் இருக்கிறதா என்பதே தெரியவில்லை. தேர்தல் அறிக்கையை கூட முழுமையாக நிறைவேற்ற முடியாத ஆட்சி. ஒரு டிஜிபியை கூட இதுவரை நியமிக்க முடிவில்லை. இந்த அரசு எப்படி சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியும். 33 லாக் அப் மரணங்கள் நிகழ்ந்து இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்க செல்லும் பெண்களையும் ஜாதி ரீதியாக திட்டுகின்றனர். ஒரு போலீஸ்காரர் பெண் அதிகாரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபடுகிறார் என்றார்.

பாஜக தொடர்பான விஜயின் விமர்சனம் குறித்த கேள்விக்கு, "விஜய்க்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா? கொள்கை என பேப்பரில் எழுதி வைத்திருப்பவர்களுக்கு என்ன சொல்ல முடியும்? கரூரில் உயிரிழப்புக்கு விஜயும், அரசும் தான் காரணம்.

விஜய் பங்கேற்கும் கூட்டங்களில் எல்லாம் உயிரிழப்பு ஏற்படுகிறது. நல்ல சகுனம்தான் அவர்களுக்கு" என்றார். தேசிய ஜனநாயக கூட்டணியில் தேமுதிக இணைவது குறித்த கேள்விக்கு, "1ம் தேதி பாருங்கள்" என பதிலளித்தார்.

எங்கள் அண்ணன் இபிஎஸ் மற்றும் பல கூட்டணி கட்சிகளால் பாஜக பலமாக உள்ளது. இபிஎஸ் தலைமையில் நல்லாட்சி மலரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பொள்ளாச்சி தலைமை அரசு மருத்துவமனையில் ரூ.2.17 கோடி மதிப்பில் புதிய சிடி ஸ்கேன் கருவி: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

**கோவை, பிப்.18:**

கோவை மாவட்டம், பொள்ளாச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.2.17 கோடி மதிப்பில் புதிய சி.டி. ஸ்கேன் கருவியை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் பல்வேறு சுகாதார உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொள்ளாச்சி மருத்துவமனையில் ரூ.12 கோடி மதிப்பில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு புதிய கட்டிடம், ரூ.10 கோடி மதிப்பில் வெளிநோயாளர் பிரிவு, ரூ.1.25 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த ஆய்வகம், ரூ.2 கோடி மதிப்பில் அவசர சிகிச்சை உள்நோயாளர் பிரிவு, ரூ.75 லட்சம் மதிப்பில் கட்டண பிரிவு, ரூ.62 லட்சம் மதிப்பில் நுண்துளை அறுவை சிகிச்சை கருவி, ரூ.75 லட்சம் மதிப்பில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவமனையில் 2014ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சி.டி. ஸ்கேன் கருவி ஒன்றே செயல்பாட்டில் இருந்த நிலையில், தினமும் சுமார் 700 ஸ்கேன்கள் எடுக்க வேண்டிய தேவை இருப்பதால் புதிய நவீன சி.டி. ஸ்கேன் கருவி அமைக்கப்பட்டது. இதன் மூலம் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, ஆனைமலை, வால்பாறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள்.

இந்த மருத்துவமனை 1934ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தினசரி 1,500 புறநோயாளிகளும், 450 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதந்தோறும் 300க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் 24 சி.டி. ஸ்கேன் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பு நடவடிக்கையாக 14 வயது பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகளில் சுமார் ரூ.20,000 செலவாகும் இந்த தடுப்பூசி, அரசு சார்பில் இலவசமாக வழங்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

# மலைப்பாம்பு சுற்றி இறுக்கியதில் முன்னாள் வேட்டை தடுப்பு காவலர் பலி

**ராஜபாளையம், பிப்.18:**

விருதுநகர் மாவட்டம் இராஜபாளை யம் மேற்கே அமைந்துள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது. இப்பகுதி ஸ்ரீவில்லி புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் என அழைக்கப்படுகிறது. இங்கு யானை, புலி, சிறுத்தை, மான், கரடி, காட்டெருமை, காட்டுப் பன்றி, செந்நாய், சாம்பல் நிற அணில், ராஜநாகம், மலைப்பாம்பு உள் ளிட்ட பல்வேறு வனவிலங்குகள் வாழ்ந்து வருகின்றன. மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள செண்பகத்தோப்பு பகவதி நகர் மலைவாழ் மக்கள் குடியிருப்பில் வசித்து வந்தவர் முத்தையா (68). இவர் வனத்துறை யில் வேட்டை தடுப்பு காவலராக பணி யாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது தனது குடும்பத்தினருடன் அப்பகுதியில் வசித்து வந்ததுடன், வீட்டின் அருகே நான்கு மாடு களை வளர்த்து வந்தார். ஞாயிறன்று இரவு ஒரு மாடு காணாமல் போனதால், அதைத் தேடி வனப்பகுதிக் குள் சென்ற முத்தையா வீடு திரும்ப வில்லை. உறவினர்கள் தேடிச் சென்ற போது அதிகாலை வனப்பகுதிக்குள் அவர் உயிரிழந்த நிலையில் கிடந்தார். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற வனத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டதில், மலைப்பாம்பு சுற்றி இறுக்கியதில் அவர் உயிரிழந்தது தெரிய வந்தது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் குறித்து வனத்துறையினர் தொடர்ந்து விசா ரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், அந்த வனப்பகுதிக்குள் செல்லும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# மகளிர் நலத் தொகை வழங்கும் தடுப்பு முயற்சி முறியடிப்பு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெருமிதம்

**சிவகங்கை, பிப்.18:**



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே தாயமங்கலத்தில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் இலங்கைத் தமிழர் மறு வாழ்வு திட்டத்தின் கீழ் கட் டப்பட்ட 52 புதிய குடியிருப்பு களை அமைச்சர் திறந்து வைத்து பயனாளிகளுக்கு வழங்கினார்.

பின்னர் செய்தி யாளர்களிடம் அவர் பேசிய தாவது:

கடந்த 5 ஆண்டுகளில் மாவட்டத்தில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் இலங்கைத் தமிழர்களுக்காக 480 வீடு கள் கட்டி வழங்கப்பட்டுள் ளன. இது மனிதநேயத்தின் அடையாளமாக கருதப்பட வேண்டும். வாக்குரிமை இல்லாத இலங்கைத் தமி ழர்களுக்கே குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளதால், அர சின் திட்டங்கள் வாக்கு அர சியலுக்காக அல்ல என்பது தெளிவாகிறது என்றார். மேலும், மகளிர் உரி மைத் திட்டத்தின் மூலம் 1.31 கோடி பெண்களுக்கு ரூ. 5,000 வழங்கப்பட்டதாகவும், இதற்கான முடிவு போர்க் கால அடிப்படையில் ரகசி யமாக மேற்கொள்ளப்பட்டு பின்னர் முதல்வரால் அறி விக்கப்பட்டதாகவும் தெரி வித்தார். ரூ.1,000 வழங்குவதைத் தடுக்க சிலர் முயன்றாலும், "முடிந்தால் தடுத்து பார்க்க லாம்" என்ற வகையில் ரூ. 5,000 வழங்கி முதல்வர் நிர் வாக திறனை வெளிப்படுத்தி யுள்ளார் என்று அமைச்சர் கூறினார். ரேசன் அட்டைதாரர் களுக்கு நிதி வழங்க முடி யாது என முன்பு கூறியவர் கள் தற்போது அதிக தொகை வழங்குவதாக அறிவிப்ப தாகவும், மக்கள் அதை நம்ப மாட்டார்கள் என்றும் கூறுவ தாக அமைச்சர் தெரிவித் தார்.

# ரஃபேல் போர் விமானத்தில் பயன்படுத்தப்படும் ஹேமர் ஏவுகணையை இந்தியாவில் தயாரிக்க திட்டம்

**புதுடெல்லி, பிப்.18:**

ரஃபேல் போர் விமானத்தில் பயன்படுத்தப்படும் ஹேமர் ஏவுகணைகளை இந்தியாவில் தயாரிக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என கூறப்படுகிறது.

இந்திய விமானப் படையில் பிரான்ஸிடமிருந்து வாங்கப்பட்ட ரஃபேல் போர் விமானங்கள் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மேலும் 114 ரஃபேல் போர் விமானங்களை ரூ. 3.25 லட்சம் கோடிக்கு வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. இவற்றில் 96 விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படும். மீத விமானங்கள் பிரான்ஸிடமிருந்து பெறப்படும்.



இந்த விமானத்தில் ஹேமர் ரக ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன. விமானப்படையில் அதிகளவில் ரஃபேல் போர் விமானங்கள் இடம்பெறும் போது, இதில் பயன்படுத்தப்படும் ஹேமர் ஏவுகணைகளை இந்தியாவில் கூட்டாக தயாரித்தால் இவற்றை இறக்குமதி செய்யும் தேவை ஏற்படாது என இந்தியா கருதியது. இத்திட்டத்துக்கு பிரான்ஸ் ஒப்புக் கொண்டது.

இந்நிலையில் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் 3 நாள் பயணமாக நேற்று இந்தியா வந்தார். அவர் பிரதமர் மோடியை இன்று சந்தித்துப் பேசுகிறார்.

அப்போது ஹேமர் ஏவுகணைகளை இந்தியாவில் தயாரிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. 114 ரஃபேல் போர் விமானங்கள் வாங்குவது தொடர்பாகவும், இந்த சந்திப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

'ஹேமரின்' சிறப்பு: இலக்கை தரைமட்டமாக்கும் என்பதற்காக இந்த ஏவுகணைக்கு ஹேமர் (சுத்தியல்) என பெயரிடப்பட்டுள்ளது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, வானிலிருந்து தரை இலக்குகளை துல்லியமாக தாக்க இந்த ஏவுகணை பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. 330 கிலோ எடையுள்ள இந்த ஏவுகணை, நேவிகேஷன் உதவியுடன், 60 முதல் 70 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும்.

இந்த ஏவுகணையை பிரான்ஸில் உள்ள சப்ரான் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் டிபன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்நிறுவனம் இந்தியாவில் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஹேமர் ஏவுகணையை தயாரிக்கும்.

# க்ரைம் கார்னர்

## 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை திருடிச் சென்றவர் கைது

**சிவகாசி, பிப்.18:**

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே எரிச்சநத்தத்தில் 108 ஆம்புலன்ஸை திருடி சென்றவரை போலீசார் கைது செய்தனர். விருதுநகர் நந்தி ரெட்டியபட்டியைச் சேர்ந்தவர் குணசேகர பாண்டியன் (39). இவர் சிவகாசி அருகே எரிச்ச நத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 108 ஆம்பு லன்ஸ் ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இந்நிலையில் ஞாயிறன்று இரவு எரிச்சநத்தம் அங்கன்வாடி மையம் அருகே ஆம்புலன்ஸை நிறுத்தி விட்டு சாப்பிடச் சென்றுள்ளார். திரும்ப வந்து பார்த்த போது, ஆம்புலன்ஸ் மாயமானது தெரியவந்தது. இதையடுத்து, எம்.புதுப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். வாகனத்தில் உள்ள ஜி.பி.எஸ் கருவியை ஆய்வு செய்த போது அருப்புக்கோட்டை அருகே சென்று கொண்டிருந்தது தெரியவந்தது. எனவே, அருப்புக் கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து சென்ற போலீசார் ஆம்புலன்சை மீட்டனர். மேலும் போலீசார் நடத்திய விசாரணையில் எம்.சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த கனகராஜ் (26) என்பவர் ஆம்புலன்ஸை திருடிச் சென்றது தெரியவந்தது. எம்.புதுப்பட்டி போலீசார் அவரை கைது செய்தனர். மேலும் போலீசார் கூறுகையில், கனகராஜ் கடந்த காலங்களில் தனியார் பள்ளி பேருந்து, லாரி ஆகியவற்றை இதேபோல் எடுத்துச் சென்றுள்ளார். அதேபோல் மது போதையில் ஆம்புலன்சையும் ஓட்டிச் சென்றுள்ளார். திருடிச் செல்லும் வாகனங்களை விற்பதற்கு முயற்சி செய்வதில்லை. எங்காவது நிறுத்திவிட்டு வந்து விடுவார் என தெரிவித்தனர்.

## பணிபுரிந்த வங்கியிலேயே ரூ.3.5 கோடி மதிப்பிலான நகைகளை திருடிய துணை மேலாளர் கைது

**பெங்களூரு, பிப்.18:**

பெங்களூருவில் இந்தியன் வங்கி துணை மேலாளர் கிரண் குமார் (34) லாக்கரில் இருந்த ரூ.3.5 கோடி மதிப்பிலான தங்க நகைகளை திருடி விற்றதால் கைது செய்யப்பட்டார்.

கிரிநகர் இந்தியன் வங்கி கிளையில் தங்க நகைகளை அடகு வைத்த வாடிக்கையாளர்கள் கடந்த மாதம், அதனை திரும்பபெறுவதற்கு வந்தனர். அப்போது வங்கியின் கிளை மேலாளர் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களின் தங்க நகைகளை தேடிய போது அவை காணாமல் போனது தெரியவந்தது.

இதையடுத்து வங்கி உயர் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில், லாக்கரில் 21 பாக்கெட்டுகளில் இருந்த 2780 கிராம் தங்க நகைகள் காணாமல் போனது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நகைகளை கிளை மேலாளர் விடுப்பில் இருந்தபோது துணை மேலாளர் கிரண் குமார் திருடியது தெரிந்தது.

இதையடுத்து கிளை மேலாளர் கிரிநகர் காவல் நிலையத்தில் கடந்த 6ம் தேதி புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் கிரண் குமாரிடம் விசாரணை நடத்தினர். அதில் அவர், கடந்த 3 மாதங்களில் 2,780 கிராம் தங்க நகைகளை திருடி, தனியார் நிதி நிறுவனங்களில் அடகு வைத்ததை ஒப்புக்கொண்டார். இதையடுத்து போலீஸார் அவரை நேற்று கைது செய்தனர்.

இது குறித்து பெங்களூரு தெற்கு துணை காவல் கண்காணிப்பாளர் லோகேஷ் ஜக்லேஷர் கூறுகையில், "சம்பந்தப்பட்ட வங்கியின் துணை மேலாளர் கிரண் குமார் ரூ.3.5 கோடி மதிப்பிலான தங்கத்தை திருடியுள்ளார். அதனை அடகு வைத்துள்ளார். அவரிடம் இருந்து இது வரை 700 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்துள்ளோம். அவர் அடகு வைத்த நிதி நிறுவனங்கள் தங்க நகைகளை தர மறுக்கின்றன. எனவே நீதிமன்றத்தை நாட முடிவெடுத்துள்ளோம்.

ஆன்லைன் சூதாட்டத்துக்கு அடிமையான கிரண் குமார், கடந்த 2 ஆண்டுகளில் ரூ.25 லட்சத்தை இழந்துள்ளார். அதற்காக கடன் வாங்கியதால் அதனை அடைப்பதற்காக நகைகளை திருட ஆரம்பித்துள்ளார். நகைகளை திருடி அடகு வைத்து பணம் பெற்று அதனையும் ஆன்லைன் சூதாட்டத்தில் இழந்துள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார்" என்றார்.

# விளையாட்டு செய்திகள்

## 10-ம் வகுப்பு தேர்வை தவிர்த்துவிட்டு ஐபிஎல் சீசனுக்கு தயாராகும் வைபவ் சூர்யவன்ஷி?

**ஜெய்ப்பூர், பிப்.18:**

எதிர்வரும் ஐபிஎல் 2026-ம் ஆண்டு சீசனுக்கு தயாராகும் வகையில் தனது பத்தாம் வகுப்பு தேர்வை தவிர்க்க இந்திய கிரிக்கெட் வீரர் வைபவ் சூர்யவன்ஷி முடிவு செய்துள்ளதாக தகவல்.

பிள்ளை முகம் மாறாத 14 வயதான வைபவ் சூர்யவன்ஷி, கிரிக்கெட் உலகின் அடுத்த சென்சேஷனாக உருவெடுத்துள்ளார். கடந்த ஆண்டு இந்திய இளையோர் அணிக்காக அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அண்மையில் முடிந்த யு19 உலகக் கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியில் முக்கிய வீரராக இருந்தார்.

அந்த தொடரில் 7 ஆட்டங்களில் 439 ரன்கள் விளாசினார். சிறந்த ஸ்ட்ரைக் ரேட், அதிக சிக்ஸர்கள் விளாசிய வீரர்களின் பட்டியலில் முதலிடம் பிடித்தார். இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதையும், தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக தொடர் நாயகன் விருதையும் வென்றார். இந்நிலையில், வரும் 17-ம் தேதி முதல் மார்ச் 11-ம் தேதி வரை தந்து பத்தாம் வகுப்பு தேர்வை வைபவ் சூர்யவன்ஷி எழுதுவதாக இருந்தது. அதை அவர் தேர்வு எழுத இருந்த பள்ளியின் முதல்வரும் உறுதி செய்தார். கிரிக்கெட் வீரர் என்பதால் அவருக்கு தேர்வு எந்தவித தளர்வுகளும் வழங்கப்படாது என தெரிவித்தார். இந்த சூழலில் அவரது பயிற்சியாளர் மனிஷ் ஓஜா, "இந்த முறை அவர் பத்தாம் வகுப்பு தேர்வை தவிர்த்துவிட்டு ஐபிஎல் சீசனுக்காக தயாராகிறார். தற்போது நாக்பூரில் உள்ள அவர், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் சீசனுக்கு முன்னதாக நடைபெறும் முகாமில் இணைந்துள்ளார்" என தெரிவித்தார். ஐபிஎல் கிரிக்கெட்டில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக வைபவ் சூர்யவன்ஷி விளையாடி வருகிறார். கடந்த 2025-ம் ஆண்டு சீசனில் அவர் ஐபிஎல் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதுவரை 7 ஆட்டங்களில் விளையாடி 252 ரன்கள் எடுத்துள்ளார். இதில் ஒரு சதம் மற்றும் ஒரு அரைசதம் அடங்கும். இரண்டு முறை 30+ ரன்களை கடந்துள்ளார்.

## நிசாங்கா அபார சதம்: ஆஸி.யை வீழ்த்தி சூப்பர் 8-க்கு இலங்கை முன்னேறி அசத்தல்!

**கண்டி, பிப்.18:**

நடப்பு ஐசிசி டி20 உலகக் கோப்பை தொடரின் குரூப்-பி லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை 8 விக்கெட்டுகளில் வீழ்த்தியது இலங்கை அணி. இதன் மூலம் அந்த அணி சூப்பர்-8 சுற்றுக்கு முன்னேறி உள்ளது.

இந்த ஆட்டம் இலங்கையின் கண்டியில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இலங்கை அணி பந்து வீச முடிவு செய்தது. முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 181 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அந்த அணியின் கேப்டன் மிட்செல் மார்ஷ் 54, டிராவிஸ் ஹெட் 56, இங்கிலிஸ் 27, மேக்ஸ்வெல் 22 ரன்கள் எடுத்தனர்.

இலங்கை தரப்பில் ஹேமந்தா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். சமீரா 2, திக்ஷனா, துனித் வெல்லலகே, கமிந்து மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். 18 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 184 ரன்கள் எடுத்து இலங்கை வெற்றி பெற்றது.

# பாகிஸ்தானுக்கு தண்ணீர் நிறுத்தப்படும்: ஜம்மு காஷ்மீர் அமைச்சர் ஜாவேத் தகவல்

**ஜம்மு, பிப்.18:**

"ஜம்மு காஷ்மீரின் காண்டி பகுதியில் கட்டப்பட்டு வரும் ஷாபூர் காண்டி அணை அடுத்த மாத இறுதியில் நிறைவடையும் போது, பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ணீர் நிறுத்தப்படும்" என மாநில நீர் வளத்துறை அமைச்சர் ஜாவேத் அகமது ராணா தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் கடந்தாண்டு நடைபெற்ற பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பின், பாகிஸ்தானுடன் செய்து கொண்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார்.

இது குறித்து காஷ்மீர் நீர் வளத்துறை அமைச்சர் ஜாவேத் அகமது ராணா அளித்த பேட்டியில் கூறியதாவது: ஜம்மு காஷ்மீரின் காண்டி பகுதியில் ஷாபூர் காண்டி தடுப்பணை திட்டம் 40 ஆண்டுகளாக கிடப்பில் இருந்தது.



இதன் காரணமாக காஷ்மீரில் 80 கி.மீ தூரத்துக்கு அமைக்கப்பட்ட ரவி நதி நீர் கால்வாய், 492 கி.மீ தூரத்துக்கு அமைக்கப்பட்ட நீர் விநியோக பாதை பயன்படுத்தப்படாமல் இருந்தது.

பிரதமர் மோடியின் தலையீட்டின் கீழ் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. ஜம்மு காஷ்மீரில் செனாப் ஆற்றின் குறுக்கே அமைக்கப்படும் நான்கு நீர் மின் நிலைய திட்டங்களும் வேகமாக நடைபெறுகின்றன.

மத்திய அரசின் ரூ.485.38 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட ஷாபூர் காண்டி தடுப்பணை திட்டம் அடுத்த மாதம் 31-ம் தேதிக்குள் நிறைவடையும். இதன் மூலம் ரவி ஆற்றில் இருந்து பாகிஸ்தானுக்கு வீணாக செல்லும் நீர் தடுத்து நிறுத்தப்படும்.

இந்த தடுப்பணை திட்டம் மூலம் ஜம்மு காஷ்மீரின் கதுவா மற்றும் சம்பா மாவட்டங்களில் 32,173 ஹெக்டேர் நிலங்களுக்கும், பஞ்சாப்பில் 5,000 ஹெக்டேர் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இவ்வாறு ஜாவேத் அகமது ராணா கூறினார்.

# 'ஸ்னாப்டீல்' நிறுவனத்துக்கு ரூ.5 லட்சம் அபராதம்: சிசிபிஏ நடவடிக்கை

**புதுடெல்லி, பிப்.18:**

இந்திய தரச் சான்று ஆணைய (பிஐஎஸ்) நடைமுறைகளுக்கு உட்படாத வகையிலும், பொம்மைகள் தரக் கட்டுப்பாட்டு உத்தரவு 2020-க்கு உட்படாத வகையிலும் பொம்மைகளை விற்பனை செய்ததற்காக 'ஸ்னாப்டீல்' இணைய வணிக நிறுவனத்துக்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) ரூ. 5 லட்சம் அபராதம் விதித்துள்ளது.

'இந்த விவகாரம் தொடர்பாக தானாக முன்வந்து மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இந்த அபராதத்துக்கான இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது' என்று சிசிபிஏ தலைமை ஆணையர் நிதி கரே தெரிவித்தார்.

இந்த அபராதம் மட்டுமன்றி, வரும் காலங்களில் இதுபோன்ற பிஐஎஸ் தரத்துக்கு உட்படாத பொம்மைகளை தனது இணைய வணிக பக்கத்தில் பட்டியலிடவோ, விளம்பரப்படுத்தவோ மாட்டோம் என்பதை 'ஸ்னாப்டீல்' உறுதி செய்யவேண்டும். மேலும், நுகர்வோரின் குறைகளுக்கு உரிய தீர்வு காணும் வகையில் இணைய வணிக நிறுவனத்தை தொடர்பு கொள்வதற்கான தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் குறைதீர்ப்பு அலுவலரின் விவரங்களை நன்கு தெரியக்கூடிய வகையில் 'ஸ்னாப்டீல்' காட்சிப்படுத்த வேண்டும் என்றும் தனது உத்தரவில் சிசிபிஏ குறிப்பிட்டுள்ளது.

சிசிபிஏ மேற்கொண்ட விசாரணையில், உற்பத்தியாளர் பெயர், முகவரி மற்றும் பிஐஎஸ் தரச் சான்று எண் உள்ளிட்ட விவரங்கள் எதுவும் இல்லாத பொம்மைகளை 'ஸ்டாலியன் டிரேடிங் நிறுவனம்' மற்றும் 'த்ரிஃப்ட்கார்ட்' என்ற இரு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்து 'ஸ்னாப்டீல்' நிறுவனம் ரூ. 41,032 வருவாயை ஈட்டியது கண்டறியப்பட்டது. அதனடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நோட்டீஸ்: இந்த விவகாரம் தொடர்பாக அமேசான், ஃபிளிப்கார்ட், ஸ்டாலியன் டிரேடிங் நிறுவனம், எலக்ட்ரானிக்ஸ் பஜார் ஸ்டோர் உள்ளிட்ட இணைய வணிக நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு சிசிபிஏ நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

# ஜேஇஇ முதல்நிலை தேர்வு முடிவுகள் வெளியீடு

**புதுடெல்லி, பிப்.18:**

ஜேஇஇ முதல்நிலை தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை (என்டிஏ) திங்கள்கிழமை வெளியிட்டது.

ஐஐடி, என்ஐடி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பொறியியல் படிப்புகளில் சேர ஜேஇஇ தேர்வை என்டிஏ நடத்துகிறது.

ஆண்டுக்கு இருமுறை ஜேஇஇ முதல்நிலை தேர்வு நடத்தப்படும் நிலையில், கடந்த ஜனவரியில் நடைபெற்ற அந்தத் தேர்வு முடிவுகளை என்டிஏ திங்கள்கிழமை வெளியிட்டது.

13.04 லட்சத்துக்கும் அதிகமான தேர்வர்கள் இந்தத் தேர்வை எழுதிய நிலையில், ராஜஸ்தானைச் சேர்ந்த 3 பேர், ஆந்திரத்தைச் சேர்ந்த இருவர், தில்லி, பிகார், ஒடிஸா, ஹரியாணா, மகாராஷ்டிரம், குஜராத், தெலங்கானாவைச் சேர்ந்த தலா ஒருவர் என மொத்தம் 12 பேர் 100 மதிப்பெண்களை முழுமையாகப் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரும் ஆண் தேர்வர்களாவர்.

# வணிகச் செய்திகள்

## ஓப்போ கே14எக்ஸ் 5ஜி ஸ்மார்ட்போன் இந்தியாவில் அறிமுகம்!

**புதுடெல்லி, பிப்.18:**

ஓப்போ நிறுவனத்தின் புதிய ஸ்மார்ட்போனான, கே14எக்ஸ் இந்தியாவில் அறிமுகமாகியுள்ளது.

இணையதள விற்பனை நிறுவனமான ஃபிளிப்கார்ட்டில் மட்டும் முதல்கட்ட விற்பனை தொடங்கியுள்ளது. இதுமட்டுமின்றி ஓப்போ நிறுவனத்தின் கிளைகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. இருவகை நினைவக அம்சங்களில் அறிமுகமாகியுள்ளன.

4GB உள்நினைவகம் ( RAM) 128GB நினைவகம் (RAM) உடைய ஸ்மார்ட்போன் விலை ரூ. 14,999.

6GB உள்நினைவகம் 128GB நினைவகம் உடைய ஸ்மார்ட்போன் விலை ரூ. 16,999.

இணையதளத்தில் வாங்கும்போது சில கடன் அட்டைகளுக்கு ரூ. 1,500 வரை சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. வட்டி இல்லா தவணை முறைகளும் உண்டு. 6.75 அங்குல எல்.இ.டி. திரை உடையது.

திரை சுமூகமாக இயங்கும் வகையில் 120HZ திறன் கொடுக்கப்பட்டுள்ளது. திரை பிரகாசமாக இருக்க 1,125 திறன் வழங்கப்பட்டுள்ளது. பின்புறம் 50MP முதன்மை கேமராவும் 2MP இரண்டாவது சென்சாரும் கொடுக்கப்பட்டுள்ளது. முன்பக்கம் 5MP செல்ஃபி கேமரா கொடுக்கப்பட்டுள்ளது.

செய்யறிவுதொழில்நுட்பத்தின் மூலம் புகைப்படங்களின் புன்புலங்களை எடிட் செய்ய முடியும்.

# இந்தியாவின் எண்மப் புரட்சியில் மோடி, சந்திரபாபு நாயுடு முக்கியப் பங்கு - பில் கேட்ஸ் பாராட்டு

**அமராவதி, பிப்.18:**

'எண்மப் புரட்சியை நோக்கி இந்தியா செல்கிறது, இதற்கு மோடி, சந்திரபாபு நாயுடு முக்கிய பங்கு வகிக்கின்றனர்' என்று உலகின் முன்னணி நிறுவனமான மைக்ரோசாப்டின் நிறுவனர் பில் கேட்ஸ் பாராட்டியுள்ளார்.

ஆந்திர மாநிலம், அமராவதியில் அந்த மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு, அமைச்சர்கள், அதிகாரிகளுடன் அவர் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினர். இதையடுத்து ஆந்திர அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:



ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் தொலைநோக்குப் பார்வையை பில் கேட்ஸ் வெகுவாக பாராட்டினார். உலகத் தலைவர்களை விட சந்திரபாபு நாயுடு மிகவும் ஆழமாக சிந்திக்கிறார் என்றும், டிஜிட்டல் புரட்சியை நோக்கி இந்தியா செல்கிறது. இந்த புரட்சியில் பிரதமர் மோடி, முதல்வர் சந்திரபாபு நாயுடு முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வளர்ந்த நாடுகளில் கூட விவசாயத்தில் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் ஆந்திராவில் நவீன கருவிகள் பயன்படுத்தப்படுகிறது என்று பில் கேட்ஸ் பாராட்டினார் என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆந்திர தலைமைச் செயலகத்தில் சந்திரபாபு நாயுடுவுடன், பில் கேட்ஸ் ஆலோசனை நடத்தினார். இதையடுத்து எக்ஸ் பக்கத்தில் சந்திரபாபு நாயுடு வெளியிட்ட பதிவில், 'பில் கேட்ஸை மீண்டும் வரவேற்கிறேன். ஆந்திரம் பில் கேட்ஸை வரவேற்கிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பில் கேட்ஸுடனான சந்திப்பின்போது அவரிடம், ஆந்திரத்தில் சுகாதாரத் துறையில் கேட்ஸ் அறக்கட்டளை செய்து வரும் பணியை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என சந்திரபாபு நாயுடு கேட்டுக் கொண்டார்.

# அதிமுக சின்னம் ஒதுக்கீடு விவகாரம்: தேர்தல் ஆணையம் ஒரு வாரத்தில் பதிலளிக்க டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, பிப்.18:

அஇஅதிமுகவின் பொதுச் செயலாளராக இருந்த ஜெயலலிதா மறைவிற்கு பிறகு அந்தக் கட்சியின் இரட்டை இலை சின்னம் தொடர்பாக முடிவெடுக்கக்கோரி தில்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்தில் சூரியமூர்த்தி, புகழேந்தி உள்ளிட்டோர் முன்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

ஆனால், அந்த மனுக்கள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்காத நிலையில், சூரியமூர்த்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் கடந்த 2017-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரை தேர்தல் ஆணையத்தில் அளித்த புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே தன்னுடைய மனு மீது விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவும் தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதே கோரிக்கையுடன் அஇஅதிமுக ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவர் என கூறிக்கொள்ளும் புகழேந்தி தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். சூரியமூர்த்தியின் மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் இந்த விவகாரத்தில் முடிவெடுக்க தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டதுடன் அனைத்து தரப்பு கருத்துகளையும் தேர்தல் ஆணையம் கேட்க வேண்டும் எனவும் தெரிவித்தது.

இதேபோல புகழேந்தியின் மனுவை விசாரித்த தில்லி உயர்நீதிமன்றம் அஇஅதிமுக விவகாரத்தில் கொடுக்கப்பட்ட மனு மீது உரிய முடிவு எடுக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு கடந்த 2024-ஆம் ஆண்டு உத்தரவிட்டது

இந்நிலையில், நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் அஇஅதிமுக தொடர்பாக வழங்கப்பட்ட மனுக்கள் மீது தேர்தல் ஆணையம் உரிய முடிவெடுக்காமல் நிலுவையில் வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டி புகழேந்தி தில்லி உயர்நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு (2025) நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தார்

இந்த வழக்கில் பதிலளிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் தில்லி உயர்நீதிமன்றத்தில் நிகழாண்டு ஜனவரி 22-ஆம் தேதி பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்தது. அந்தப் பிரமாணப்பத்திரத்தில் தேர்தல் ஆணையம் கூறியுள்ளதாவது: அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அஇஅதிமுக) கட்சிச் சின்னம் ஒதுக்கீடு, கட்சிப் பெயர் மற்றும் கட்சிக் கொடியைப் பயன்படுத்துவது தொடர்பான விஷயத்தில் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிமுகவின் கட்சிச் சின்னம் ஒதுக்கீடு, தலைமைத்துவம் மற்றும் அது தொடர்பான பிற விஷயங்கள் குறித்து, பல்வேறு நபர்களிடமிருந்து பெறப்பட்ட பல மனுக்கள் ஏற்கெனவே தேர்தல் ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளன. அனைத்து நடைமுறைகளும் கூட்டாகவும் முழுமையான முறையிலும் ஆராயப்படுகின்றன என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தேர்தல் ஆணையத்துக்கு எதிராக புகழேந்தி தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதி சச்சின் தத்தா முன்பு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. இதில் நீதிபதி சச்சின் தத்தா தேர்தல் ஆணைய வழக்குரைஞர் சுருச்சி சூரியிடம், 'உங்களிடம் கொடுக்கப்பட்ட மனு மீது இன்னும் முடிவெடுக்கவில்லையா?. 15 மார்ச் 2024 அன்று நீதிமன்றத்தால் உத்தரவு பிறபிக்கப்பட்டது. இப்போது இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. எவ்வளவு காலத்தில் முடிவெடுக்க முடியும் என்பது குறித்து விளக்கம் பெற்று தெரிவியுங்கள் என உத்தரவிட்டு பிப்ரவரி 23-ஆம் தேதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

## ரயில் வரும்போது தண்டவாளத்தில் படுத்து உறங்கிய நபர்

புனே, பிப்.18:

மராட்டியத்தின் மும்பை நகரில் பரபரப்பாக செயல்படும் சிவாஜி ரயில் நிலையத்தில் தண்டவாளம் ஒன்றில் நபர் ஒருவர் வெள்ளை நிறத்தில் விரிப்பை விரித்து குறுக்கே படுத்து கிடந்துள்ளார்.

அந்த சமயத்தில் ரெயில் ஒன்று நிலையத்திற்கு அந்த வழியே வந்துள்ளது. இதனை பார்த்த நடைமேடையில் இருந்தவர்கள் கூச்சல் போட்டு அவரை எழுந்து போக கூறி சத்தம் போட்டனர். ஆனால், அந்த நபர் எதனையும் கண்டு கொள்ளவில்லை. அவர், குடிபோதையில் இருந்ததுபோன்று கிடந்துள்ளார். ரெயில் அருகே வந்ததும் அதிக சத்தத்துடன் ஒலியெழுப்பியது. அப்போதும் அந்த நபர் எழுந்திருக்கவில்லை. எனினும், ரெயில் மெதுவாக வந்து சற்று தூரத்திலேயே நின்று விட்டது. இதனால் பெரிய துர்சம்பவம் எதுவும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

## கர்நாடகா: 5-க்கும் மேற்பட்ட கோர்ட்டுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

மங்களூரு, பிப்.18:

கர்நாடகாவில் உள்ள மங்களூரு மாவட்ட கோர்ட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டு உள்ளது. இதுபற்றி நகர காவல் ஆணையாளர் சுதீர் குமார் ரெட்டி கூறும்போது, வெடிகுண்டு மிரட்டல் செய்தி கிடைத்ததும் உடனடியாக மங்களூரு மாவட்ட கோர்ட்டு வளாகத்திற்கு போலீசார் சென்றனர்.

கோர்ட்டில் இருந்து வழக்கறிஞர்கள், பணியாளர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. விரிவாக சோதனை செய்ததில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. இதனை தொடர்ந்து, வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என போலீசார் உறுதி செய்தனர். மங்களூரு வடக்கு காவல் நிலையத்தில் இதுதொடர்பாக வழக்கு பதிவாகி உள்ளது. இதேபோன்று, கர்நாடக ஐகோர்ட்டின் தார்வாத் கிளை, தார்வாத் மாவட்ட கோர்ட்டு, மாண்டியா, குடகு, ஹாவேரி உள்ளிட்ட கோர்ட்டுகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது. சோதனைக்கு பின்னர் அது புரளி என தெரிய வந்துள்ளது.

## இந்தியாவில் வாரம் 10 கோடி பயனர்கள்! சாட்ஜிபிடி புதிய சாதனை!!




புதுடெல்லி, பிப்.18:

செய்யறிவு (ஏஐ) நிறுவனமான சாட்ஜிபிடியை பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பிப்ரவரி நிலவரப்படி வாராவாரம் 10 கோடி பயனர்கள் சாட் ஜிபிடியை பயன்படுத்துவதாக அந்நிறுவன தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மன் தெரிவித்துள்ளார். இதன்மூலம் அமெரிக்கா வுக்கு அடுத்தபடியாக சாட்ஜிபிடி பயன்பாட்டுக்கான இரண்டாவது மிகப்பெரிய சந்தையாக இந்தியா மாறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். டில்லியில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சிமாநாடு (பிப். 16) முதல் பிப். 20ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதனையொட்டி சாட்ஜிபிடி தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மன் நாட்டில் சாட்ஜிபிடி பயன்பாடு அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது: அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சாட்ஜிபிடி பயன்பாட்டிற்கான மிகப்பெரிய சந்தையாக இந்தியா மாறியுள்ளது. இந்திய பயனர்கள் அதிகம் பயன்படுத்தும் தளமாக சாட்ஜிபிடி மாறியுள்ளதையே இந்த எண்ணிக்கை காட்டுகிறது. தினசரி வேலைகளுக்கும் சாட்ஜிடிபியை இந்திய பயனர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். உலக அளவில் அதிக எண்ணிக்கை யிலான மாணவர்கள் சாட்ஜிபிடியை பயன்படுத்துவது இந்தியாவில்தான். இந்தியாவில் 10 கோடி பயனர்கள் சாட்ஜிபிடியை பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

## மதம் பிடித்து சுற்றித்திரியும் படையப்பா யானை: வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு

திருவனந்தபுரம், பிப்.18:

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம், மூணாறு, மறையூர் எஸ்டேட் பகுதிகள் மற்றும் சாலையோரங்களில் இரவு, பகல் நேரங்களில் காட்டு யானை ஒன்று கம்பீரமாக சுற்றித்திரியும். இந்த யானைக்கு இப்பகுதி பொதுமக்கள் படையப்பா என்று பெயர் வைத்து அழைக்கின்றனர். இந்தநிலையில் அந்த யானை கடந்த சில நாட்களாக மூணாறு மற்றும் மறையூர் சாலைகளில் செல்லும் வாகனங்களை அடிக்கட மறித்து சேதப்படுத்தி விட்டு செல்கிறது. கடந்த 3 நாட்களில் மட்டும் ஒரு பஸ், கார், ஆட்டோவின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியது. இதையடுத்து வனத்துறை அதிகாரிகள் அந்த படையப்பா யானையை ஆய்வு செய்தபோது அதற்கு மதம்பிடித்து சுற்றித்திரிவது தெரியவந்தது. இதனால் வனத்துறையினர் அந்த யானையை 24 மணி நேரம் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். அந்த யானை எங்கு செல்கிறது. அதன் செயல்பாடுகள் எப்படி உள்ளது என்று பார்த்து வருகின்றனர். இதனால் மூணாறு மற்றும் எஸ்டேட் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மிகவும் எச்ச ரிக்கையாக இருக்க வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# சி.பி.எஸ்.இ. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தொடக்கம்

புதுடெல்லி, பிப்.18:



சி.பி.எஸ்.இ. கல்வி வாரியத்தில் 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் 2 பொதுத்தேர்வுகள் நடத்தப்படுகிறது. இதில் முதலாவது பொதுத்தேர்வு (17-02-2026) தொடங்குகியது. 2-வது பொதுத்தேர்வு மே 15-ந் தேதி முதல் ஜூன் 1-ந் தேதி வரை நடக்கிறது. தங்கள் மதிப்பெண்ணை அதிகரிக்க விரும்புபவர்களுக்காக இரண்டாவது தேர்வு வசதி செய்யப்பட்டு உள்ளது. அதேநேரம் முதலாவது பொதுத்தேர்வை மாணவர்கள் கட்டாயம் எழுத வேண்டும் என சி.பி.எஸ்.இ. கூறியுள்ளது.

நேற்று 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு கணித பாடமும், 21-ந்தேதி ஆங்கிலமும், 25-ந்தேதி அறிவியலும், மார்ச் 2-ம் தேதி இந்தி தேர்வும், மார்ச் 7-ந்தேதி சமூக அறிவியல் பாட தேர்வும் நடைபெறுகிறது. சி.பி.எஸ்.இ., பிளஸ்-2 மாணவர்களுக்கு நேற்று உடற்கல்வி தேர்வு, 20-ந் தேதி இயற்பியல், 28-ந்தேதி வேதியியல், மார்ச் 9-ந்தேதி கணிதம் ஆகிய பாடங்களுக்கு தேர்வுகள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவ மாணவிகள் இத்தேர்வினை எழுதுகிறார்கள்.

இது தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி சன்யம் பரத்வாஜ், "முதலாவது பொதுத்தேர்வு அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயம். இதில் வெற்றி பெறும், தகுதி வாய்ந்த மாணவர்கள் தங்கள் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக அறிவியல், கணிதம், சமூக அறிவியல் மற்றும் மொழிப்பாடம் என ஏதாவது 3 பாடங்களில் 2-வது தேர்வை எழுத அனுமதிக்கப்படு வார்கள்.

முதலாவது பொதுத்தேர்வில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களை எழுதாத மாணவர்கள், 2-வது பொதுத்தேர்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் 'மீண்டும் கட்டாயம்' என்ற பிரிவுக்கு தள்ளப்பட்டு, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் பிரதான (முதலாவது பொதுத்தேர்வு) தேர்வில்தான் பங்கேற்க முடியும்" என்று கூறினார்.

## கர்நாடகாவில் இஸ்ரேலிய பெண் சுற்றுலா பயணி கூட்டு பாலியல் வன்கொடுமை; குற்றவாளிகள் 3 பேருக்கு தூக்கு தண்டனை

பெங்களூரு, பிப்.18:

இஸ்ரேலை சேர்ந்த 27 வயதான இளம்பெண் கடந்த ஆண்டு மார்ச் மாதம் கர்நாடகாவுக்கு சுற்றுலா வந்துள்ளார். அவர் கர்நாடகாவின் விஜயவாடா மாவட்டம் ஹம்பி பகுதியில் உள்ள 29 வயதான இளம்பெண்ணின் வீட்டில் ஹோம்ஸ்டே (HOMESTAY) முறையில் தங்கி இருந்தார்.

இதனிடையே, கடந்த ஆண்டு மார்ச் 6ம் தேதி மாலை இஸ்ரேலிய சுற்றுலா, பயணி தான் தங்கி இருந்த ஹோம்ஸ்டே வீட்டின் உரிமையாளர் மற்றும் அமெரிக்கா, ஒடிசா, மராட்டியம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 3 ஆண் சுற்றுலா பயணிகள் என மொத்தம் 5 பேரும் ஹம்பி அருகே உள்ள துங்காத்ரா கால்வாய் அருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பைக்கில் வந்த மலேஷ், சாய், சரணப்பா ஆகிய 3 பேர் கால்வாய் அருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்த 5 பேரிடமும் பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். ஆனால், சுற்றுலா பயணிகள் பணம் கொடுக்காததால் ஆத்திரமடைந்த 3 பேரும் ஆண் சுற்றுலா பயணிகள் 3 பேரையும் கால்வாய்க்குள் தள்ளிவிட்டனர்.

பின்னர், இஸ்ரேலிய பெண் சுற்றுலா பயணியையும், ஹோம்ஸ்டே வீட்டின் உரிமையாளரான இளம்பெண்ணையும் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

கால்வாய்க்குள் தள்ளிவிடப்பட்ட ஆண் சுற்றுலா பயணிகளில் ஒடிசாவை சேர்ந்த சுற்றுலா பயணி தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

எஞ்சிய 2 ஆண் சுற்றுலா பயணிகள் கால்வாயில் நீந்தி கரைசேர்ந்தனர்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் ஆண் சுற்றுலா பயணியை கால்வாய்க்குள் தள்ளி கொலை செய்துவிட்டு இஸ்ரேலிய பெண் சுற்றுலா பயணி உள்பட 2 பெண்களை கூட்டு பாலியல் வன்கொஉமை செய்து தலைமறைவான மலேஷ், சாய், சரணப்பா ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 3 பேரும் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் குற்றவாளிகள் மீதான வழக்கு கொப்பள் மாவட்டம் கங்காவதி நகர முதன்மை கூடுதல் அமர்வு கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு கோர்ட்டில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இஸ்ரேலிய சுற்றுலா பயணி உள்பட 2 பேரை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தது, கால்வாயில் தள்ளி ஆண் சுற்றுலா பயணியை கொலை செய்தது உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் மலேஷ், சாய், சரணப்பா ஆகிய 3 குற்றவாளிகள் மீதும் நிரூபணம் ஆனது.

இதையடுத்து குற்றவாளிகள் 3 பேருக்கும் தூக்குதண்டனை விதித்து கோர்ட்டு உத்தர விட்டது.

## திடீரென முடங்கிய எக்ஸ் வலைதளம்; பயனாளர்கள் அவதி

டெல்லி, பிப்.18:

உலகின் மிகவும் பிரபலமான சமூகவலைதளமாக எக்ஸ் வலைதளம் (டுவிட்டர்) திகழ்கிறது. இந்த சமூக வலைதளத்தை உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இன்று மாலை எக்ஸ் வலைதளம் திடீரென முடங்கியுள்ளது. மாலை 7 மணி முதல் வலைதளம் முடங்கியுள்ளது. பயனாளர்களின் எக்ஸ் வலைதள முகப்பு பக்கம், பிற எக்ஸ் வலைதள கணக்குகளை காண்பிக்கும் பக்கம் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளும் முடங்கியுள்ளது. இதனால் பயனாளர்கள் கடும் அவதியடைந்துள்ளனர்.

## மும்பை கவுன்சிலர்களில் 24% பேர் மீது குற்ற வழக்குகள்

புதுடெல்லி, பிப்.18:

பிரிஹன் மும்பை மாநகராட்சி தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. இதில் பாஜக, சிவசேனா (ஷிண்டே) கூட்டணி வெற்றி பெற்றது. பாஜகவைச் சேர்ந்த ரிது தாவ்டே மேயராக சமீபத்தில் பொறுப்பேற்றார்.

இந்நிலையில், ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ஏடிஆர்), இந்த தேர்தலில் வெற்றி பெற்ற 227 வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை ஆய்வு செய்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: "மும்பை மாநகராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற கவுன்சிலர்களில் 54 பேர் (24%) தங்கள் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக தங்கள் மனுவில் தெரிவித்துள்ளனர். 29 பேர் (13%) தீவிர குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக கூறியுள்ளனர்.

180 பேர் (79%) தங்களுக்கு ரூ.1 கோடிக்கு மேல் சொத்து இருப்பதாக தெரிவித்துள்ளனர். அதேநேரம் வெற்றி பெற்றவர்களின் சராசரி சொத்து மதிப்பு ரூ.7.18 கோடியாக உள்ளது. கவுன்சிலர்களில் 60% பேர் பெண்கள். 50% பேர் குறைந்தபட்சம் இளநிலை பட்டப்படிப்பை முடித்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சூரிய மின்சக்தி திட்டத்தில் குஜராத், மகாராஷ்டிரா உ.பி. முன்னிலை

புதுடெல்லி, பிப்.18:

பிரதமரின் சூர்ய இல்லம்: இலவச மின்சார திட்டத்தை மத்திய அரசு கடந்த 2024-ம் ஆண்டு பிப்ரவரி 13-ம் தேதி அறிமுகம் செய்தது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் வீடுகளின் கூரைகளில் சூரியசக்தித் தகடுகளை அமைப்பதன் மூலம் 300 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்குவதாகும்.

ரூ.75,021 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம், மார்ச் 2027-க்குள் ஒரு கோடி வீடுகளில் சோலார் அமைப்புகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மத்திய அரசு ஒரு வீட்டுக்கு ரூ.78,000 வரை ஒருமுறை நிதியுதவி வழங்குகிறது, இந்த திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில் நாடு முழுவதும் சுமார் 8,691 மெகாவாட் திறன் கொண்ட 23 லட்சத்துக்கும் அதிகமான ரூஃப்டாப் சோலார் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்காக அரசு ரூ.16,932.4 கோடி மானியம் வழங்கி உள்ளது. இந்த திட்டத்தை பயன்படுத்திக் கொண்டதில் குஜராத், மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. குஜராத் 5.6 லட்சத்துடன் முதலிடத்திலும், மகாராஷ்டிரா (4.5 லட்சம்) 2-ம் இடத்திலும் உத்தரபிரதேசம் (3.7 லட்சம்) 3-ம் இடத்திலும் உள்ளன.

# தொழில் நிறுவனம் என்ற வார்த்தைக்கு வரையறை: உச்சநீதிமன்றத்தில் 9 நீதிபதிகள் அமர்வு விசாரணை

புதுடெல்லி, பிப்.18:



தொழில் நிறுவனம் என்ற வார்த்தைக்கு வரையறை செய்வது தொடர்பான சர்ச்சைக்குரிய விவகாரம் குறித்து உச்சநீதிமன்றத்தில் மார்ச் 17-ஆம் தேதி முதல் 9 நீதிபதிகள் அமர்வு விசாரணை நடத்தவுள்ளது.

இதுதொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜயமால்ய பாக்சி, விபுல் எம் பஞ்சோலி ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்பு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறுகையில், 'இந்த விவகாரம் குறித்து மார்ச் 17, 18-ஆம் தேதி 9 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரணை நடத்தும். ஆதலால் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டோர எழுத்துபூர்வமாக தங்களது கருத்துகளையோ அல்லது கூடுதல் கருத்துகளையோ உச்சநீதிமன்றத்தில் பிப்ரவரி 28-ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ தாக்கல் செய்யலாம்' என்றனர்.

மேலும், தொழிற்சாலைகள் பிரச்னைகள் சட்டத்தின்கீழ், சமூகநல நடவடிக்கைகள் அல்லது அரசுத்துறை திட்டங்கள் தொழில் நிறுவன செயல்பாடுகளுக்குள் வருமா என்று ஆய்வு செய்யப்படும் என நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

பின்னணி: தொழில் நிறுவனம் என்ற வார்த்தை வரையறைக்குள் எவையெல்லாம் வரும் என்பது தொடர்பான வழக்கில் கடந்த 1978, 1996, 2001 ஆகிய ஆண்டுகளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 1978-இல் தீர்ப்பு வழங்கிய 7 நீதிபதிகள் அமர்வும், 1996-இல் தீர்ப்பு வழங்கிய 3 நீதிபதிகள் அமர்வும், சமூக வனத் துறையும் இந்த வரையறைக்குள் வரும் எனக் கூறியது. ஆனால், 2001-ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய 2 நீதிபதிகள் அமர்வு, இந்த வரையறைக்குள் சமூக வனத் துறை வராது எனத் தெரிவித்தது. இதனால் இந்த விவகாரம் 5 நீதிபதிகளை கொண்ட உச்சநீதிமன்ற அமர்வுக்கு மாற்றப்பட்டது. இதை விசாரித்த 5 நீதிபதிகள் அமர்வு கடந்த 2005-ஆம் ஆண்டு மே மாதம், வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றியது.

பிறகு அப்போதைய தலைமை நீதிபதி டி.எஸ். தாக்குர் தலைமையிலான 7 நீதிபதிகள் அமர்வு 2017-ஆம் ஆண்டில் வெளியிட்ட உத்தரவில், 9 நீதிபதிகளை கொண்ட அமர்வு விசாரிக்கும் எனத் தெரிவித்தது. அதன்பிறகு இந்த விவகாரம் உச்சநீதிமன்றத்தில் நீண்ட நாள்களாக நிலுவையில் இருந்தது. தற்போதைய தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு விசாரணை தொடங்கும் தேதியை அறிவித்துள்ளது.

# வங்கதேச பிரதமராகப் பதவியேற்றார் தாரிக் ரஹ்மான்!

**டாக்கா, பிப்.18:**



*வங்கதேச நாட்டின் புதிய பிரதமராக தாரிக் ரஹ்மான் செவ்வாய்க்கிழமை (பிப். 17) பதவியேற்றுக் கொண்டார்.*

*வங்கதேசத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில், மொத்தமுள்ள 297 இடங்களில் 209-ல் இடங்களில் மறைந்த முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது.*

*இதனைத் தொடர்ந்து, வங்கதேச தேசியவாத கட்சியின் நாடாளுமன்றத் தலைவராக தாரிக் ரஹ்மான் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் செவ்வாய்க்கிழமை காலை தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*இதையடுத்து, தாரிக் ரஹ்மான் தலைமையிலான 25 அமைச்சர்கள் மற்றும் 24 இணையமைச்சர்கள் கொண்ட அமைச்சரவைக் குழு அறிவிக்கப்பட்டது.*

*இந்த நிலையில், நாடாளுமன்றக் கட்டடமான ஜதிய சங்கசத் பவனில் இன்று மாலை நடைபெற்ற விழாவில் தாரிக் ரஹ்மான் வங்கதேசத்தின் புதிய பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். அந்நாட்டின் அதிபர் முகமது சகாபுதீன் தாரிக் ரஹ்மானுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.*

*மேலும், தாரிக் ரஹ்மானின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா சார்பில் மக்களவை அவைத் தலைவர் ஓம் பிர்லா கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.*

*இத்துடன், அவாமி லீக் கட்சியின் ஷேக் ஹசீனா மற்றும் பிஎன்பி கட்சியின் கலீதா ஜியா ஆகியோர் மட்டுமே பிரதமராகப் பதவி வகித்து வந்த நிலையில், 35 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக வங்கதேசத்துக்கு ஆண் ஒருவர் பிரதமராகப் பதவியேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.*

## பாலஸ்தீன நிலங்களை ஆக்கிரமிக்க இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல்

**காசா, பிப்.18:**

மேற்குக்கரையின்பெரும்பகுதிகளைஆக்கிரமிப்பதற்கான திட்டத்திற்கு இஸ்ரேல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பாலஸ்தீனர்கள் வசிக்கும் நிலம் அவர்களுக்குரியது என ஆதாரம் சமர்ப்பிக்கவில்லை என்றால் அந்த இடத்தில் இருந்து அவர்களை வெளியேற்றும் வகையில் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட முன்மொழிவு அமலாகியுள்ளது. பாலஸ்தீனர்கள் தங்கள் நில உரிமையை நிரூபிப்பதற்கான நிபந்தனைகள் கடினமாக்கப்பட்டுள்ள நிலையில் இது ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்களை மீண்டும் சொந்த நிலத்தில் இருந்து வெளியேற்ற வழி வகுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லெபனான் எல்லையில் இஸ்ரேல் குண்டு வீச்சு

லெபனான்-சிரிய எல்லையில் சென்று கொண்டிருந்த ஒரு கார் மீது இஸ்ரேல் ராணுவம் டிரோன் குண்டு வீசி நான்கு பேரை படுகொலை செய்துள்ளது. பாலஸ்தீனத்தில் செயல் படும் இஸ்லாமிய ஜிஹாத் என்ற ஆயுத குழுவை சேர்ந்தவர்கள் அந்த காரில் பயணித்ததாகவும் எனவே இந்தத் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது. லெபனான் மற்றும் பாலஸ்தீனத்தில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டாலும் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறது. எனினும் ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்பினரை அல்லது இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பினரை தாக்குவது இதுவே முதல் முறையாகும்.

## ஈரான் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேலுக்கு டிரம்ப் ஆதரவு

ஈரான் அணுசக்தி திட்டம் தொடர்பான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை ஜெனிவாவில் நடை பெற உள்ளது. இந்த சூழலில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான அணுசக்தி பேச்சுவார்த்தை கள் தோல்வியடைந்தால், ஈரானின் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களைத் தான் ஆதரிப்பேன் என டிரம்ப் தெரிவித்துள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 2025 டிசம்பர் மாதம் புளோரிடாவில் உள்ள மார்-ஏ-லாகோ (MAR-A-LAGO) இல்லத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவைச் சந்தித்த போதே டிரம்ப் இந்தத் தகவலைத் தெரிவித்ததா கவும் கூறப்பட்டுள்ளது.

## தொழிலாளர் விரோத சட்டங்கள் அர்ஜெண்டினாவில் பொது வேலைநிறுத்தம்

தொழிலாளர் நலன்களை காவு கொடுக் கும் புதிய தொழிலாளர் சட்டங்க ளுக்கு அர்ஜெண்டினா நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. அந்நாட்டின் கீழ்சபையிலும் இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் பெற ஜனாதிபதி மிலெய் தீவிரமாக முயற்சி செய்து வருகிறார். இதனை எதிர்த்து நாடு தழுவிய அளவில் பொது வேலைநிறுத்தம் செய்ய தொழிற்சங்கங்கள் தயாராகி வருகின்றன. மருத்துவ விடுப்புகளின் போது தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைப் பது உள்ளிட்ட தொழிலாளர் விரோத நடவடிக்கை கள் புதிய சட்டத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கனடா, பிரிட்டன் பயணிகளுக்கு விசா இன்றி அனுமதி-சீனா




பிப்ரவரி 17 கனடா, பிரிட்டன் நாட்டுப் பயணிகளு க்கு விசா இல்லா நுழைவு அனுமதியை சீனா வழங்கியுள்ளது. இதன் மூலம் கனடா மற்றும் பிரிட்டன் நாடுகளின் சாதாரண பாஸ்போர்ட் வைத்தி ருப்பவர்கள் வணிகம், சுற்றுலா, குடும்பம், நண்பர்க ளைச் சந்திப்பது போன்ற நோக்கங்களுக்காக விசா இன்றி சீனா சென்று 30 நாட்கள் வரை அங்கு தங்கலாம். இந்தச் சலுகை 2026 டிசம்பர் 31 வரை அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு இரு நாட்டு மக்கள் தொடர்பை வலுப்படுத்தும் என கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் அனிதா ஆனந்த் வரவேற்றுள்ளார்.

# பாகிஸ்தானில் ஒரே நாளில் தொடர் பயங்கரவாதத் தாக்குதல்கள்! 11 வீரர்கள் உள்பட 14 பேர் கொலை!

**இஸ்லாமாபாத், பிப்.18:**



*பாகிஸ்தானில், ஒரே நாளில் நடைபெற்ற வெவ்வேறு குண்டுவெடிப்பு மற்றும் ஒரு துப்பாக்கிச் சூடு தாக்குதல்களில் 11 பாதுகாப்புப் படை வீரர்கள் உள்பட 14 பேர் கொல்லப்பட்டனர்.*

*கைபர் பக்துன்குவா மாகாணத்தின் பஜாவூர் மாவட்டத்தில், கடந்த திங்கள்கிழமை (பிப். 16) மாலை வெடிகுண்டுகள் நிரப்பிய வாகனத்தை ஓட்டிவந்த பயங்கரவாதி ஒருவர் அதனை அங்குள்ள மதக்கல்லூரியில் வெடிக்கச் செய்துள்ளார்.*

*இந்தத் தாக்குதலில், அங்கிருந்த 9 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதாகவும், 10 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, பன்னு நகரத்தின் மிர்யான் காவல் நிலையத்தில் நடைபெற்ற பயங்கரவாதிகளின் மற்றொரு வெடிகுண்டு தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டதுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.*

*இதேபோல், ஷாங்கலா மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் இருதரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளது. இதில், 3 பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில், கொல்லப்பட்ட பயங்கரவாதிகள் மூவரும் சீன நாட்டினருக்கு எதிராக நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*முன்னதாக, இஸ்லாமாபாத் நகரத்தில் ஐஎஸ் பயங்கரவாதிகள் நடத்திய மிகப் பெரிய வெடிகுண்டு தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டதுடன், 169 பேர் படுகாயமடைந்தது குறிப்பிடத்தக்கது.*

# சூடானில் கொடூரம்: 6,000-க்கும் அதிகமானோர் படுகொலை

**டார்பூர், பிப்.18:**



சூடானின் டார்பூர் பிராந்தியத்தில் 2025 அக்டோபர் இறுதியில், அந்த நாட்டு துணை ராணுவம் நடத்திய கொடூரமான வன்முறை களின் போது மூன்று நாட்களில் 6,000-க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்ட தாக ஐக்கிய நாடுகள் அவை தெரிவித்துள் ளது.

சூடானில் அந்நாட்டு ராணுவமும், துணை ராணுவத்துக்கு இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. டார்பூர் மாகாணத்தின் தலை நகரான எல்ஃபாஷரை 2025 அக்டோபர் 26 அன்று துணை ராணுவமும் அதற்கு ஆதர வாக போரிட்டு வரும் ஜஞ்சாவீட் (JANJAWEED) என்ற அரபுப் படைகளும் இணைந்து கைப்பற்றின. அதன் பிறகு நகருக்குள் புகுந்து வெறியாட்டத்தில் ஈடுபட்டன. இத்தாக்குதலில், போர்க்குற்றங்கள், மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்களுக்கு இணையான அட்டூழியங்கள் அரங்கேறி யுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் அலுவல கம் (OHCHR) தனது புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

29 பக்கங்கள் கொண்ட ஐ.நாவின் புதிய அறிக்கையில் 2025 அக்டோபர் 25 முதல் 27 வரையிலான காலகட்டத்தில் எல் பாஷர் நகருக்குள் 4,400 பேர் கொல்லப்பட்டனர். தப்பி ஓட முயன்றபோது மேலும் 1,600 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது. கும்பல் கொலைகள், பாலியல் வன்முறை, பணம் பெறுவதற்காக மக்களை கடத்துவது, சித்ரவதை செய்வது, மக்களைக் காணாமல் போகச் செய்தல் (கிட்டத்தட்ட தடையமின்றி கொல்வது) போன்ற பல கொடூரங்கள் நடந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உண்மையான உயிரிழப்புகளின் எண்ணிக்கை இதைவிடப் பல மடங்கு அதிகமாக இருக்கக்கூடும் என்றும் அவ் வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது. சூடான் ராணுவத்திற்கு எகிப்து மற்றும் சவூதி அரேபியாவும் துணை ராணுவத்திற்கு ஐக்கிய அரபு அமீரகமும் (UAE) மறைமுக ஆதரவளிப்பதாகக் கூறப்படுவது குறிப்பிடத் தக்கது.

## எப்ஸ்டீனுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை! டிரம்ப்



**வாஷிங்டன், பிப்.18:**

ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் திங்கள்கிழமை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சிறுமிகளை கடத்திப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீன், சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில், அந்த வழக்கு தொடர்பான ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜெஃப்ரி எப்ஸ்டீன் பிறருக்கும் தனக்குத்தானேவும் அனுப்பிய மின்னஞ்சல்கள், காவல்துறை விசாரணையில் பாதிக்கப்பட்டவர்கள் அளித்த வாக்குமூலங்கள் அடங்கிய 35 லட்சம் பக்கங்கள் கொண்ட எப்ஸ்டீன் கோப்புகளை அமெரிக்க நீதித்துறை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மீது பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகளை எப்ஸ்டீன் முன்வைத்துள்ளார். மேலும், பாதிக்கப்பட்டவர்கள் என சிலர் அளித்த வாக்குமூலமும் எப்ஸ்டீன் கோப்புகளில் இடம்பெற்றிருந்தன. இந்த விவகாரத்தில் அமெரிக்க அதிபர் டிரம்புக்கு பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், அவருக்கு எதிராக போராட்டங்களும் நடத்தப்பட்டன.

இந்த நிலையில், ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் செய்தியாளர்களுடன் டிரம்ப் பேசுகையில், “எப்ஸ்டீன் விவகாரத்தின் நான் மறைக்க எதுவும் இல்லை. நான் விடுவிக்கப்பட்டேன். ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. எப்ஸ்டீன் வழக்கில் நான் முற்றிலும் விடுவிக்கப்பட்டேன். உண்மையில், சிலருடன் சேர்ந்து நான் அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கக் கூடாது என்று ஜெஃப்ரி எப்ஸ்டீன் போராடினார்” எனத் தெரிவித்துள்ளார்.

## ஹாக்கி விளையாட்டின் போது துப்பாக்கி சூடு: 3 பேர் பலியான சோகம்

**வாஷிங்டன், பிப்.18:**

அமெரிக்காவின் ரோட் தீவு மாகாணத்தில் இளைஞர்கள் சிலர் ஹாக்கி விளையாடி கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த நபர் திடீரென சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினார் இதில் துப்பாக்கி சூடு நடத்திய நபர் உட்பட 3 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் காயமடைந்த 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சொந்த பிரச்சினை காரணமாக நடந்து இருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கிறார்கள். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் மற்றும் உயிரிழந்தவர்களின் விவரங்களை வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர். அமெரிக்காவில் அதிகரித்து வரும் துப்பாக்கி கலாசாரம் மக்களை கவலை அடைய வைத்துள்ளது.

# ‘தவளை விஷம்’ பயன்படுத்தி அலெக்ஸி நவால்னி கொலை? ஐரோப்பிய நாடுகள் குற்றச்சாட்டு; ரஷியா மறுப்பு

**லண்டன், பிப்.18:**



மறைந்த ரஷிய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி, தென் அமெரிக்காவில் காணப்படும் ஒருவகை நச்சுத்தவளைகளின் விஷத்தைப் பயன்படுத்தி கொலை செய்யப்பட்டதாக பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட 5 ஐரோப்பிய நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

கடந்த 2024-ஆம் ஆண்டு, ஆர்க்டிக் பகுதியில் உள்ள சிறைச்சாலையில் நவால்னி மர்மமான முறையில் உயிரிழந்தார். அவரது உடலில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை நவீன ஆய்வுக்கு உட்படுத்தியதில், இந்தத் தவளை விஷம் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஐரோப்பிய நாடுகள் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளன. ரஷியாவின் இயற்கையான சூழலில் எங்கும் கிடைக்காத இந்த நச்சுப் பொருள் அவரது உடலில் இருந்தது, இது ஒரு திட்டமிட்ட படுகொலை என்பதை நிரூபிப்பதாக அந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளை ரஷியா முற்றிலுமாக மறுத்துள்ளது. இது குறித்து ரஷிய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா கூறியதாவது:

மேற்கத்திய நாடுகள் தங்கள் நாட்டுப் பிரச்னைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப, கற்பனையான பொய்களைப் பரப்புகின்றன. இந்த ஆதாரமற்ற புகார்களை நாங்கள் ஏற்கமாட்டோம் என்றார்.

மனைவியின் கருத்து: நவால்னியின் இரண்டாம் ஆண்டுநினைவுநாளில் இந்தத் தகவல் வெளியாகியுள்ள நிலையில், அவரது மனைவி யுலியா நவால்னயா ஐரோப்பிய நாடுகளின் ஆய்வுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

தனது கணவர் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார் என்பது தற்போது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு ரஷிய அதிபர் புதின் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## சுவிட்சர்லாந்தில் திடீர் பனிச்சரிவு; 80 பயணிகளுடன் சென்ற ரெயில் தடம் புரண்டது

**ஜெனீவா, பிப்.18:**

சுவிட்சர்லாந்து நாட்டின் தெற்கே ஸ்டாக்கிரேபென் பகுதியில் கோப்பன்ஸ்டெயின் என்ற கிராமத்தில் 80 பயணிகளுடன் ரெயில் ஒன்று சென்று கொண்டு இருந்தது.

அப்போது அந்த பகுதியில் திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதனால், மலை போன்ற பனிக்கட்டிகள் உடைந்து, உருண்டு சரிந்தன. அவை பயணிகள் ரெயில் மீது விழுந்து, தாக்கியதில் ரெயிலின் சில பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் பலர் சிக்கி கொண்டு வெளியே வர முடியாமல் தவித்தனர். இதுதொடர்பான தகவல் அறிந்து சம்பவ பகுதிக்கு ஆம்புலன்சுகளும், மீட்பு ஹெலிகாப்டர்களும் விரைந்து சென்று மீட்பு பணியை மேற்கொண்டன. இதுவரை 30 பயணிகள் மீட்கப்பட்டு உள்ளனர்.

ரெயில் தடம் புரண்ட விபத்தில் சிக்கி 5 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனினும், பலத்த பாதிப்பு இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது.